
2

கலை-இலக்கிய முத்திங்கள் இதழ்

ஆக.செப்.ஒக் '93



# மஹாகவி

"சிறுநண்டு மணல்மீது
படம் ஒன்றுகீறும்
சிலவேளை அலைவந்து
அதைக் கொண்டுபோகும்."


- மகாகவி -

பழைய மரபான செய்யுள்களால் புராணங்களும்,, துதிப் பாடல்களும் பற்பல, இலங்கையில் இயற்றப்பட்டன. இந்த நூற்றாண்டில் மக்களின் உணர்ச்சிக்கு ஏற்ற வடிவம் தரும் முறையில் புதிய செய்யுள் வடிவங்களைப் பயன்படுத்திப் பலர் பாட்டுகள் இயற்றி வருகின்றார்கள். மகாகவி என்ற கவிஞர் 'வள்ளி' என்ற தொகுப்பில் பல பாடல்கள் தந்துள்ளார்; ஐந்து அடிகள் உள்ள பாடல்களாக நூறு பாடி, 'குறும்பா' என்ற பெயரால் தந்துள்ளார். அவற்றில் எள்ளல் சுவை (நையாண்டி) மிகுந்துள்ளது. காதலரின் உணர்ச்சிகளை எடுத்துரைக்கும் பாட்டுகள் பல உள்ளன. புதிய முயற்சி என்று கூறத்தக்க பாட்டுகள் இயற்றுவதில் ஆர்வம் கொண்ட அவர், கவிதை, நாடகங்களும் படைத்துத் தந்திருக்கின்றார். அவருடைய நையாண்டிச் சுவைக்கு எடுத்துக் காட்டாக ஒன்று கூறலாம். இந்தியாவிலிருந்து இலங்கை செல்ல விரும்புவோருக்கு விசா கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதற்குக் காரணம் ஒன்றைக் கற்பனையாகக் கூறுகின்றார் மகாகவி. என்ன காரணம்? தமிழில் கம்பராமயணம் பாடிய கம்பர் தமிழ் நாட்டார். அந்தக் காவியத்தில் அவர் இராவணனைக் கொடியவனாகக் காட்டியுள்ளார். இராவணன் இலங்கை நாட்டான். இலங்கை நாட்டுத் தலைவனைத் தம் காவியத்தில் கம்பர் கொடுமைப்படுத்தியுள்ளார்; வைதுள்ளார்; ஆகையால் கம்பர் வழியில் வந்த தமிழ்நாட்டுத் தமிழர்களை வரவேற்க இலங்கைக்கு மனம் இல்லையாம்.


கம்பர் காவியத்தைச் செய்தார்
கண்டபடி ராவணனை வைதார்
எம்போல்வார் இன்றெடுக்கும்
இவர்விழவுக்கு இங்குவர
நம்பிக்கையாக விசா எய்தார்.

- டாக்டர் மு. வரதராசன் -

*



Réfugiés du Bangladesh à la saison des pluies, frontière indienne, 1971.



*சொட்டுச் சொட்டாய் தேங்கி மடை உடைத்த வெள்ளமென*

மண் அறிந்தவன். மண்ணின் வகை தெரிந்தவன். பச்சை மண்ணும் சுட்டமண்ணும் ஒட்டாது என்னும் பட்டறிவு கொண்டவன். வனைபவனவன். காலத்தை, காலநாகரிகத்தை அவன் வனைந்த மட்பாண்டங்களே உணர்த்தி நிற்கின்றன. வரலாற்றை உரைக்கின்றன முதுமக்கள் தாழியாக. காலம் இருக்கின்றது, கலயம் இருக்கின்றது, கைவினைஞர்கள் எங்கே? காலத்தேவை அவன். வனைதல்கள் முடிவுறுவதில்லை. மட்கலத் தேவையுந்தான். சுழல்கின்றது அச்சு. மாறுகின்றது வடிவங்கள். அளவை, குழையல்கள் எல்லாமும்தான். ஒன்று போல் மற்றொன்று இருப்பதில்லை. வகைகளும் கூடுகின்றன. கரு, செம்மட்பாண்டமென விரிப்புடனும், கருஞ்செந்நிறக் கலப்புடனும். சிந்தனா குவிமையம் தவறுகையில், தவறச் செய்கையில் அவன் செய்நேர்த்தி குலைகின்றது. கோணல் மாணலாகின்றது. சூழலாலும் வனைதல்கள் சிதைகின்றன. சிதறுகின்றன. அவன் கவலை கொள்வதில்லை. வனைதலை நிறுத்துவதுமில்லை. வனைவதால் வாழ்கின்றான். வாழ்வதால் வனைகின்றான். சுழலும் அச்சில் செய்நேர்த்தி சிறக்கின்றது. இதமும், இதழாழகும் இப்படித்தான்.

**** **** **** **** ****

கனவுகளுடன் அவர்கள் கொலையுண்டழிந்து ஆண்டுகள் பத்து. வயலில், வழியில், அலைகடலில், வதைமுகாமில் இறந்தழிந்தவரின் அளவேது? ஆண்டேது?

கறைதான், கறுப்பு ஜூலைதான், திருப்புப்புள்ளிதான் எண்பத்தி மூன்றாமாண்டு. ஆனால் அஞ்சலிக்கான வெறும் நினைவுகூரல் நிகழ்வல்ல அது இன்று.

மதிப்பீட்டுக்கும், கணக்கெடுப்புக்கும் உட்படுத்தவேண்டிய ஆண்டு. இன்றைய பல்வேறு தோற்றப்பாடுகளின் தொடர்நிகழ்வு கொண்ட பத்தாண்டின் மறுபக்கத்திற்கான தொடக்கப்புள்ளி எண்பத்திமூன்று. இதனை காய்தல் உவத்தலற்ற ஆய்வுக்கு உட்படுத்தினால் தான் இன்னும் ஏழாண்டில் தொடங்க விருக்கும் 21 ம் நூற்றாண்டின் நுழைவில் தன்னும் துயரங்களைந்த புதுத்தோற்றப்பொலிவை நாம் பெறமுடியும்.

83 ம் ஆண்டு.......

1. வரலாற்றில் மக்களின் தருணம் தவறவிடப்பட்டு, தனிமனிதர்களின், வீரர்களின் தருணம் அமைவுகொண்டது.
2. இயக்கமானோர் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச சொந்தத்திட்டங்களையும் இல்லாதொழித்தது.
3. மக்களைச் சார்ந்திருத்தல் என உதிர்த்த 'வாய்ச்சொற்கள்' உலரத்தொடங்கியது.
4. கடவுளர்களின் கைகளில் ஆயுதங்களை கையளித்துவிட்டு அவ்வவ்போது சாதிய அடிமைப்படுத்தலுக்கும், குழுமோதலுக்கும் பயன்படுத்திக் கொண்டும், வணங்கிக் கொண்டும் இருந்த சமூகம் ஆயுதஆடையைக் கொண்டது.
5. களைகளை அகற்றுவதில் தொடங்கிய ஆயுதகனாவின் முனைவு, 83 ம் ஆண்டில் ஆடையாய் ஆயுதங்களை அணிய வாய்த்ததன்பின் நோக்கும் இடந்தோறும் களைகளாகவே தோன்றியது.
6. தலைமை வெற்றிடத்தை முன்னிறுத்தியதுடன், அதிகாரத்தை கையகப்படுத்தும் போட்டியை துரிதப்படுத்தி யாழ்ப்பாணத்தில் இழிவுகளை அம்மணப்படுத்தியது.
7. இடப்பெயர்வை, தாயகம் துறத்தலை முன்னெப்போதும் இல்லாதவகையில் ஊக்குவித்ததுடன், சமூகசீர்குலைவை ஏற்படுத்தியது.
8. இயக்கமானோர் தம் கெட்டித்தனங்களால் தமிழ் சமூக அசைவியக்கத்தை இடியப்பச் சிக்கலுக்குள் தள்ளிவிட்டதுடன், எவ்வகை எதிர்வு கூறலுக்கும் உட்படாத 'மாய உருவகிப்பை' தோற்றுவித்தனர்.

83 ம் ஆண்டின் மிகத்துல்லியமான வரையறுப்புகளாக இவை இல்லாதபோதும் இன்றைய தோற்றப்பாடுகளின் பொதுக்காரணியாக, அடையாளமாக கொள்ளமுடியும். அப்படியானால் 83 ம் ஆண்டு முன்னோக்கியதான, மாறுதலுக்கான. அடையாளங்களை வெளிப்படுத்த வில்லையா? புதிய சிந்தனைகளுக்கு வித்திடவில்லையா எனக் கேட்கக்கூடும். வித்திட்டன. வெளிப்படுத்தின. ஆனால் இன்றைய தோற்றப்பாட்டு சூழலுள் இனங்காட்டமாட்டாமல் தவித்துக் கிடக்கின்றன. அங்கொன்று இங்கொன்றாய் தலைநீட்டுகின்றன. அவையும் தத்துவ வித்தகர்களால் நஞ்சூட்டப்பட்டும், பேனாக்குருடர்களால் கழுத்து திருகப்பட்டும், அகதி நெருப்பில் குளிர் காய்பவர்களால் பொய்யென புறந்தள்ளப்பட்டும், மனிதஉரிமை வேடதாரிகளால் காலின்கீழ் நசுக்கப்பட்டும், சிதைக்கப்படுகின்றன.


# மௌனம் 2

கலை இலக்கிய இதழ்

ஆக.செப்.அக் '93
வள்ளுவர் ஆண்டு 2024

தொகுப்பாளர்:
கி.பி.அரவிந்தன்

இணை தொகுப்பாளர்:
க.முகுந்தன்

கணனி பதிவு:
பொ.இரவிச்சந்திரன்

வடிவமைப்பு:
ஆத்மன் & அநாமிகன்

வெளியீடு:
A.F.T.C.சார்பாக பு.விக்னேஸ்வரன்

- நண்பர்களுக்கு மட்டும் -



MOUNAM
6, Square du Roule
92200 NEUILLY S / SEINE
FRANCE

பத்தாண்டுகளின் பின்னால் காலாற நின்று நிதானிக்க வாய்த்துள்ள எமக்கு சாக்குழியுள்ளிருந்து மீளும் வழிகளை கண்டறிதல் காலக்கடனாகும். கடனேயென புழக்கத்தில் உள்ள சர்வரோக நிவாரணியை நாம் முன்மொழிய முடியாது. நோய்நாடி, நோய்முதல்நாடி, கூட்டுச்சிந்தனையின் திசைநாடி காத்திருக்கின்றது மௌனம்.

**** **** **** **** *****

தமிழ் சிறார்களின் கல்வி, கலாச்சாரம், எதிர்காலம் என்னும் பொருளடக்கங் கொண்ட இருவேறு கருத்தரங்கங்களின் அறிவித்தல்கள் வெளியாகி இருக்கின்றன.

பெர்லினில் (ஜேர்மனி) நடைபெற்ற மாகாநாடானது;

(1) ஐரோப்பிய சிறுபான்மைமக்களின் மொழிகளில் ஒன்றாக தமிழ்மொழியையும் அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்ளல்.
(2) ஐரோப்பியநாடுகளில் வாழும் தமிழ்சிறார்களுக்கு கட்டாயமாக தமிழ்மொழிக்கல்வியை வழங்குமாறு அரசுகளைக் கேட்டுகொள்ளல்.
என்னும் கோரிக்கைகளை முன்வைக்கின்றது.

மெல்பர்னில் (அவுஸ்ரேலியா) நடக்கவுள்ள கருத்தரங்கமானது;

(1) அடுத்த சந்ததியினர்க்கு அர்த்தம் தரக்கூடிய தமிழர் தனித்துவ அம்சங்கள்.
(2) எதிர்கால தலைமுறையினர்க்கு தமிழ் மொழி, வரலாறு சமய, சரித்திரங்கள் புகட்டும் வழிவகைகள்.
என்பவற்றை ஆராய இருக்கின்றது.

இரு கருத்தரங்குகளினதும் கோரிக்கைகளும், ஆய்வுகளும் ஏற்புடைய நியாயங்களாகவும், காலத்தில் அவசியமாகவும் தோன்றினாலும், இவற்றில் எதிர்மறை அர்த்தங்கள் தொக்கி நிற்கின்றன.

1. தாயகத்திற்கு வெளியேயான இவர்களின் வாழ்நிலையை நிரந்தரமாக்குதல் எனக்கொள்ளுதல்.
2. வந்துசேர்ந்துள்ள தேசங்களின் தேசியசிறுபான்மையினராக எம்மை எண்ணுதல்.
3. வளம்படைத்த தேசங்கள் எம்மை 'கட்டி இழுத்து' வந்ததால் மொழி கலாச்சாரத்தை பறிகொடுக்காமல் காத்தல் எனக் கற்பனை கொள்ளல்.
4. அகதிகள், புலம்பெயர்தல், குடியேறுதல், குடியேற்றப்படுதல் என்பவற்றினை திரித்து மயங்குதல்.
5. அடிப்படையில் நாம் யார், எம் நிலை என்ன என்பவற்றை காணாது விடல்.

இவற்றின் அடிப்படைகள் தெளிவுறப்படுத்தும் போதுதான் மேற்குறித்த கருத்தரங்குகளின் கோரிக்கைகள், ஆய்வுகள் அர்த்தமாகும். ஏனெனில் இங்குதான் நாம் வாழ்நிலையை அமைக்க போகின்றோமானால், அதற்காகத்தான் புலம்பெயர்ந்தோமானால் நம் சிறார்கள் பற்றிய கவலைகள் ஏன்? நாம் இந்த சமூகங்களுடன் 'கலத்தலை' துரிதப்படுத்தல்கள்தான் சரியானதாகும். தமிழ், கலாச்சாரம், பேசுதல் அபத்தமாகும்.

நோர்வேயில் எந்தமொழிபேசுபவராயினும் சிறார்களுக்கு தம்தாய் மொழியிலேயே தொடக்க கல்வியை போதிக்கின்றார்கள். அது அந்த நாட்டின் கல்விமுறை. மற்றைய நாடுகளில் அப்படி இல்லை. அதற்காய் அந்நாடுகளை எம் மொழியிலேயே கற்பியுங்கள் எனக்கோருவது அறியாமையாகும்.

நாம் கலாச்சாரமென அடையாளம் காட்டப்போவது எதனை? எமது கலாச்சாரம் எது? எழுத்தில் வரையறுப்பில் ஏதேனும் உண்டா? அல்லது ஏற்கனவே கண்டறிந்து கடைப்பிடிக்கப்படும், பூசைபுனருத்தானங்களை ஆங்கிலத்தில் மொழிந்தும், சாதி கோத்திரங்களை விளம்பரம் செய்து திருமணம் செய்தும், கோத்திரங்களுக்கேற்ப கோயில் கட்டியும், தமிழ் கலாச்சாரம் உள்ளதுதானே. அவையா? தமிழும், கலாச்சாரமும் சிறார்களைச் சார்ந்திருக்கவில்லை. சமூகத்தை, பெற்றோரைச் சார்ந்திருக்கின்றது. தமிழ்பேசும் மக்கள் என்னும் வாழ்நிலை உண்மையை சார்ந்து நிற்கின்றது.

✱ ✱

மேல் கீழ் என்கின்ற வித்தியாசங்களை அடியோடு அகற்றுதலையோ, ஐக்கியத்தை உறுதிப் படுத்துதலையோ விடுதலையையோ, பரிபூரண மேம்பாடுகளையோ இலக்கியத்தினால் பெற்றுவிட முடியுமென்று நான் கருதவில்லை. ஆனால் இவைகளைப் பெற்றுவிடுவதற்கான பேரெழுச்சி நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை புரியும் பங்கினை இலக்கியத்தின் மூலம் கொடுப்பது செய்ய முடியாததொன்றல்ல.

-கேடானியல்-

# நூலக முன்றில் பாரிஸ்

Centre
Georges Pompidou

விரிந்த தரை
கல்பதித்த முன்றில்
நூலக வாயிலில்
கலைக்களஞ்சியம்.

சப்பை மூக்கு
கூர் நாசி
தடித்த சொண்டு
உட்குவிந்தவாய்
சிறுத்த விழிகள்
நீலக்கண்கள்
சிரிப்பின் அலாரிப்பு....

பக்கங்கள் தோறும்
பண்பாட்டு கோலம்.

பால் பேதம்
உறுத்தாத
இணைகள்
முற்றத்தில் முத்தம்.

இரண்டாயிரமாண்டு
தொடங்கும்
பூச்சிய கணத்திற்கு
இறங்கிச்செல்கின்றது
கடிகார எண்கள்
விநாடிகளாய்.

பிரபஞ்ச இயக்கத்தின்
பூச்சிய புள்ளிக்கா
இவர்களின் நகர்வுகள்.

கதம்பமாலையாய்
தொடுக்கப்படவோ
குவிகின்றன பூக்கள்
கலவை வண்ணங்கள்
புற்றீசல்கள்.

சப்த ஒலிகள்
உராய்ந்து, மோதி
ஓங்கி, அமுங்கி
பிணைந்த காற்று.

இதிலென் பாடல்
ஏதேனும் உண்டா?
எந்தப்பாடல்
எந்தன் அலைவின்
அடையாளம் சொல்லும்.

மோதல், குரோதம்
எள்ளல், இகழ்வு
களைந்த பாடல்களில்
சோகப்பகிர்வு.

பிணையப்பட்ட
கட்டுமரமென
இசைநாதத்தில்
மிதக்கின்றது.
மூங்கில் கட்டு
செவ்விந்தியர்பாட்டு.

மூங்கில் பேசப்பேச
தோல் மேளம்
கொட்ட கொட்ட
துயரம்
மூச்சு முட்டுகின்றது.

பாடுபட்ட கிழவா
பாயை விட்டெழும்படா
சுண்ணாம்பு தாறன்
சுடலைக்கு வாடா...
தாளக்கட்டில்
கொட்டும் பறை
ஊரில்
யாரினது சோகம்?

நாரி தொடும்
குழலை
பின்னவிட்டுள்ளான்.
அந்தீஸ் மலையிலிருந்து
இறங்கிவந்த
கலைஞன்.

அவர் சொல்லக் கூடும்
தாயகம் நாம் துறந்தவரில்லை
எம் தேசம்தான்
தொலைந்து போனது....

நான் இதைக் கொள்வேனா
என்பாடலென்று...?

கிட்டார் நரம்புகளில்
விரல்நுனியின்
கட்டறுப்பில்
அதிர்கின்றான்
பொப்மார்லி.

சுருண்ட மயிரை
வாரி நிமிர்த்தி
பயற்றங்காய்
நீள அகலங்களில்
பின்னல் சுருள்கள்
காற்றில் நிமிர்கின்றது.

றேகே இசையில்
வடிகின்றது குருதி.
`பொஃப்பல்லோ சோல்ஜர்'
இழுத்துவரப்பட்டாய்
நீ......

அவர்கள் சொல்லலாம்
நான் சொல்லத் துணிவேனா
என்பாடல் இதுவென்று?

குந்தொன்றில் நிறைபடி
சொற்களை விசிறுகின்றான்
தடித்த உதடுகளால்
ஒரு கறுவல்.

"போய்விடு என்கிறாய்
சரிதான்
நான் வந்தது தப்புத்தான்
மின்னனுத் தொலைபேசி
மின்சார ஊர்தி
மின்னொளியில் நகரம்
கண்வெட்டும்
நேரத்திடை காரியங்கள்
உன்னிடத்திருந்தது
வந்துவிட்டேன்
மன்னித்துக்கொள்
என்னிடத்தே
மின்னொளி, மின்னூர்தி
தொலைபேசி, தொலைக்காட்சி
ஏன்
விஞ்ஞானம் கூட
இருந்ததில்லை
அப்படித்தானே.
பின்னேன்
காட்டு விலங்காண்டி
என்னிடம்
முன்வந்தாய்
எந்தன் கோவணத்தையும்
உருவிவந்தாய்....?"

என்
காதைப்பொத்தி
அறைந்தாற் போலவும்
நூலகத் தொடர்மாடி
சுவர்களை உலுக்கி
கண்ணாடி சட்டங்களில்
முட்டி எதிரொலித்தும்....
இதுவாயிருக்குமா?
எந்தன் பாடுபொருள்.

விளக்குக்கலைந்து
நெருப்பில் அழியும்
விட்டிலா நான்...!

தலைநிமிர்த்த மாட்டாமலும்
தன்னுள் சுருண்டு
உலகம் வெறுத்தும்
போதையராகிய
ஹிப்பிகள் போலவே
விழுந்தும், கிடந்தும்
இசையினில் புரண்டும்
அந்நியமாவனோ நான்....

மாட்டேன், மாட்டேன்
நான் இசைத் தெழுவேன்
உரத்துப் பாடுவேன்
எனக்கொருபாடல்.

கி.பி.அரவிந்தன்
இலைதுளிர்காலம் -_- 1993
பாரிஸ்

# 'அனுமதி'

சிறுகதை

- நாகதிலகன் -

**"அகதி என்று வந்திருக்கீங்க, அப்புறம் ஏன் ஊர் சுத்த அனுமதி கேட்டு தொந்தரவு பண்ணுறீங்க...?" என்றாள் முகத்தை கண்டிப்பாக்கியவாறு...**

காசு சரிவந்திருந்தது. முகாம் மண்டபத்தினுள் இருக்கும் குஞ்சுஅக்கா தருவதாகச் சொல்லியிருந்தாள். வெளிநாட்டில் இருந்து அவவிற்கு-தம்பியாம் காசு அனுப்புகிறதாம். கண்மணி பத்து, ஐந்து வாங்கிறதும் அதை சொன்னபடி கொடுத்துக் கொள்வதாலும், இம்முறை ஐம்பது ரூபா கேட்டபோது குஞ்சுஅக்கா மறுக்காமல் தருவதாக சொல்லியிருந்தாள்.

மாலாவும் நேற்று குழாய் கிணற்றடியில் வைத்து கேட்டபோது, போகும்போது எடுத்து தருவதாகச் சொன்னாள். நீலச்சேலையாம்! சிங்கப்பூராம். ஒருவருக்கும் இரவல் கொடுக்கிறதில்லையாம். "கண்மணி அக்கா நல்லா பழகினதாலதான் தாரன்" என்று சொன்னதை கண்மணி புருசனிடமும் பெருமையாகச் சொல்லியிருந்தாள்.

தங்கச்சியிடமிருந்து வந்த கடிதத்தை இன்னுமொருதரம் பார்க்க வேணும் போல் இருந்தது. உடுப்புப் பெட்டியின் கீழே வைத்து இருந்ததை எடுத்தாள்.

"அன்புள்ள தங்கச்சி,
நாங்க நல்ல சுகம். உங்களது சுகம் எப்படி? மேலும் சென்ற கிழமை வருவதாக எழுதியிருந்தாய். நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். உன்னை மகன் திலீபன்தான் கேட்டு குழப்படி. சிலநேரம் அழுவான். எனக்கு இப்ப வயித்திலையும் ஏழுமாசம் முடியுது. அதனால் நான் வருவது கஸ்டம். அடுத்த கிழதை கட்டாயம் வந்திர வேணும். எதிர்பார்ப்போம்.
அன்புடன் தங்கச்சி- கமலா"

முதலில் கண்மணியின் தங்கச்சி குடும்பம்தான் இயக்கத்திடம் அனுமதி பெற்றுக் கொண்டது. படகும் வசதிப்பட புறப்பட்டும் விட்டது. அதனால், பின்னர் வந்த கண்மணி குடும்பம் சிவகங்கையிலும், தங்கச்சி ஆட்கள் வேலூரிலும் இருக்க வேண்டியதாகி விட்டது.

நாலைந்து மாதமாக கண்மணிக்கு தங்கச்சி குடும்பம் இருக்கும் அகதிமுகாம் தெரியாமலே இருந்தது. இருவாரங்களுக்கு முன்புதான் தங்கச்சியிடம் இருந்து முதல் தொடர்பு கிடைத்தது. இது இரண்டாவது கடிதம் இதற்கு கண்மணி பதில் எழுதவில்லை. போவதற்கு ஒழுங்குகள் செய்து கொண்டிருந்தாள்.

'நாளை அகதிகளுக்கான உதவிப்பணம் கொடுப்பார்கள். காசு எடுத்த உடன் பலகாரம் முறுக்குச் சுடுவதற்கான சாமான்களை சிவகங்கை சந்தையில் வேண்டிக்கொள்ள வேண்டும்'.

'காலுக்கொரு செருப்பு பிரயாணத்திற்கு தேவை போல் இருந்தது. ஐந்து, ஆறுரூபாவிற்கு சந்தையில் குவித்து வைத்திருப்பார்கள். போட்டு பார்த்து வாங்கிக் கொண்டால் சரி'.

'நாளையிரவே பலகாரங்களைச் சுட்டெடுக்க வேண்டும். இரவுச் சாப்பாட்டுக்கு ஏதும் செய்து, பிள்ளைகளுக்கு கொடுத்திற்று நேரத்தோடு தொடங்கினால் முடித்திடலாம். மாலாவும் உதவிக்கு வருவாள்'. இப்படி கண்மணி நினைத்துக் கொண்டாள்.

அடுத்த நாள் அகதி உதவி பணம் கொடுத்தார்கள். சந்தைக்குச் சென்ற கண்மணி பலகாரம் முறுக்கிற்கான சாமான்களை வாங்கினாள். காலுக்கு ஒரு செருப்பையும் போட்டு அளவு பார்த்து வாங்கிக் கொண்டாள்.

அன்று இரவு மாலாவும் உதவி செய்து கொடுத்தாள். எண்ணெய் சட்டியில் பலகாரமும் முறுக்கும் சீறிக் கொண்டு பொரிந்தது. செய்துமுடித்த பலகாரம். முறுக்குகளை பொட்டலம் கட்டினார்கள். பொட்டலங்களை கண்மணி, அடிப்பானையில் வைத்து அதன்மேல் வேறுசில பானைகளால் மூடினாள் பத்திரமாக.

மாலா போவதற்காக எழும்பினாள். "மாலா நாளைக்கு நான் பாஸ் எடுத்திற்று வந்தால் நாளையண்டைக்கு போகவேணும்..." சேலைக்காக ஒரு ஞாபகப்படுத்தல் போல இப்படிச் சொன்னாள்.

குஞ்சுஅக்காவும் சொன்னது போல ஐம்பதுரூபா கொடுத்து இருந்தா. படுக்கைக்கு போகும் முன் காசுகளை எண்ணிவைத்து விட்டு படுக்கவேணும் போல் இருந்தது கண்மணிக்கு. முகாம் மண்டபத்தினுள் ஆரவாரம் இருக்கவில்லை. ஒருசிலர் மட்டும் மெதுவாக கதைப்பது கேட்டது. அந்த விடி மின்விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

அரிசிப் பானையில் இருந்த, குஞ்சுஅக்கா கொடுத்த ஐம்பதுரூபாவோடு அகதி உதவிப்பணக்காசில் சாமான்கள் வேண்டியது போக மிகுதியையும் எடுத்து கணக்குப்

பார்த்தாள். நூற்றிஐம்பது ரூபா மிகுதி இருந்தது. வேலூருக்கு போகவர நூறுரூபாவிற்கு குறையாமல் தேவை. மிகுதி அடுத்தமாத அகதிப்பணம் கொடுக்கும்வரை செலவிற்கு சரியாக இருந்தது.

'நாளைக்கு விடிய எப்படியும் அனுமதி எடுத்துவிட்டால், வேலூர் பயணம் சந்தோஷம் தான்'.

'வேலூர் பெரியபஸ் நிலையத்தில் இறங்கி நாலாவது நம்பர் பஸ்சில் ஏறி அகதிமுகாம் என்று சொல்லி ரிக்கற் எடுத்து அதில் ஆட்களிடம் கேட்டால் காட்டி இறக்கி விடுவார்களாம்....' இப்படி பிரயாணவழியை நினைத்துக் கொண்டு இருந்தாள் கண்மணி.

அன்றைய இரவு நித்திரை கூட சரியாக வரவில்லை கண்மணி நேரத்தோடு எழுந்து கொண்டாள். காலைவேலைகளை விரைவாக செய்து முடித்தாள். நேரம் எட்டு மணியாகியிருந்தது சோற்றுக் கரையலை(1) பிள்ளைகள், புருசன் அவளுமாக எல்லோரும் பங்கிட்டுக் குடித்தனர்.

ஒரு மணித்தியாத்திற்கு எழுபத்தைந்து காசு வாடகைச் சைக்கிள் ஒன்றை புருசன்காரன் எடுத்துக் கொண்டான். "தம்பியை கவனமாக பார்த்துக் கொள்" மூத்தவளிடம் சொன்னாள் கண்மணி.

தாலுகா அலுவலக முற்றத்தில் சைக்கிளை நிற்பாட்டினார்கள். அலுவலக விறாந்தையில் ஏறும் போது உள்ளே வேலையில் இருப்பவர்களின் சத்தம் கேட்டது. கண்மணியும், புருசனும் வாசலால் எட்டிப் பார்த்தனர். உள்ளே உடனடியாகச் சென்றுவிட கால்கள் தயங்கின.

அவ்வேளை "ஏனுங்க நீங்க சிலோன்காரங்கதானே...." இப்படி கேட்டுக் கொண்டு அருகில் வந்தார் ஒருவர், அங்கு பியோனாக வேலைபார்க்கும் அந்த ஆள். தாங்கள் அனுமதி எடுக்க வந்த விடயத்தை அவரிடம் கூறினார்கள், கண்மணியும் புருசனும்.

"ஆமா சரிங்க இந்த அம்மாதான் அகதிமக்களின் பிரச்சனையைப் பார்க்க இப்ப புதிசாக வந்திருக்காங்க- அந்த அம்மாகிட்டே போய் பேசுங்க...." என்று அலுவலக உள்மண்டப சுவர் ஓரமாக இருந்து ஏதோ எழுதிக் கொண்டிருக்கும் ஒரு இளம்பெண்ணை காட்டினார் அந்த ஆள். இருவரும் அந்தப்பெண் இருக்கும் மேசையடிக்குச் சென்றனர். அந்தப்பெண் நிமிர்ந்து கொள்ளவில்லை. "கொப்பி ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

அதில் தேடியதை வேறு ஒரு தாளில் குறித்துக் கொண்டாள். மீண்டும் ஒரு கொப்பியை எடுத்து தேடினாள், குறித்தாள். எல்லாம் சரிபோலும்! அப்போதுதான் நிமிர்ந்தாள்.

"என்னம்மா நீங்க சிலோனா...., என்ன வேணும்...." தான் வேலூர் முகாமிற்கு தங்கச்சி ஆட்களை பார்க்கப் போக அனுமதி எடுக்க வந்தததைச் சொன்னாள் கண்மணி. "சரிமா நான் இப்பதான் வந்திருக்கேன். கொஞ்சம் நேரம் கழிச்சு வர்றீங்களா..." பதிலை எதிர் பார்க்காமலே எழுந்து அமாரியில் ஏதோ தேடினாள்.

வெளியில் கிடந்த வாங்கு ஒன்றில் வந்து அமர்ந்து கொண்டனர் கண்மணியும், புருசனும். கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் ஆகியிருக்கும். அதன் பின்னர்தான் அழைத்தாள் அந்த அதிகாரி. "சரிமா, நீங்க மனுமெழுதி வைத்திருக்கீங்களா?..." கண்மணி இல்லை என தலையாட்டினாள். "கண்டிப்பாக மனு வேணும் அப்போதான் அனுமதிதர முடியும்" எனச் சொன்னாள்.

"எங்களிற்கு விபரம் தெரியாதம்மா! முன்பு எல்லாம் அடையாள அட்டையைக் காட்டிக் கேட்டா எழுதிக் கொடுப்பார்களே" என்று ஒரே குரலாக சொல்லிவிட்டுப் பரிதாபமாகப் பார்த்தனர் கண்மணியும், புருசனும். "உங்களால பெரிய தொந்தரவாய் போய்ச்சுங்க. இங்கே பாருங்க இப்ப அப்படியில்லைங்க. அகதி என்று வந்திருக்கீங்க. அப்புறம் ஏன் ஊர்சுத்த அனுமதி கேட்டு தொந்தரவு பண்றீங்க...?" என்றாள் முகத்தைக் கண்டிப்பாக்கியவாறு. "நாளைக்கு அல்லது இன்று மாலையே எழுதிக்கொண்டு வந்தால்தான் என்னால் அனுமதி தர முடியும்" என்று சொல்லிக் கொண்டு வலதுகையை வாசல் கதவின் பக்கம் நீட்டினாள்.

ஒருவாறு முகாமிற்கு திரும்ப மத்தியானத்திற்கு மேலாகி விட்டது. முதலில் மாலாதான் கண்டாள். அனுமதிபற்றி விசாரித்தாள். கண்மணி விபரத்தைச் சொன்னா. தனக்கு மனு ஒன்றெழுதித்தரும்படி கேட்டாள்.

மதியச்சாப்பாட்டு முடிந்தபின் மனு எழுதித் தருவதற்காக வந்தாள். நாளைக்கு பயணம் ஆரம்பம் எனவும் இரண்டு நாட்கள் வேலூர்முகாமில் தங்குவது என்றும் எழுதச் சொன்னாள் கண்மணி.

கண்மணி புருசனிடம் "உடனடியாக தாசில்தார் அலுவலகம் மீண்டும் போவோமா" என்று கேட்டாள். அவன் கரும்பு வெட்டும் வேலையிருப்பதால் அதைப்பற்றி விசாரித்

## இருள்

ஒளி மதுவை உண்டு
காகங்கள் கரையும்
புலராத பொழுதில்
மௌனம் கலைந்தது

அமைதியைக் குலைக்கவோ
பௌர்ணமி வந்தது
மேகக் குப்பைக்குள்
இரவுச் சூரியனைத் தூக்கி எறி
கருப்பு வெளிச்சத்தின்
கதவுகளைத் திற

இருள்
இருள் வெளியில்
இருளைக் கிழித்துப் படரும்
ஒளி
அகத்தில்.

-கனிவண்ணன்-
தமிழ்நாடு

துவர தானும் மாணிக்கமும் போக விருப்பதாக சொல்லி மறுத்து விட்டான்.

தாசில்தார் அலுவலகம் பழக்கப் பட்ட இடம்போலாகி இருந்தது கண்மணிக்கு. கடும் வெயிலில் வந்தால் முகமெல்லாம் வியர்த்து வழிந்தது. சேலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டு, வாசலில் நின்று எட்டிப் பார்த்தாள். அந்தப்பெண் அதிகாரி ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். மெதுவாக அவளது மேசையடிக்குச் சென்றாள் கண்மணி.

"என்னம்மா மனு எழுதிற்றியா? கொடு பார்ப்போம்..." கண்மணி மனுவைக் கொடுத்தாள். படித்து முடித்த அந்தப்பெண் ஒரு பொலிஸ்காரனைப் போல் விசாரித்தாள். அனுமதித் துண்டு நிரப்பப் பட்டது. கண்மணியும் கையொப்ப மிட்டாள்.

அந்தப்பெண் அதிகாரி பியோனை அழைத்து "இந்தாப்பா இதில தாசில்தார் கிட்டே கையொப்பம் வாங்கிக்கிட்டு இந்த அம்மாகிட்டே கொடுத்திடு....". தாசில்தார் ஐயா கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்ட ஒழுங்குகளைக் கவனிக்கச் சென்றிருக்கிறாரம்மா- அவரை இன்று பார்க்க முடியாதே" என்றான் பியோன். "அப்ப ஒன்றும் பண்ண முடியாதும்மா. நீ போயிற்று அப்புறமா வா...."

கண்மணி விடவில்லை ஒருதரம் உதவி தாசில்தாரிடம் அனுமதி கொடுப்பதுபற்றி கேட்டுப் பார்த்தாள். அவர் தனக்கு அனுமதி கொடுக்கும் அதிகாரமில்லையெனக் கையை விரித்து விட்டார்.

அலைச்சலினாள் களைத்தவளாக கண்மணி முகாம் வந்து சேர்ந்தாள். மாலா கண்மணியைக் கண்டதும் கேட்டாள் "என்னக்கா பாஸ் எடுத்தாச்சா?..."
நடந்த விபரத்தை கண்மணி கூறினாள்.

"போனமாதம் முகாமில் இருக்கும் சுந்தரத்தாரும் அனுமதி எடுக்க அலைந்து விட்டு, பொலிஸ்கார ஏட்டு ஐயாவிடம் சொல்லிவிட்டுத் தானே போனவர். நீங்களும் அப்படிச் செய்யலாமே" என மாலா சொன்ன ஆலோசனை கண்மணிக்கு கொஞ்சம் இதமாக இருந்தது. "யாழ்ப்பாணத்தில் பொடியன்களிட்டை பாஸ்சிற்கு திரிந்தாற் போலத்தான் கிடக்கு" என்று பெருமூச்சை வெளிப்படுத்தினாள் கண்மணி-

> "யாழ்ப்பாணத்திலே பொடியங்களிட்ட பாஸிற்கு திரிந்தாற் போலத்தான் கிடக்கு" என்று பெருமூச்சை வெளிப் படுத்தினாள் கண்மணி.

அன்றிரவு கண்மணிக்கு நீண்ட நேரமாகியும் நித்திரை வரவில்லை. புரண்டு புரண்டு அசைந்து படுத்தாள். முகாமில் 'விடிமின் விளக்கு' எரிந்து கொண்டிருந்தது. வலுக்கட்டாயமாக இமைகளைத்திறக்கும் போதெல்லாம் ஒளி கண்ணைக் குத்தியது. துப்பட்டியை சரி செய்து மூடிக் கொண்டாள்.

00000 00000 00000

வேலூர் முகாமின் முன் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். கண்மணியின் கண்கள் திலீபனை தேடியது. அந்த முகாமின் முன்னால் நிற்கும் ஒருவரிடம் விசாரிக்க அவர் வீட்டைக் காட்டுகின்றார். திலீபன் தங்கச்சியின் அருகில் நின்று விளையாடிக் கொண்டிருந்தான். கண்மணி அருகில் சென்றதும் தங்கச்சி கண்டு எழுந்தாள்.

"டே திலீபா பெரியம்மாடா..." என்று அவள் சொல்லவும் துள்ளிக்குதித்து கண்மணியின் கால்களை கட்டிப் பிடித்தான். மழலையாகப் 'பெரியம்மா' என்றான். கண்மணி தூக்கி அணைத்தாள். கன்னங்களில் முத்தமிட்டாள். தான் கொண்டு வந்திருந்த பலகாரப் பொட்டலத்தை கொத்து அவனை இறக்கிவிட்டாள்.

துப்பட்டி விலகிகிடக்க விடிமின் விளக்கின் ஒளி கண்ணை குத்தியது. குழாய் கிணற்றடியில் நீர் இறைக்கும் சத்தம் விடிந்து கொண்டு இருப்பதை சொல்லியது. 'தங்கச்சி குடும்பத்திற்கு என்ன பிரச்சனையோ?' கனவு பற்றிய பயம் ஒன்று மனதில் ஓடியது.

பானைகளில் தண்ணீரைப்பிடித்து வைக்கும் போது தரைவெளிக்கத் தொடங்கியது. முகம் கழுவி, தேனீர் போட்டு குடித்து பிள்ளைகளையும் எழுப்பும்போது நன்றாக விடிந்து விட்டது.

கண்மணி முகாமின் வாசல்படியில் நின்று பொலிஸ்காரர் தங்கும் கட்டிடத்தைப் பார்த்தாள். ஏட்டு ஐயா அப்போதான் எழுந்து பல்துலக்கிறார். 'இன்னமொரு அரை மணித்தியாலத்தில் போய்க் கேட்கலாம்' என நினைத்து கொண்டாள்.

"கண்மணியக்கா...." மாலாவின் குரல் கேட்டு திரும்பினாள். மாலா சேலையோடு அருகில் வந்திருந்தாள்.

"நான் சிவகங்கைக்கு சாமான் வாங்க போறேன்- வருவதற்கு தாமதமானாலும் ஆகலாம்- கண்மணி, நீ பாஸ் எடுத்துவிட்டால், என்னைத்தேடி அலையாதே- சேலையை இப்போதே தந்துவிட்டு போறேன்".

நீலச்சேலை- அதில் ரோசாப்பூக்கள் குஞ்சுக் குஞ்சாக இருந்தது. அழகு மொத்தமாகத் தெரிந்தது. கண்மணிக்கு ஆசையாக இருந்தது.

"ஏட்டு ஐயாவிடம் அனுமதி கேட்கத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்" என்றாள் மாலாவிடம். மாலா அவசரஅவசரமாகக் கிளம்பினாள்.

சிறிது நேரம் சென்றதும் கண்மணி பொலிஸ்காரர் தங்கும் கட்டிடவாசலை நெருங்கிக் கொண்டிருந்த போது ஏட்டு ஐயாவிற்கு ஏதோ புரிந்திருக்க வேண்டும்.

"என்னம்மா உங்களுக்குள்ளாற சண்டை போட்டுட்டீங்களா?..." கண்மணி சிரித்தவாறு மறுத்துக் கொண்டு, "நான் வேலூர் முகாம் போவதற்கு அனுமதி கேட்டு வந்திருக்கேன் ஐயா!" என்று மிகவும் பணிவாகச் சொன்னாள். தாசில்தார் அலுவலகத்திற்கு அனுமதி எடுக்க திரிந்து கிடைக்காத விபரத்தையும் சொன்னாள்.

பொறுமையாக கேட்டுக் கொண்ட ஏட்டு, "அதெல்லாம் முடியாதும்மா". நாங்க உங்களது பாதுகாப்பு மட்டும் தான் பொறுப்பு- மற்றப் பிரச்சனைக்கெல்லாம் தாசில் தார்தான் பொறுப்பும்மா..." எனச் சட்டென்று மறுத்துக் கொண்டார்.

"நான் அதிகநாள் தங்கப் போவதில்லை ஐயா! இரண்டு நாட்கள் மட்டம்தான் ஐயா! மிகவும் ஆசையாக பலகாரம் செய்து கட்டிவைத் திருக்கேன் ஐயா- நீங்க தான் கருணை காட்டணமுங்க..." அவளை அறியாமலே கண்களிலிருந்து நீர் வழிந்துவிட்டது.

கண்மணியின் கலங்கிய கண்கள் ஏட்டு ஐயாவை, அந்த ஆளின் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைக்காக ஏக்கத்தோடு பார்த்தன.


"காலங்காத்தாலே வந்திருந்து தொந்தரவு பண்ணாதீங்கம்மா. அதெல்லாம் என்னாலே முடியாது....." என்றவாறு ஏட்டு எழுந்து சென்றார்.

▼

(1) கஞ்சி போன்ற ஆகாரம் பச்சை மிளகாயும், வெங்காயமும் சேர்த்திருப்பார்கள்.

## — பரதனின் பக்கம் —





X விபரணம் கிடையாது





மனித நாகரிகம் என்பது இலக்கிய, ஓவிய, சினிமா, புகைப்படக் கலை என்று எதையும் தவிர்க்காமல் வளர்ச்சியடைந்து வருவது கண்கூடு.

புகைப்படக்கலை என்பது ஆரம்பத்தில் அழகியலில் மையப்பட்டிருந்தாலும் தேவைகளின் நிமிர்த்தம் சமூக யதார்த்தங்களை உள்ளதுபடியே காட்டத் தொடங்கி- தனக்கென்ற தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது.

இன்றைய இருபதாம் நூற்றாண்டின் கடைசியில் விஞ்ஞான வளர்ச்சியின் அபரிதமும், தொடர்பு சாதனங்களின் அகண்டவிரிதலும் உலக நிகழ்வுகளை எம்முன் நிலைநிறுத்தி விடுகின்றன. ஆனால் எல்லாமே உண்மையாக அமைந்து விடுவதில்லை. விஞ்ஞான செயற்கை மூலாம் போடப்பட்டவையாகவும், தன்நல பிரச்சார வடிவங்களாகவும் பல அமைந்துவிடுகின்றன.

இதையும் மீறி உண்மையை நிலைநாட்ட பலதனிமனிதர்கள், குழுக்கள், அமைப்புகள் செய்யும் தியாக உழைப்பு மிகவும் பெறுமதி வாய்ந்தது. இப்படியான புகைப்படங்களைத் தொகுத்து ஒரு கண்காட்சி 1988 ம் ஆண்டு பாரிசிலுள்ள புகழ்பெற்ற 'ஜோர்ஜ் பொம்பித்தோ நூலகத்தில்' இடம்பெற்றது.

அதில் இடம்பெற்ற சிலபடங்கள் மீளவும் பதிவாகின்றன-





Breton dress: but there are only 250,000 native speakers

# வழக்கொழிந்த மொழிகள் வழமைக்குத்திரும்புகின்றன

*பிரான்சின் புறவன்ஸ் (PROVANCE) பிரதேசத்தில் உள்ள ஓர் பாடசாலையின் ஓர் ஆசிரியரும் 8 வயது நிரம்பிய மாணவர்களும் சேர்ந்து பிரான்சின் 400 வருட சரித்திரத்திற்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பிரெஞ்சு மொழியைப் பயில்வதற்கு பதிலாக தங்கள் தாய்மொழியாகிய PROVANCAL என்னும் மொழியை கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இம்மொழியே TROUBADOURS என்னும் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களினால் முதன் முதலில் ஐரோப்பா முழுவதும் 10 ம், 11ம் நூற்றாண்டுகளில் பரவியிருந்த மொழியாகும்.*

*ஆம் என்று பிரெஞ்சுமொழியில் "OUI" என்று எழுதுவதற்குப் பதிலாக அவர்கள் 'OC' என்று எழுதுகின்றார்கள்.*

*பிரான்சின் சாதனையாளராக கருதப்படும் மன்னன் LOUIS XIV தொடக்கம் நெப்போலியன், சாள்ஸ் து கோல் ஆகியோர்களால் சாத்தியமாக்கப்பட்ட இணைப்பு முயற்சியை தகர்ப்பதற்கு இந்த பயிற்சி முறையே போதுமானதாக இருக்கும். இருந்தும் PYRENEES மலையடிவாரத்தில் இயங்கும் பிரதேச வானொலி நிலையம் சிறுவர் நிகழ்ச்சிகளை BASQUE என்னும் மொழியில் நடத்தத் தொடங்கியுள்ளது. BRETAGNE இல் வசிக்கும் மக்கள் நாடகங்களையும், அகராதிகளையும் BRETON (ஓர் CELTIC மொழி) மொழியில் தயாரிக்க தொடங்கியுள்ளார்கள்.*

*நான்கு நூற்றாண்டுகளாக பாரிசை மையப்படுத்தியிருந்த அரசாங்கங்கள் எல்லாம் பிரதேச மொழிகளை பின்தங்கிய மொழிகள் எனவும் நாகரீகமற்றவை எனக் கூறி பெறுமதியற்ற மொழிகளாக்கி பிரெஞ்சு மொழியை மிகவும் தகுதியான மொழி எனக்கூறி நாடுமுழுவதிலும் நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டன.*

*மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் பிரெஞ்சு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் இருந்தன. இவற்றில் 8 முழுமையான மொழியமைப்பையும், 12 க்கு மேற்பட்டவை தனியே பேச்சு வழக்கு மொழியாகவும் இருந்தன, சில பிரதேசங்களில் இருந்த இம்மொழிக் கூறுகள் பலவற்றை அந்நாடுகள் தேசியஇணைப்பு என்ற ரீதியில் திட்டமிட்டமுறையில் ஒழித்துக்கட்டி விட்டன.*

*ஆனால் ஆங்கிலமொழியுடன் இணைகின்ற ஐரோப்பாவும் நாடுகளின், எல்லைகளை இல்லாமல் செய்துவிடும் என்பதனால் பிரெஞ்சு அரசாங்கம், பல தேசியத்தன்மைகள் நிறைந்த பிரதேசமொழிகளை ஊக்குவிக்கவும், வாழ்வு கொடுக்கவும் முனைந்துள்ளது. இம் மொழிகளினால் தங்கள் தேசிய அடையாளத்திற்கு விளையும் ஊறுகளைவிட ஆங்கிலமும் இணையும் ஐரோப்பாவும் கூடுதல் கெடுதலை ஏற்படுத்திவிடும் என்ற பயத்தின் காரணமாகவே, இப் பிரதேச மொழிகள் உறுதியாக வளம்பெற வகை செய்ய வேண்டியநிலையிலுள்ளது.*

*இணையும் புதிய கூட்டமைப்பு ஆட்சிமுறையிலான பெரிய ஐரோப்பாவினால் தங்கள் பாரம்பரிய கலாச்சாரங்கள் அழிவுக்குள்ளாக நேரிடும் என்ற பயத்தின் காரணமாக எல்லா மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தங்களிடமுள்ள எல்லா சிறுபான்மை மொழிகளுக்கும் புதுவாழ்வு கொடுப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த தொடங்கிவிட்டன.*

*'மக்கள் தாங்களாகவே உணர்ந்து தங்கள் மொழிகளை பாதுகாக்க தொடங்கியுள்ளார்கள்.' என்று கூறுகின்றார்கள். DUBLIN ஐ தலைமையகமாக கொண்டு இயங்கும் ஐரோப்பிய அலுவலகத்தின் உதவி இயக்குனர் DIARM-AID BREATHNACH என்பவர். இவர் மேலும் கூறுகையில் 'இப்போது பல மக்கள் தங்கள் பிரதேசங்களின் இயற்கையையும், கலாச்சாரங்களையும் காப்பாற்ற தலைப்பட்டுள்ளதை எம்மால் காணமுடிகின்றது, தங்களை சந்தோஷப்படுத்தும் ஐரோப்பாவின் பலபகுதிகளை தாங்கள் இழந்து கொண்டிருப்பதை உணரத் தொடங்கியுள்ளார்கள்.*

*ஜனவரிமாதத்தில் பெரியஎதிர்பார்ப்புகளுடன் தயாரிக்கப்பட்ட திட்டமொன்று வெளியாகியுள்ளது. அதில் பிரெஞ்சு அரசாங்கம் தனது மாநிலங்களில் உள்ள பாடசாலைகளுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் (பிரதேச மொழிவழக்குகள் உள்ள மாநிலங்கள்) புதிய பிரெஞ்சுமொழியும், பிரதேசமொழியும் இணைந்து இருமொழிப்பாடத்திட்டங்களை உருவாக்குமாறு '10 வருடங்களுக்கு முன்பு தன்னால் பிரதேசங்களுக்கு அளித்த உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில்' உத்தரவிட்*

டுள்ளது. அத்துடன், பிராந்தியமொழிகளை பிரசுரங்கள், நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், சினிமா போன்றவற் கூடாக வளர்ப்பதற்கு உதவிசெய்யும் வகையில் ஓர் அமைப்பினை உருவாக்குமாறும் உள்ளூராட்சி அமைப்புக்களை பணித்துள்ளது.

பலநாடுகளைத் தன்னெல்லைகளாக கொண்டிருக்கும் ஓர்நாடு, தன்னுடைய அழிவுக்குள்ளான சிறுபான்மை மொழிகளை காப்பாற்றுவதற்கு பலகுறிப்பிடத்தக்க திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இந்த புதிய ஆர்வம் பிரான்சுக்கு மாத்திரமல்ல வேறுநாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

1982 ம் ஆண்டு மேற்கு ஐரோப்பிய மொழிகளுக்கான அலுவலகம் ஒன்று ஐரோப்பிய சமூக அமைப்பு நாடுகளினால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்திற்கான நிதித்தேவை மிகவும் உயர்வாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அதன் வரவுசெலவு திட்டத்தில் இவ் வலுவலகத்திற்கென 42 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படுகின்றது. இவ்வலுவலகம் இந்நிதியினை அயர்லாந்தின் GAELIC மொழி அபிவிருத்திக்காக கணணிதிட்டமிடல் தட்டுக்களை தயாரிப்பதற்கும் (Computer Software) வட இத்தாலியில் FRIULIAN மொழிவகுப்புக்களை நடத்துவதற்கும் நெதர்லாந்தின் FRISIAN மொழி தகவல்நிலையங்களுக்கு உதவி செய்வதற்கும் பயன்படுத்துகின்றது.

12 அங்கத்துவநாடுகளைக் கொண்ட ஐரோப்பிய சமூகம் தாங்கள் இப்போது ஓர் புதிய வடிவத்தை பெற்றுவிட்டதாக கருதத் தொடங்கியதோடு புதிய அங்கத்தவர்களை தம்மோடு இணைத்துக் கொள்ளவும் தயாராகிவருவதனால் பிரதேசவாதமும், தனித்துவ அடையாளமும் அடிமட்டத்தில் இருந்து இயக்கமாக உருப்பெற வாய்ப்புள்ளது.

26 நாடுகளைக் கொண்ட ஐரோப்பாகண்ட அமைப்பின் 11 நாடுகள் தமக்கிடையே மனித உரிமைகள், ஜனநாயகம் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கடந்த நவம்பர்மாதம் கைச்சாத்திட்டுள்ளன. அத்தோடு இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் இவர்கள் ஒவ்வொரு இனமக்களினதும் மொழிகளை பாடசாலைகளினூடாகவும், பொதுவாழ்க்கை முறையினூடாகவும் ஊக்கப்படுத்தப்பட போகின்றன. ஆனால் இவ்வொப்பந்தம் ஆபிரிக்கர்களாலும், அராபியர்களாலும் ஐரோப்பாவிற்கு கொண்டுவரப்பட்ட மொழிக்கூறுகளுக்கு பயன்படுத்தப்பட மாட்டாது.

பிரான்சும், பிரித்தானியாவும் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துவிட்டன. இவ்வொப்பந்தம் பிரதேச மொழிகளை உள்ளூராட்சி மொழியாக ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டுள்ளதை இவர்கள் விரும்பாமையே (எதிர்ப்பதே) காரணமாகும்.

பொதுவான ஐரோப்பிய கலாச்சாரம் என்ற யோசனையை பல வருடங்களுக்கு முன்பே கைவிட்டு விட்டோம் என்று இந்த ஒப்நதத்தை வரைந்த அங்கத்தவர்களில் ஒருவரான FERNANDO ALBANESE என்பவர் கூறுகின்றார். மேலும் மக்கள், தங்களுக்கிடையேயான இந்த வேறுபாடுகள் தங்கள் செல்வங்களின் ஓர் பகுதியென கருதுகின்றனர். எங்களிடையே பல பொதுதன்மைகள் இருந்தபோதிலும் இன்னமும் வேறுபாடுகள் இருக்கின்றன என்றும் கூறுகின்றார்.

16 ம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து மத்தியப்படுத்தப்பட்ட பிரெஞ்சு அரசாங்கமானது வடக்கு, மத்திய பிரான்சின் மொழியாகிய பிரெஞ்சை ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு பெரும் சிரத்தை எடுத்துக் கொண்டது.

பிரெஞ்சு புரட்சியின் பின்பு வந்த அரசாங்கங்கள் எல்லோரையும் பொதுத்தன்மை பெறச்செய்தல் என்ற கோட்பாட்டின் பெயரில் ஏனைய பிராந்திய மொழிகளை அழிக்க தொடங்கின. இதன் உச்சக்கட்டமாக 1886 ம் ஆண்டு அனைத்து பிரதேசமொழிப்பாடசாலைகளையும் அரசாங்கம் தடை செய்தது. இதனால் பெரும்பான்மையான பிராந்திய மொழிகள் உலர்ந்து உதிர்ந்துவிட்டன.

புறவன்சல் (PROVANCAL), கோர்சியன் (CORSICAN), பாஸ்க் (BASQUE), மற்றும் பிறதோன் (BRETON) மொழிகளை காப்பாற்றுவதற்கு காலம் கடந்துவிட்டது என்று, மொழியியலாளர்கள் கவலை தெரிவித்தள்ளனர். 28 லட்சம் மக்கள் தொகையுள்ள (BRETAGNE) பிரித்தான் பிராந்தியத்தில் 50 000 மக்கள் மாத்திரமே அவர்கள் மொழியாகிய BRETON ஐ நாளாந்தம் உபயோகிக்கின்றார்கள். இவர்களில் அரைப்பங்கு மக்களே இம்மொழியை எழுதக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்று அப் பிரதேச அரசின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

ALSACE பிராந்திய மக்கள் பேசும் ஜேர்மன் மொழியையும், DUNKIRIC துறைமுக பிராந்தியத்தை சுற்றியுள்ள மக்கள் பேசும் FLEMISH மொழியையும் தென்பிராந்தியத்தில் பேசப்படும் CATALAN மொழியையும் காப்பாற்றுவது பற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லையென மொழியியல் வல்லுனர்கள் கருதுகின்றார்கள். ஏனெனில் இம்மொழிகள் எல்லாம் எல்லைகளுக்கு அப்பால் மிகப்பரவலாக பேசப்படும் மொழிகளாகும்.

புறவன்சல் (PROVANCAL) மொழியின் பாவனை மிகவேகமாக குறைந்து வருகின்றது. தெற்கு எல்லையோரத்தில் உள்ள இப்பிராந்தியத்தில் வாழும் 150 லட்சம் மக்களில் 30 லட்சம் மக்கள் மாத்திரமே சிறிதளவு OCTAN மொழி

## தமிழ்

— பாரதியார்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

தொகுப்பு: குமார கலைதாசன்

பேசுகின்றனர் என நம்பப்படுகின்றது. மொழிவல்லுனர்கள் இம்மொழியை தழைக்க வைப்பதற்கு முன்னுரிமை வழங்குகின்றார்கள்.

Octan மொழியானது ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 மொழிப் பிரிவுகளில் ஒன்று PROVANCAL மொழியும் இதே குடும்பத்தை சேர்ந்தது தான் மற்ற ROMAN மொழிகளைப் போல OCTAN மொழியும் LATIN மொழியில் இருந்து தோன்றியதாகும். ஆனால் இம்மொழியே மூலமொழியாகிய LATIN க்கு மிக நெருங்கிய மொழியாகும்.

உள்ளூர் மொழிவல்லுனர்களின் கூற்றுப்படி PROVANCAL மொழியினது எழுத்துவடிவம் 11 ம் நூற்றாண்டை சேர்ந்த எழுத்துகளின் வரிவடிவங்களை கொண்டிருப்பதாக நம்பப்படுகின்றது. இம்மொழிக்கேயுரித்தான TROUBADOUR எனப்படும் இசைக்கவிதைகள் மத்திய கால ஐரோப்பாவில் வெகுதூரம் வரை பரந்து புகழ்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மொழியை எழுதக்கூடிய சிலபேர் சேர்ந்து சிறுசிறு குழுக்களாக தனிப்பட்டமுறையில் செயல்பட்டுவந்தனர். இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னால் இக்குழுக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் கூட்டமைப்பாக இம் மொழியை காப்பாற்ற முனைகின்றார்கள். இந்த கூட்டமைப்பு தற்போது தனிப்பட்ட ரீதியில் 17 இரட்டை மொழிப்பாடசாலைகளை நடத்தி வருகின்றன. இவற்றில் 4 பாடசாலைகள் இவ்வருடம் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோன்று இரட்டைமொழிக் கல்வி முறை கோர்சிகாவில் (CORSICA) உள்ள அரசாங்க பாடசாலைகளில் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டது. இம்முறையை மற்ற பிராந்தியங்களும் பின்பற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேசியர் (BEZIERS) நகரிலிருக்கும் ஓர் புதிய தனியார் பாடசாலையில் சிறுபிள்ளைகளுக்கு, அவர்களுக்கு 3 வயதாகும் போது, புறவன்சல் மொழிபேசத்தெரிந்த ஓர் ஆசிரியரினால் PROANCAL மொழி போதிக்கப்படுகின்றது. அதாவது சிறுவர்கள் கதைக்க ஆரம்பிக்கு முன்னமேயே இம்மொழி போதனை தொடங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவர்களுக்கு 8 வயதாகும் போது, பிரெஞ்சு, புறவன்சல் ஆகிய இருமொழிகளும் கலந்த இருமொழிப் போதனை ஆரம்பமாகும்.

அவர்களுக்கு 9 வயதாகும் போது நாம் சிறிதளவு லத்தீன், ஸ்பானிஸ், போர்த்துக்கேச மொழிகளை தேவையான அளவு அம்மொழிகளை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் கற்பிக்க தொடங்குவோம் என்று ஓர் இருமொழிப்பாடசாலை அதிகாரியான பிலிப் கமல் என்பவர் கூறுகின்றார்.

அண்மைக்காலங்களில் ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்கள் நாட்டிலுள்ள பிரதேச மொழிகளையும் வழக்குகளையும் ஊக்குவிக்க வேண்டிய கட்டாயநிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். ஏனெனில் மக்கள் அமெரிக்கமயப்படுதல் காரணமாக தங்கள் தேசியத்தன்மை மறக்க அல்லது மழுங்கடிக்கப்படும் அபாயகரமான நிலைமை தோன்றும் என எதிர்பார்ப்பதாக பிரான்சின் மிகப்பிரபலமான மொழிவல்லுனர் Claude HAGEGE என்பவர் கூறுகின்றார்.

சிறார்களுக்கு சிறுபான்மைமொழிகளை போதிப்பது அவர்களது நேரத்தை வீணடிக்கும் செயல் என வாதிடுவோருக்கு பதிலளிக்கையில் அவர்மேலும் கூறகின்றார். சில பிள்ளைகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை மிகக் குறுகிய காலத்திலே கற்றுக் கொள்ளுகின்றார்கள். அத்துடன் மூன்றாவது, நான்காவது மொழிகளையும் இலகுவாக கற்க முடியும். அத்துடன் நாம் ஐரோப்பாவில் பிரிவினைகளுடன் தான் நாம் வாழப்போகின்றோம்.

TROUBADOURS - (11 - 13) நூற்றாண்டு அரசபரம்பரையை சேர்ந்த கவி-இசை வல்லுனர்கள். இவர்களது கவியானது D'OC என அழைக்கப்படும் மொழியினால் அமைந்தவை, இக் கவிதைகளின் கருப்பொருளாக, காதல் (LOVE), போர் (WAR), இயற்கை (NATURE), என்பன அமைந்திருக்கும் இவர்களில் அநேகமானோர் அரச பரம்பரையினராகவும், பிரபுக்களாகவும் இருந்தனர். இவர்களில் பியர் பிடேல், போர்திரண்ட து பொன் . ஆகியோர் குறிப்பிடத்தக்கதாகும்.

---

*MARLISE SIMONS* ***இன் கட்டுரையைத் தமிழிற்கு திருப்பியவர் :- ஜெயகரன்***

***நன்றி:- NEW YORK TIMES SERVICE***

---

## குஞ்சரம்

பாரீசில் பிரஞ்சு கற்கும் வகுப்பறையில் ஒருநாள்...
என்னுடன் நிறையவே இலங்கைத்தேசத்தவர்கள்-
வகுப்பு நடாத்திக் கொண்டிருந்த ஆசிரியை கேட்டார்; 'உங்கள் நாட்டு பிரதான ஏற்றுமதிப் பொருட்களென்ன?

மாணவன் : தேயிலை, ரப்பர், தெங்குப்பொருள்கள், இரத்தினக்கற்கள்,....' இப்படியாக பதில் நீள்கிறது. திடீரென எம்முடன் இருந்த முஸ்லீம் நண்பன் ஆசிரியைப் பார்த்துக் கேட்டான்;
'உங்கள் நாட்டு பிரதான ஏற்றுமதிப் பொருள்கள் என்ன?'
ஆசிரியை கொஞ்சம் நிதானித்தவாறு பின் சொல்லத் தொடங்கினார்;
'மருந்துப் பொருட்கள், வாசனைப்பொருட்கள்,.....'
பதில் திருப்தியாக இருக்கவில்லை மாணவர்களுக்குள் குசுகுசுப்பு...
'இவை மட்டும் ஏற்றுமதி செய்து செல்வநாடாக இருக்கமுடியுமா?'

அதுவரை பேசாதிருந்த சிங்கள மாணவன் கேட்டான்; 'இவை மட்டும் தானா?' ஆசிரியை தொடர்ந்தார், 'பெரிய விமானங்கள், அதிவேக இரயில், மிராஜ், குண்டுகள், இராணுவத்தளபாடங்கள், நவீன ஆயுதங்கள்...' இப்போதைய பதில் எல்லோருக்கும் திருப்திகரமாக இருந்தது.

தகவல் : சுதன்

---

## படிப்பறிவு எவ்வளவு?

- ஆர்.நடராஜன்
நன்றி: தினமணி

கைநாட்டுகளை ஒருமுறை 'அ' எழுதச் செய்துவிட்டால் அறிவொளி இயக்கத்தில் முழுவெற்றி என்று அரற்றிக் கொள்கிறோம். அப்படியும் நம் நாட்டில் படிப்பறிவு பெற்றவர்கள் 52 சதவிகிதம் மட்டுமே. முழுமையாக கல்வியறிவு பெற்ற நாடுகள் இங்கிலாந்து, சுவிஸ்லாந்து, ஜேர்மனி, ஜப்பான் மற்றும் சில.

ஏறத்தாழ முழுமையான படிப்பறிவு உள்ள நாடுகள் நியூசிலாந்து 99.8%, ஆஸ்ரேலியா 99.5%, பிரான்ஸ் 98.8%, அமெரிக்கா 95.5%, தென்கொரியா 96%, தாய்லாந்து 93%, சிங்கப்பூர் 90.7%, அடுத்து இலங்கை 88.5%, ஹாங்காங் 88%, இந்தோனிஷியா 85%, மலேசியா 76.5%, சீனா 73.3%, பூட்டான் 38%, பாகிஸ்தான் 35%, வங்களதேசம் 29.4%, நேபாளம் 26%

தொடக்கக் கல்வி பற்றி இன்னொரு தகவல் பெல்ஜியம், இலங்கை, இத்தாலி, ஆஸ்திரேலியா, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகளில் ஒரு ஆசிரியருக்கு 10 முதல் 15 மாணவர்கள் மட்டுமே. இந்தியாவிலோ ஒரு ஆசிரியருக்கு சராசரி 61 மாணவர்கள்.

*ஒருகாலத்தில் மேட்டுக்குடியினருக்கான 'வெள்ளைக்கொலர்' (WHITE COLLAR) கல்விக்கூடங்களாகவும், குருகுலப்பாடசாலைகளாகவும் இருந்த கல்விநிலை, தாய்மொழி பாடத்திட்டமாக அமைந்ததும் பரவலாக மக்கள் கல்வி என்றதாகி பட்டிதொட்டி எங்குமே விரிவடைந்தது.*

*யாழ்ப்பாணத்தில் அடுத்தவேளைச் சாப்பாட்டிற்கு முருங்கையிலை பறிப்பதெப்படி என்று யோசிக்கும் அந்த கிடுகுவேலிகளுக்குள் அமைந்த மண்குடிசையிலும் கல்வி உட்புகுந்து தம்பிள்ளைகளின் மேற்கல்விகளுக் காக பிளேன் டீ கூடக்குடிக்காமல், பஸ்ஸில் பயணிக்காமல் சைக்கிள் பெடல்களை உந்தி உந்தி மிதித்த அந்த சென்ற பரம்பரைப் பெற்றோரை எவரும் மறக்கமுடியாது.*

*இன்று 90களுள் வந்தாயிற்று. யாழ்குடாநாடு ஏனைய பிரதேசங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் தன்னைச்சுற்றி இராணுவ வேலி அமைத்ததாய் வெளியுலகத் துண்டிப்புடன் அரசின் கொடூர பொருளாதார முற்றுகைக்குள்ளாகியுள்ளது. இந்த மாறுபட்ட சூழலில் சமகாலப் பெற்றோரும், அவர்தம் பிள்ளைகளும் கல்வி தொடர்பாக எப்படி வாழ்கின்றார்கள் என்பதை இக்கட்டுரை கோடிகாட்டுகின்றது.*

*எது எப்படியாயினும், மூடப்பட்ட வளையங்களாக, கிடுகுவேலிகளுக்குள்ளும், மதில் சுவருகளுக்குள்ளும் தம் எண்ணக்கனவுகளை வியாபித்த சமூகம் யாழ்சமூகம் என்றால் மிகையல்ல- இவர்களின் ஆரம்பச்சிந் தனை வீச்சு யாழ் நகரத்தையும், கொழும்பையும், பேராதனையையும் நோக்கியே இருந்தது. மேல்தட்டினருக்கு இதையெல்லாம் தாண்டி இலண்டன் நோக்கியிருந்தது. ஆனால் போராட்ட பிறழ்ச்சி பல்வேறு அனுபவங்க ளையும், உலகக்கண்ணோட்டங்களையும் பாடசாலைக்கல்வியையும் மீறி எம்மவர்களுக்குக் கொடுத்துள்ள தைக் காண்கின்றோம். இதன் சாதகபாதக விமர்சனப் பார்வைக்கு அப்பால் பொது அறிவு என்ற வகையில் நிறைய அனுபவங்களை இளையதலைமுறை பெற்றுவருகின்றது - உள்வாங்கி - கிரகிக்கின்றது என்றால் மறுக்கமுடியாது. இளையதலைமுறையின் சிந்தனைகளில் பல்வேறு நாடுகள், முக்கிய நகரங்கள், தமது உறவினர் வாழும் நகரங்கள், நாடுகள் அதற்குப்போகும்வழி, நாணயமாற்று- அவற்றின் மதிப்புகள் என்றெல் லாம் அறிவுத்தேடலைக் கொண்டிருப்பதை உணர்கின்றோம்.*

*ஆனால் நம்நாட்டினுள் முற்றுகைச்சூழலில் ஆட்பட்டு வெளியேறமுடியாமலோ அல்லது வெளியேற விரும்பாமலோ போராடிக் கொண்டிருக்கும் அந்த கீழ்த்தட்டு மக்களின் நிலை முக்கியமானதொரு பதிவு-*

# முற்றுகைச்சூழலில் யாழ்ப்பாணக்கல்வி

– குயிலி –

**வெள்ளத்தால் அழியாது, வெந்தழலால் வேகாது, கள்வரால் கவரப்படாது திகழும் கல்விச் செல்வத்தி னால் தான், தமிழர் கொஞ்சமேனும் தலைநிமிர்ந்து நிற்க முடிகின்றது.**

வடமாகாணத்தில் கடந்த மூன்றாண்டு காலமாக எதிரி களின் முற்றுகையினால், தமிழ் இளைஞர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்ட போதிலும், அவர்க்ள் தமது கல்வியை மேன்மேலும் வளம்படுத்திக் கொள்வதிலேயே அதிக அக்கறை காட்டுகின்றார்கள். சொந்த ஊரை விட்டு, வீட்டைத் துறந்து, பொருள்பண்டமெல்லாம் இழந்து எதுவுமற்றவர்களாக கோவில்களிலும், மர நிழல்களிலும், அகதி முகாம்களிலும் தஞ்சம் புகுந்துள்ள வேளையிற் கூட அவர்கள் தமது குழந்தைகளின் பாடப் புத்தகங்களைக் கொண்டுவர மறந்தார்களில்லை. படிப் பையே அவர்கள் தமது முழுமூச்சாகக் கொண்டிருந்தார் கள்.

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் ஏற்கனவே இடநெ ருக்கடியும், தளபாடப் பற்றாக்குறையும் இருந்து வருகின் றது. கடந்த 1990 ஜூன் மாதம் வட-கிழக்கு இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதை தொடர்ந்து, இந்த இட நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளன. இராணுவக்கட்டுப் பாட்டுக்குள் உள்ள தீவுப்பகுதி, வலிவடக்கு, வலிமேற்கு, வடமராட்சி கிழக்கின் ஒருபகுதி ஆகிய பிரதேசங்களிலி ருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள், யாழ் மாவட்டத்தி லுள்ள ஏனைய பாடசாலைகளில் தமது கல்வியைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பல்லா யிரக்கணக்கான மாணவர்கள் மர நிழல்களிலும், வெறுந் தரையிலும் அமர்ந்து கல்வி கற்கும் நிலை நீண்டகால மாகத் தொடர்ந்து வருகிறது. 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசலை மாணவர்கள் இவ்வாறு கஷ்டமான நிலையில் தமது கல்வியைத் தொடர்வதாகத் தகவல்கள் கூறுகின் றன.

1990 ஜூன் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான பாடசாலைகள் இயங்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். 1991 இலிருந்து பாடசாலைகள் யாவும் ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து, மாணவர்களின் வரவு அதிகரிக்கத் தொடங்கியது. திடீரென ஆசிரியர்கள், உயர்தர மாணவர்கள் சிலர் விளையாட்டு மைதானத்தில் நின்றுகொண்டு வானத்தை உற்று நோக்குவதைப் பார்க்கும்போது, நிச்சயம் அது பருந்தல்ல என்பது தெளிவாகும். குண்டு வீச்சின் எதிரொலி எங்கேயோ கேட்கும். எல்லோர் முகத்திலும் பீதி தெரியும். "யாருக்கு என்ன நிகழ்ந்ததோ...." மாணவர்கள் சிலர், ஆசிரியர்களின் கட்டுப்பாட்டையும் மீறி வீட்டை நோக்கி ஓட்டம் பிடிப்பார்கள். சிறிது நேரத்தின் பின் அமைதி ஏற்பட்டாலும், பிஞ்சு உள்ளங்களின் மனதை அந்த நிகழ்ச்சி பாதிக்கத்தானே செய்யும்! அதன்பின் அவர்களால் தமது படிப்பில் கவனம் செலுத்த முடியுமா?

யாழ்ப்பாணம் மீதான முற்றுகை ஆரம்பமாகியதைத் தொடர்ந்து, அங்கு மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களின் கல்விக்குத் தடங்கல் ஏற்படத் தொடங்கியது. மண்ணெய் விளக்கில் படிப்பதற்குக் கூட மண்ணெய் வாங்க முடியாத பணவசதி படைத்தவர்களா? சிக்கனமாக எண்ணெயைப் பாவிப்பதற்காக குப்பிவிளக்குகள் எல்லாம் தயாரித்து அதன் ஒளியில் படித்துப் பரீட்சை எழுதினார்கள்.

மாணவர்களின் சீருடைகள் தோய்ப்பதற்குத் தேவையான சவர்க்கார வகைகள் எதுவுமே இல்லாமல் அனுபவித்த அவலங்கள், அந்த காலகட்டத்தில் இங்கிருந்தோர்களுக்குத்தான் தெரியும். பனம்பழச்சாற்றிலும், நீறுபூத்த சாம்பலிலும் தமது சீருடைகளை கழுவிச் சுத்தமாக்கினார்கள். இப்படி இப்படியாக எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் படித்தார்கள். பரீட்சை எழுதினார்கள். நல்ல பெறுபேறுகள் பெற்றார்கள். தெற்கிலுள்ள அரசியல்வாதிகள் வியக்கும் வண்ணம் வடக்கிலுள்ள மாணவர்களின் பெறுபேறுகள் அமைந்தன. 1991 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டுப்புலமைப் பரிசில் பரீட்சையில் திருநெல்வேலியைச் சேர்ந்த ஒரு மாணவன் கணிதம், தமிழ்மொழி ஆகிய இருபாடங்களிலும் 199 புள்ளிகள் பெற்று, அகில இலங்கையிலேயே முதல் மாணவனாகச் சித்தியடைந்துள்ளான். இதனால் முழுத் தமிழ்ச் சமூகமுமே பெருமை அடைகின்றது.

வடக்கில் தற்போது பாடசாலைகளில் ஏட்டுக்கல்வியுடன் தெரிந்தோ தெரியாமலோ போராட்ட உணர்வும் ஊட்டப்படுகின்றது. மாவீரர் தினம், உண்ணாவிரதத் தியாகிகளின் ஞாபகார்த்த தினம் ஆகிய தினங்களிலெல்லாம் அவர்களது வீரதீரச் செயல்கள் பற்றி ஆசிரியர்கள், மாணவர்கள் உரையாற்றுவார்கள். உணர்ச்சிமயமான புரட்சிப்பாடல்கள் இசைக்கப்படுகின்றன. வகுப்பிலே பாடங்களில் மிகக்குறைந்த புள்ளிகள் பெறுகின்ற மாணவன்கூட போராட்டம் சம்பந்தமான வினாக்களுக்கு உடனடியாகப் பதில் கூறுகின்றான்.

வடக்கு, கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை மிக மோசமாகி வருகினறது. வடக்கில் விலைவாசி உயர்வு இலங்கையின் சரித்திரத்திலேயே அதிஉச்சநிலையில் இருக்கின்றது. போக்குவரத்து சேவை, தபால் சேவை, தொலைபேசி சேவை, வங்கிச் சேவை, மின்சார வசதிகள், எரிபொருள், கற்பித்தலுக்கு தேவையான வெண்கட்டிகள், அப்பியாசக்கொப்பிகள், ஆய்வு கூடஉபகரணங்கள் போன்ற எவையும் இல்லாத நிலை ஒருபுறமும், எப்போது விமானக் குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கிச்சூடுகள் நடைபெறுமோ? என்ற அச்சமும் ஏக்கமும், பதற்றமும் மறுபுறம் இந்த அவலநிலையிலும் கூட எதிர்கால மாணவ சமுதாயத்தின் நலன்கருதி, ஆசிரியர்கள் தமது கடமைகளை தங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் நின்று "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்றஉண்மையை நிரூபித்து வருகின்றனர். பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களிலும்கூட விசேட வகுப்புக்களை நடத்தி கல்விச்சேவைக்கே தம்மை அர்ப்பணித்து வரும் வடபகுதி ஆசிரியர்களின் பணியை 'தெய்வப்பணி' என்று கூறலாம் அல்லவா? ஏனென்றால் 1992ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் 199 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்துக்கு வந்த யாழ்.மாவட்ட மாணவனையும், 1990ஆம் ஆண்டு பல்கலைக்கழகத் தேர்வில் வடக்கு, கிழக்கு மாணவர்கள் கூடிய புள்ளிகள் பெற்றதால் பல்கலைக்கழக அனுமதிக்கு மிகக் கூடுதலான வெட்டுப்புள்ளிகளைக் கொண்டே பல்கலைக்கழக அனுமதிமுறையைத் தீர்மானித்ததையும் எடுத்துக் காட்டலாம்.

ஆசிரியர்கள் யுத்த பீதியின்றிக் கற்பிக்கும் நல்ல சூழ்நிலையொன்று முதலில் உருவாக்கப்பட வேண்டும்.

இன்று மிக உச்சநிலையில் இருக்கும் வாழ்க்கைச் செலவை ஓரளவுக்காவது சமாளிக்கத்தக்க வகையிலும் பொது நிர்வாகச் சுற்றுநிருபத்துக்கு அமைவாகவும் அங்கு சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆயுதப்படையினருக்கு வழங்குவதுபோல் மாதாந்தம் 50சதவீத சம்பளத்தை ஆபத்துக் காலத்துக்கான அலவன்ஸாக வழங்கவேண்டும். அத்துடன் மாணவர்கள் கற்றலுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், முதலாம்தர அதிபருமான திரு. த. மகாசிவம்
(நன்றி: வீரகேசரி)

இதிலிருந்து என்ன தெளிவாகிறது? இந்தக்காலகட்டத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பல்வேறுபட்ட ஈடுபாட்டினை அறிவினைப் பெறுகின்றார்கள். ஞாபகார்த்த நினைவுப் போட்டிகள், புதிர்போட்டிகள், இறந்த போராளியின் நினைவாக விளையாட்டுப்போட்டிகள் என்பன அடிக்கடி பாடசாலை மட்டத்திலும், கொத்தணி, கோட்ட மட்டத்திலும் நடைபெற்று பரிசில்கள் வழங்கப்படுவதனால், மாணவர்கள் அதற்குத் தெரியாத விடயங்களுக்கு விடை தேடுவதற்காக அலைந்து திரிகிறார்கள். இந்தத் தன்னியல்பான தேடல்களினால் மாணவர்களது ஆளுமை வலுவடைகின்றது. அந்தளவுக்கு இவர்கள் போராட்டம் சம்பந்தமான விடயங்களில் ஊறிப்போயிருக்கின்றார்கள். இது தவிர்க்க முடியாத தொன்றும் கூட. இவர்கள் வாழ்கின்ற வளர்கின்ற சூழல் அப்படியானது.

வடக்கில் அமைதி இல்லை. பரீட்சை நடாத்துவதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லை என்பதைக் காரணம் காட்டி, இலங்கை அரசாங்கம் பரீட்சைகளை ஒத்திப் போடுகின்றது. வடக்குத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலெல்லாம் நடைபெறுகின்றது. விசேட பரீட்சை வடக்கில் மாத்திரம் நடாத்தப்பட்டு, பல்கலைக்கழக அனுமதியின்போது அம்மாணவர்கள் கூடியகாலம் படித்துப் பரீட்சை எழுதினார்கள் என்பதற்காக வழமையிலும் பார்க்க அதிகபுள்ளிகளை வெட்டுப்புள்ளியாகத் தெரிவு செய்தது அரசாங்கம். பல மாணவர்களின் மனோநிலை இதனால் பாதிக்கப்படலாயிற்று. சிலர் பைத்தியக்காரர்கள் போல அலைந்து திரிந்தார்கள். தமக்கு நிச்சயம் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அடுத்த ஆண்டுப்பரீட்சைக்கு விண்ணப்பிக்காதிருந்த அந்த மாணவர்கள் கிளர்ந்தெழாமல் எப்படி இருப்பார்கள்?

## அழிவுறும் கல்வி

*யாழ். பல்கலைக்கழகம் சிதைவிலிருந்து மீள உதவி கோருகின்றது.*

நெருக்கடிகள் எப்படியெல்லாம் வடிவமெடுக்குமென்று யாராலும் சொல்லிவிட முடியாது. இன்று எமது மண்ணில் கல்வியைத் தொடருவதென்பது ஒரு போராட்டம். ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை எல்லாமே சோதனையில்.......

போகிற போக்கில் பார்த்தால், திண்ணைப்பாட போதனைகளும், மரத்தடி வகுப்புகளும், குரு குலப்பாடசாலைகளுமே எதிர்காலச்சந்ததிக்கானதாகி விடுமோ?

புகலிட வாழ்வில் கலந்தவர்களுக்கு இயல்பாகவே பொறுப்புகள் அதிகம். எமது மண்ணின் நினைவுகளைத் தாங்கி நடைப்பிணமாக இயந்திரமாக ஓடிக்கொண்டு வரும் நாம் சற்று நிதானித்துக் கொள்ளலாமே. வேறு பல கடமைகளுடன் எமது வருங்காலச் சந்ததியின் கல்வி வளர்ச்சிக்கு ஏதும் வழங்கலாம்.

யாழ். பல்கலைக்கழகம் தனது பௌதீக பீட வளர்ச்சிக்கு சில கணணிகள் வாங்க உதவி கோரியுள்ளது. இதனைப் பெற புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.

*தொடர்புகள்: யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை.*

ஒருவர் : தம்பி கொழும்புக்கு யாரும் போகினமே, தனியே போகப் பயமாயிருக்கு. இடம், வலம் தெரியாது. சிங்களமும் தெரியாது.
மற்றவர் : அடையாள அட்டை இருக்கோ.
முதலாவது நபர் : ஓம்!
இரண்டாவது நபர் : பயப்படாதேயுங்கோ! பொலிசில அடையாள அட்டையைக் காட்டுங்கோ. 'தமிழா' வந்து உங்களைக் கூட்டிப்போய் தமிழன்தானா என்று பார்த்துவிட்டு, கொண்டுபோய் விட்டுவிடுவினம்!
முதலாவது நபர் : ???

- காகன் -

குஞ்சரம்

அரசாங்கம் உரியகாலத்தில் பரீட்சை நடாத்தாமல் பிற்போடுவதனால் பெரும்பாலான மாணவர்கள் விரக்தி அடைகிறார்கள். இவற்றைக்கருத்தில் கொண்டு 'தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம்' இலங்கை அரசாங்கம் நடாத்துவது போன்றதொரு பரீட்சையை க.பொ.தா சாதாரண தர மாணவர்களுக்கு நடாத்துகின்றது. எட்டுப் பாடங்களுக்கும் ஒரு மாணவனிடம் நூறுரூபா வீதம் அறவிடப்படுகின்றது. பரீட்சை மண்டபங்களுக்கு மேற்பார்வையாளர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், பாட மதிப்பீட்டாளர்கள் எல்லோருக்கும் வேதனம் வழங்கப்படுகின்றது. இந்தப் பரீட்சைப் பெறுபேற்றை வைத்துக்கொண்டு க.பொ.தா. உயர்தர வகுப்பிற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு வேலைகள் கூட வழங்கப்படுகின்றது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, வடபகுதியிலுள்ள பெற்றோர்கள் சிலர், தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது என்று அலறியடித்துக்கொண்டு தெற்கு நோக்கிப் படையெடுக்கின்றார்கள். பெருந்தொகையான பணத்தை அவர்களின் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செலவழிக்கின்றார்கள். ஆனால் பெரும்பாலான பிள்ளைகள் கொழும்பு நகரின் வளர்ந்து வரும் நாகரிக மோகத்தினால் கவரப்பட்டு-அடிமையாகித் தம் கல்வியை தொடரமுடியாத நிலையில் இருக்கிறார்கள். எரிபொருள் தட்டுப்பாடு, போசாக்கான உணவின்மை, சுகாதாரச் சீர்கேடு இதற்கு மத்தியில் தான், இன்று வடக்கில் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். வடக்கு மீதான ஆக்கிரமிப்புப்பணிகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க, கல்வியோ எவ்வித தடங்கலும் இல்லாமல் போதிக்கப்படுகின்றது. அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்ட வேளையிற் கூட, பாடசாலைகள் யாவும் ஒழுங்காக இயங்கின. அரசாங்க விடுமுறைகள் குறிப்பாக போயா தினம், சுதந்திரதினம் போன்ற நாட்களில் எல்லாம், வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. முற்றுகைக்காலங்களில் பல நாட்களாகப் போதிக்காதிருந்த பாட அலகுகள் ஈடுசெய்யப்பட்டன. இதனால் முற்றுகைச் சூழலில் கூட, தமிழ் இளைஞர்கள் தம் கல்வி நிலையிலிருந்து, தாம் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்துக் காட்டக்கூடியதாக இருந்தது.

*"எது வந்ததெனில் என்ன அதை வென்று செல்வோம்" என்று, மகாகவி தீர்க்கதரிசனத்துடன் அன்று பாடியது. இன்று தமிழ் மாணவர்களுக்கு- ஏன் எல்லோருக்குமே ஏற்புடையதாகவிருக்கின்றது.*

# றொக் இசையின் அதிர்வுகளுடன் இசைந்துவரும்
# இனத்துவேசம்



தொகுப்பு : **வரன்**

*<< அன்றைய ஜேர்மனி இன்றில்லை*
*எல்லாத்திசைகளிலிருந்தும் புகுந்துள்ளனர்*
*நம் தேசத்தில் வேறினத்தவர்*
*விழித்தெழு ஜேர்மானியனே!*
*நாம் கத்துவோம்! - எப்போதும்*
*குரல் கொடுப்போம்!!*
*வெளியேறு அந்நியனேயென்று! >>*

இந்த வார்த்தைகள் றொக் இசையின் அதிர்வுகளுடன் அந்தக் கம்பீரமான உச்சத்தானியில் செவிப்பறைகளை அடையும்போது, அந்தச் செவிகளுக்குரிய மனிதனின் நாடி நரம்பெல்லாம் முறுக்கேறி முடுக்கிவிடப்படுவதில் ஆச்சரியம் இல்லை.

1984 இல் கொமாண்டோ பேர்னோ (COMMANDO - PERNOD) என்ற றொக் இசைக்குழு மேலேயுள்ள வரிகளை இசையாக்கி காற்றில் கலக்கிவிட்டது. ஜேர்மனியில் இன்றுள்ள பல்வேறு வகைப்பட்ட 50 றொக் இசைக்குழுக்களில் ஒன்றுதான் இக்குழு.

'ஸ்ரூர் காவாஃவ்ற்' (STARKRAFT) - அபாயக் கரம் - என்ற இசைக்குழு <<நாங்கள் ஒரு சக்தி- இந்த எம்சக்தி ஜேர்மனியைத் துப்பரவு செய்யப்போகின்றது>> என்ற பொருள் பதித்த பாடலை வெளிக்கொண்டு வந்துள்ளது.

'வோல்க்ஸ் ஸோர்ன்' (VOLKSZORN) -கொதிப்புறும் மக்களின் சீற்றம்- என்ற இசைக்குழு
*<< அந்நியரை சிறையிடு.... - அல்லது*
*எங்கேயேனும் ஒரு பகுதியில் ஓரம்கட்டிவிடு!*
*ஏன் முடியாது - இவர்களை*
*பாலைவனத்தில் வீசிவிட....*
*ஆக, கடைசியாக இவர்களை*
*வந்த இடங்களுக்கே திருப்பி அனுப்பிவிடு!>>* என்ற வரிகளுடனான மிகத்தீவிரமான பாடல்களை வெளிக்கொண்டு வந்துள்ளார்கள்.

அடுத்து 'கனாக்கன்' (KANAKEN) என்ற பாட்டைப்பாடியுள்ள இசைக்குழுவான 'என்ட்சிக்' (ENDSIG) -இறுதிவிடிவு- ஆனது வெளிநாட்டவர் பிரச்சனைக்கு என்ன செய்வது? என்பது தொடர்பாக தமது கருத்தாக 'இந்தத் துருக்கியரை தனியாக வதை-அழிவு முகாம்களில் முடக்கிவிடலாம்' என்று வெளிப்படுத்தியுள்ளது.

*<<பூண்டுண்ணும் இவர்கள் நம்நாட்டினுள் வந்தார்கள்*
*இவர்கள் தொட்டதெல்லாம் நாசமாயிற்று*
*இவர்களைத் தலையெடுக்காமல்*
*அடி-தாக்கு... அழி... வீசு சிறைகளுக்குள்*
*வதை-அழிவு முகாம்களில் முடக்கு!>>*

1970 களில் தொடங்கிய 'மழித்த மண்டையர்கள்' (SKIN HEADS)1 என்ற இந்த அறிகுறி தனித்துவமாக சுமார் 6 000 அபிமானிகளைக் கொண்டதாக மேற்கு ஜேர்மனியில் கருக்கட்டியது. இவர்களுடைய இந்தக்குறைநோய் பரவுவதற்கான ஆரம்ப ஊற்று இங்கிலாந்திலிருந்தே கிடைத்துள்ளது. இங்கிலாந்தில் 'குருவித்தலையர்' (PUNKS)2 எனப்படும் இவர்கள் தலைமுடி நீளமானதாகவும், அழுக்கானதாகவும் உடைகளில் இராணுவப் பச்சைநிற அங்கியும், இராணுவச் சப்பாத்துமாக தனித்துவமாக அடையாளம் காட்டினர். இவ்வகை ஆடை அணிகலங்களுடனேயே தத்தமது நாளாந்தக் கருமங்களை ஆற்றினர்- இவர்களின் முக்கிய பொழுதுபோக்காக பாடல்கள் பாடுவதென்றிருந்தது. எதிர்காலம் சூன்யமாகவே இந்த வறிய தொழிலாளிகளின் சந்ததியினரான இவர்களது நிலமை காட்டியிருந்தது. வெறும்சந்திப்பு மையமாக இணையத் தொடங்கிய இவர்கள் மத்தியில், ஆங்கிலத் தேசிய இனவாத சிந்தனையின்பாலான ஈர்ப்பு 70 களின் கடைசியில் வெளிப்படத் தொடங்கியது.

SCREW DRIVER - திருகாணி செலுத்தி- , NO REMORSE - இரக்கமற்றது- என்ற இரு குறிப்பிடக்கூடிய குழுக்கள் பாசிச சிந்தனைக்கருவூலத்தை உள்ளடக்கி ஒரு அமைப்பாக உருவெடுத்தார்கள். BLOOD & HONOUR - இரத்தமும் கௌரவமும்- என்ற இப்பாசிச அமைப்புடைய இசைக்குழு 1985 இல் ஆரம்பமாகியது. இதன் இந்த இசையை << OI >> என அழைத்தது. சண்டையை ஞாபகமூட்டும் ஒலிகளையும், வெறியூட்டும் அடிதடி உணர்வுகளையும் இந்த இசையூடாக வெளிப்படுத்தலே பிரதான பணியாக இருந்தது. ஆபிரிக்க கறுப்பு ஜமெக்கர் (JAMAIQUE) களின் SKA வடிவங்களே, பிரித்தானிய வெள்ளையர்களின் மேற்படி இசைக்குழுவின் ஓசை வடிவங்களுக்கு வழிகோலியது-

(1) SKIN HEADS- 'மழித்த மண்டையர்கள்' என்று மொழிபெயர்க்கப்படுகின்றது.

(2) PUNKS- 'குருவித்தலையர்' / 'கோழிச்சாயக்காரர்' என அழைப்பிலும் உள்ளது.

இவ்வகை இசை வெளிப்பாடுகளில் முதன்மை வகித்தது SCREW DRIVER என்ற குழுவாகும். இதில் முன்னணியில் Ian stuart என்ற பாடகரின் வரிகள், <<எங்கள் போராட்டம் வெள்ளை இனத்தவருக்கானது>> என அமைந்திருந்தது. இவர்கள் கொதித்து கிளர்ந்தெழுந்தது. <<உலகளாவிய யூத சியோனிசத்திற்கு எதிராக....>> என்ற இப்போக்கானது ஒரு கட்டத்தில் ஜேர்மனுள் சென்றடைந்தது.

மிக்க விரைவாக ஒரே சிந்தனையுடையவர்களான RADIKAHAL, NOIE WERTE - புதிய பெறுமானம், STORKRAFT - அபாயகரம், VOLKSZORN - கொதிப்புறும் மக்களின் சீற்றம் என்ற இசைக் குழுவினருள் பரவியது. இக்குழுவினருக்கும் புதிய நாஸியக் குழுவினருக்கும் தொடர்புள்ளதாக ஏதும் நிரூபிக்கப்படவில்லை, இருந்தும் தங்களுடைய பங்களிப்பாக, தாம் ஈடுபாடுகாட்டும் தத்துவத்தை உணர்ச்சியூட்டும் பாடல்களாக வெளிப்படுத்துகின்றனர்.

சமுதாய வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடும்பங்களின் சந்ததியினரே இத்தகைய குழுக்களுள் நுழைகின்றனர். இந்த 'மழித்த மண்டையர்களின்' தாழ்வுச் சிக்கல்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட உணர்வுகள் இவர்களை ஆண்மையற்றவர்களாக சமுதாயமட்டத்தில் காட்டியிருந்தது. இதனால் வெறுப்புற்ற இவர்கள் உடலியல் ரீதியாக பலம்பொருந்திய பயிற்சி பெற்றவர்களாக முரட்டு சுபாவம் காட்டுபவர்களாக தம்மைப் புறக்கணித்த சமூகத்தவர் மத்தியில் மீண்டும் நிலைகொள்ள விழைகின்றனர். இவர்களின் பாடல்களூடான வெளிப்பாடுகள் சகாஸக்காரராக சமூக அரங்குகளில் காட்டப்படுகின்றது. இவர்களின் இத்தகைய போக்கை அதிதீவிர வலதுசாரி அரசியல்வாதிகள் தமது அரசியல் நோக்கிற்குப் பயன்படுத்துகின்றனர். இந்த அதிதீவிர வலதுசாரி அரசியல்வாதிகள் உறவினால் இவர்கள் கௌரவப் புளங்காகிதங்களுக்குள்ளாகி விடுகின்றனர். தீவிர வலது சாரிகளின் அரசியல் தேநீர்க்கோப்பைகளைத் தாங்கும் ஸோசர்களாகி விடுகின்றனர்- அதாவது கட்சியின் எடுபிடி வேலைக்காரர்களாகி விடுகின்றனர்.

இது மட்டுமல்லாது COTZ BROKEN - வாந்தி எடு- என்ற குழு COLOGNE என்ற இடத்தில் உருவாகியது. இது இடதுசாரி அமைப்புகளின் வேலைகளை மட்டம்தட்டி கண்டித்து பாடல்களாக வெளிப்படுத்தியது. இதற்கு இவர்களை அரசியல் நோக்குகளுக்காகப் பின்நின்று ஆட்டிப்படைத்த தீவிர வலதுசாரி அரசியல்வாதிகளே காரணமாகின்றனர். PARTI NATIONAL- DEMOCRATIQUE என்ற N.P.D. கட்சி தமது திட்ட நடவடிக்கைகளை வெளிப்படுத்த இவர்களை ஊதுகுழலாக்கியதென்பது பட்டவர்த்தனமான செய்தி.

1984 ம் ஆண்டளவில் BÖHSE ONKELZ - பயங்கரமான மாமா- என்ற இசைக்குழுவைக் கண்டு பிராங்போர்ட்

## விலாங்குமீன்

இங்கு ஏனைய பாட்டுக்குழுக்களும் அரசகெடுபிடிகளுக்கு ஈடுகொடுக்குமுகமாக நரித்தந்திரமான முறையில் செயல்படத் தொடங்கியுள்ளன. இதற்கு தமக்கேயுரித்தான புதிய சங்கேத மொழிகளை பாடல்களில் விதைத்துள்ளனர். குறிப்பாக STORKAFT என்ற குழு 'ADOLF H' என்றபதத்தைப் பயன்படுத்தியுள்ளது.

'முன்னைய காலத்தில்' என்ற பதம் மூன்றாம் பகுதி (IIIeme REICH) (3) என்பதைக் குறிப்பதாகவும் இப்பாடலின் வேறொரு பகுதி K.K.K (4) என உச்சரிக்கப்படுகின்றது. முன்னர் அதிதீவிர இளைஞர் போக்குகளைக் காட்டியிருந்தவர்கள். இன்று விலாங்கு மீன் போன்ற தன்மையைக் காட்டுகின்றனர். இவர்களின் பாட்டுவரிகளிலொன்று இப்படியாகவுள்ளது:

<<வாக்குறுதி கொடுப்பது இலகு
அதை நிறைவேற்றல் கடினம்.
அதாவது
வாயால் கதைப்பது காசுக்குப் பெறுமானம்
மௌனம் பொன்னுக்குச் சமானம்>>

இந்த அரசாங்கத்தடைகள் எவ்வகையிலும் வெற்றியைக் கொடுத்ததாகயில்லை. இந்த ஒலி நாடாக்களின் உற்பத்தியும் விற்பனையும் தலைமறைவில் தொடர்கின்றன. குறிப்பாக நாஸிஇசை விநியோக முகவர்களில் ஒருவரான கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுபவரான HERBERT EGOLDT என்பவர் BRÜHL என்னும் நகரில் வாழ்கின்றார். பாட்டு வரிகளை தபால் மூலமாகவும் விநியோகித்து, இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துபவராகவும் இவர் இருக்கின்றார். இவரது பணிகளாக தயாரிப்பு, விநியோகம், வியாபாரம் ஆக இருந்தும் இவருக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதிருக்கின்றது. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 30 000 'அடக்கமான ஒலித்தட்டுக்கள்' (COMPACT DISC) பொலீசாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

காலம் கடந்த நிலையில் ஜேர்மன் அரச நிர்வாகம் இப்படியான திடீர்பாய்ச்சலான செயல்பாடுகளைத் தொடங் வேண்டிய காரணமென்ன? ஆனால் 1970 களில் அதிதீவிர இடதுசாரிஅமைப்புக்கள் மேல் இந்த மாதிரியான கண்துடைப்பு நடவடிக்கைகளைச் செய்யவில்லை. மிக உக்கிரமாக விரைந்து செயல்பட்டு ஒடுக்கியிருந்தது. ஆனால் 'மழித்த மண்டையர்களின்' (SKIN HEADS) அமைப்புக்கள் பற்றி அறிந்தும் அறியாத மாதிரிவிட்டதன் காரணம் என்ன? இவர்களின் கடந்தகால அரசியல் எண்ணச் செயல்பாடுகளின் மனோபாவ விளைவினா லா....? அல்லது உண்மையை உணராது கவலையீனமாக அரச நிர்வாகம் புறக்கணித்திருந்து விட்டதென்பதாலா?

(3) பழைய பிரபுக்களின் அரசினைக் குறிக்கின்றது. IV REICH என்பது கிட்லரின் அரசினைக் குறிக்கும்.

(4) KU KLUX KLAN- U.S.A கறுப்பர்களுக்கெதிரான இனவாத வெள்ளையர்கள் குறித்த அடையாளம்.

நகரமே வெட்கித்தலைகுனிந்தது. காரணம் 'துருக்கியரே வெளியேறு' என பாடல்களை வெளிப்படுத்தியது இக்குழு- எது எப்படியாயினும் இவ்வகையான இசைக்குழுக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையில் நேரடியான தொடர்புகளிருந்ததாகச் சொல்லமுடியாது. ஆனாலும் இவர்களுக்குள்ளே பாசிசச் சிந்தனையும், வெளிநாட்டவரை வெளியேற்றும் எண்ணமும் ஒத்த கருத்தாக பரஸ்பரம் காணப்பட்டிருந்தது.

1985 ம் ஆண்டளவில் ஹம்பேர்க்கில் RAMAZAN AVCI என்ற துருக்கியர் 'மழித்த மண்டையர்களால்' கொல்லப்பட்டார்.

1991 ம் ஆண்டளவில், HÜNXE என்ற இடத்தில் லெபனானைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பெற்றோல் எறிகுண்டு வீச்சுக்குள்ளாகி எரிகாயங்களுடன் உயிர்தப்பினர். இத்தாக்குதலுக்குக் காரணம் மழித்த மண்டையர்கள் குழுவைச் சேர்ந்த 3 அங்கத்தவர்களே- ஜேர்மன் ஒன்றிணைந்த முதலாம் ஆண்டு கொண்டாட்டத்தின் செய்கைகளில் ஒன்றாகவே இவ்விதம் செய்தனர். <<வெளிநாட்டவரை பூண்டோடு அகற்றல்>> என்ற எண்ணப்பாடே இவர்களிடம் காணப்பட்டது. இந்தச் செயலுக்கான காரணமாக இவர்கள் நீதிபதி முன் 'போதையுடன் றொக் இசை கேட்டோம் அவ்விசை எம்மை இப்படியாகச் செய்யத்தூண்டியது' என்றனர். அவர்கள் கேட்ட பாடல்வரி பின்வருமாறு:

<<நான் ஒரு குண்டு வீச்சு விமானி
என்னால் என்ன செய்யமுடியும்?
என்னால் இறப்புக்களை விதைக்க முடியும்>>

இந்தப் பாடல்களைக் காற்றில் கலந்தவர்கள் BOHSE ONKELZ என்ற இசைக்குழு-

சிலமாதங்களுக்கு முன் பிராங்போர்ட்டில் வெளியிடப்பட்ட SACRIFICE -அர்ப்பணிப்பிற்கான வேதனைகள்- என்ற பாடல் 2 லட்சத்து 50 ஆயிரம் கசெட்டுக்களாக விற்பனையானது மட்டுமல்ல பிராங்போர்ட் இசையணித்தெரிவு நிகழ்ச்சியில் 5வது இடத்தையும் பெற்று பிரபல்யமாகியிருந்தது.

1984 ம் ஆண்டிலிருந்து பிரபல்யமாகி செயல்பட்டுவரும்

## ஜேர்மனியின் நிழலில் அதிதீவிர அரக்கமுகம்?

இன்று ஜேர்மன் அரசநிர்வாகம் இளைஞர்களது பிரச்சனைகள் பற்றியும், நிறத்துவேசப் பிரச்சனைகள் பற்றியும் ஆராயத் தொடங்கியுள்ளது.

1992 கோடை காலத்தில் ஒருநாள், பியரின் போதையில் மிதந்துவந்த 'மழித்த மண்டையர்'(SKIN HEADS) இருவர், தம் இஷ்டப்படி <<SIEGHEIL>> நாஸி சுலோகத்தை சொல்லியவாறு சாலையோரத்தில் இருந்த பூச்சாடிகள், சுயாதீன தொலைபேசி இணைப்புப் பெட்டிகள்.... என்றவாறு நாசகாரம் செய்துகொண்டு பயணித்தனர். யானை புகுந்த காடுபோல் பாதை வெறிச்சோடியது. அந்தோ பரிதாபம்! சாலை ஓரத்தில் படுத்திருந்த ஒருவர் இவர்களின் கைகளில், குரங்கின் கையில் மாலையானார். தூங்கிக்கொண்டிருந்தவர் சுமார் 22 கத்திக் குத்துகளுக்குள்ளாகி மீளாத்துயிலாகி ஜடமானார். இது நடந்தது பொன் நகருக்கு அண்மையிலுள்ள சிறுநகரமான BAD BREISIG இல், அட்டகாசம் புரிந்த இந்த நபர்கள் தற்போது 6 1/2 மற்றும் 8 1/2 வருட சிறைத்தண்டனையை அனுபவிக்கின்றார்கள்.

* EBERNDORF, BAVIERE COLOGNE என்ற இடங்களில் வசித்த இரு துருக்கியக் குடும்பங்களின் வதிவிடங்கள் தீக்கரையானது. இக்குடும்பத்தினர் உயிர்தப்பியது அதிசயமானது! இந்தவருட ஜுன் மாதப் பதிவாகவுள்ள சம்பவம் இது.

* பெர்லின் தெருவொன்றில் பட்டப்பகலில் இருதுருக்கியர் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

* LUNDWIGSHAFEN என்ற இடத்தில் துருக்கியர் கடைகள் தீக்கரையாக்கப்பட்டுள்ளன.

இளைஞர் நல மேம்பாட்டுவள அமைச்சர் ஸ்ரீமதி ANGELA MERKAL ஜேர்மன் இளைஞர்களின் மத்தியில் வளர்ந்து வரும் குற்றமிளைப்பு தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டு விசனப்பட்டதைத் தொடர்ந்து, அரச நிர்வாக இயந்திரமும், மனோத்தத்துவவியலாளர்களும் ஆய்வு வேலைகளுக்காக முடுக்கிவிடப்பட்டுள்ளனர்.

ஸ்ரீமதி ANGELA MERKAL இன் பணிப்பின்படி ஆணவை மேற்கொண்ட சமூகவியலாளர்களும், மனோத்தத்துவவியலாளர்களும் இதுவரையில் நடந்து முடிந்து பதிவாகியுள்ள குற்றப்பத்திரங்களிலிருந்து எழுந்தமானத் தெரிவாக 1358 குற்றப்பத்திரங்களை எடுத்து ஆய்வுக்குட்படுத்தினர். இதில் 52 குற்றப்பத்திரங்களுக்கு மட்டுமே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதைக் கண்டுள்ளனர். இந்தத் தீர்ப்பினைப் பெற்றவர்கள் அதிதீவிரவாதிகளாகக் காணப்பட்டனர்.

இதுமட்டுமல்ல, இந்த ஆய்வு குற்றமிழைப்பவர்கள் பற்றி மேலும்,

15-20 வயதெல்லை உடையவர்கள் 70%
20-24 வயதெல்லை உடையவர்கள் 30%

இளம் பெண்கள் 4% ஆகவும் புதியகணிப்பீட்டைத் தருகின்றது. குறிப்பாக இவர்கள் வசதியற்ற குடும்பங்களிலிருந்து வந்தவர்களாகவோ, ரௌடிகளின் சந்ததியினராகவோ காணப்படவில்லை. இந்த இளைய தலைமுறையினர் பெரிதாகப் படித்துப் பட்டங்களைப் பெறவில்லையென்றாலும் 20% மானவர் மட்டுமே வேலையில்லாத் திண்டாட்டமுடையவர்கள் எனக் காணப்பட்டுள்ளனர். இதில்;

FACHO-BAND என்ற இசைக்குழுவின் முதலாவது இசைப் பாடல்களின் தொகுப்பான 'DER NETTE MANN'-மனித அபிமானிகள்- வெளிக்கொண்டு வந்துள்ள பாடல்கள் வெறுமனே கிளுகிளுப்பினை மட்டும் ஊட்டவில்லை. மனித அவையங்களைத் துண்டுதுண்டுகளாக்கி உணர்ச்சியூட்டின.

அதில் ஒரு பாடல்வரி இப்படி:
<<நான் சின்னஞ்சிறு பிள்ளைகளை விரும்புகின்றேன்
- துண்டங்களாக -
இவை பதமாகவும், சுவையாகவும், இதமாகவும்....>>

1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கல்வி அமைச்சர் இப்பாடலைத் தடைசெய்யும்படி உத்தரவு பிறப்பித்தார். இந்த ஆண்டிலேயே BOHSE ONKELZ குழுவினரும் இசை நிகழ்ச்சிகள் செய்யத் தடை விதிக்கப்பட்டது.

அப்படியிருந்தும் BOHSE ONKELZ குழுவினர் தம்மைத் தனித்துவம்காட்டி அதிதீவிர வலதுசாரி அரசியல் கட்சியிலிருந்து விலகித் தூரம் செல்வதாகக் கோடிகாட்டினர். இதனால் இவ்வகை அரசியல்வாதிகளால் 'பன்றி இடதுசாரியினர்'(COCHONS DE GAUCHE) எனக்கிண்டலாக இம்சைப் படுத்தப்பட்டிருந்தும், இவர்கள் நாசிகளாகவே கருதப்பட்டனர். இவர்களின் கசெட் விற்பனையைப் பார்க்கும்போதும், இவர்களது பிரபல்யத்தைப் பார்க்கும்போதும் இவர்கள் ஒரு தந்திரத்தன்மையுடனேயே செயல்படுவதைக் காணமுடிவதாக ஜேர்மன் அரசு கணிக்கின்றது.

1989 ம் ஆண்டுகளின் முன்பே மேற்குஜேர்மனியில் நாஸிச றொக் இசைப்பாட்டுக் குழுக்கள் உறுதியாகச் செயல்பட்டு வந்தன என்பது மறுக்கமுடியாத உண்மை. பெர்லின் சுவர் தகர்ந்த நிகழ்வானது மேற்கிலுள்ள 'றொக்' இசை ஈடுபாட்டாளர்களுக்கு அதிகமான புத்துயிர்ப்பைக் கொடுத்தது. REQUINS BRUTAUX, EDWINS, BOMBARDIERS போன்ற குழுக்கள் கிழக்கிலேயே முழுமையாகச் செயல்படத் தொடங்கின. இக்குழுக்களின் தலைவர்கள் அல்லது நிர்வாகிகள் மேற்கு ஜேர்மனிக்காரராகவே காணப்பட்டார்கள். இந்தப் புதிய றொக் இசைக் குழுக்கள் 'நவீன நாஸிசத் தீவிரவாதிகள்' போன்றே செயல்பட்ட



## ஜேர்மனியின் நிழலில் அதிதீவிர அரக்கமுகம்?

| % | இனம் காணப்பட்டகுழு | குற்றம். |
|---|---|---|
| 38% | மழித்த மண்டையர்கள் | குண்டுவைப்பு<br>தகர்ப்பு-அழிப்பு<br>போன்ற நாசகார வேலை |
| 19%-25% | அதிதீவிர வலதுசாரிக்கட்சி<br>அங்கத்தவர் கொண்ட குழுக்கள்<br>(நிறவாத எண்ணப் போக்குடையவர்) | வெளிநாட்டவர் மீது தாக்குதல் |
| 10% | மனம்போன போக்கில் தான்தோன்றி<br>தனமாக ஈடுபடுபவர்கள்<br>(இவர்கள் எக்கட்சியையோ,சிறுகுழுக்களையோ சார்ந்திருக்கவில்லை) | தான்தோன்றித்தனமானவை. |
| மீதி | (ஏனையவர்கள்) | |



இவர்களின் இச் செயல்களுக்கான காரணங்களை ஆராயும்போது <<அழையாவிருந்தாளியாக ஊடுருவும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையும், இவர்களின் நடத்தைகளும், அரசு இவர்களுக்கு வழங்கும் சலுகைகளும் கண்டு வெதும்பும் தம் எதிர்காலம் தொடர்பாக அச்சமுறும் இவ்விளைஞர்கள், அரசுடன் பேசமுடியாத நிலையில் அப்பாவி வெளிநாட்டவர் மீது எரிச்சல்களையும், விரகதாபங்களையும் பொழிகின்றனர்>> என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

இத்தகைய வெளிப்பாடுகளில் 90% மானவை இந்த இளைஞர்கள் வாழும் பகுதியிலேயே நடக்கின்றது. பல சம்பவங்கள் தன்னெழுச்சி நிகழ்வுகளாக- முன் திட்டமிடலோ அல்லது பின்புல ஊக்குவிப்போ இன்றி- நடந்தேறிவிடுகின்றன.

அதிகமாக ஊடுருவும் வெளிநாட்டவர் வருகையைத் தடைபோடும் அரசின் நடவடிக்கை அமுலானபின், இந்த 'மழித்த மண்டையர்கள்' மனோநிலையில் இதுகாலும் இருந்துவந்த தாழ்வுச்சிக்கலும் அகன்றுபோய் விட்டது. தம்மை 'தேசிய உணர்வு கொண்டவர்களென' புது உற்சாகம் பெற்றவர்களாகியுள்ளனர்.

இந்த உற்சாகம் இவர்கள் மத்தியில் வழங்கும் தென்பினால் புதிய அமைப்பு வடிவமொன்று பெறவிழைவது சாத்தியமானதே. இத்தகைய எண்ணமுடையவர்கள் தங்களைத் தீர்க்கதரிசனமுடையவர்களாக- வெள்ளம் வருமுன் அணைகட்ட விழைந்த முன்னோடிகளாக- எண்ணுவதில் வியப்பொன்றுமில்லை.

00000 00000 00000

னர். சிறுபான்மையாகக் காணப்பட்ட இக்குழுக்களின் திடீர் செயல்பாட்டு உந்துதல் தாக்கத்தால் 1989 களில் பேர்லினில் மட்டும் ரொக்கிசைத் தட்டு விநியோகத்தில் 60% விற்பனை அதிகரிப்பைப் பெற்றன. இது இவர்களின் செல்வாக்கு அதிகரிப்பைப் பறைசாற்றப் போதுமான தொன்று.

கிழக்கு ஜேர்மனி சோசலிச அரசுநிர்வாகம் உடைந்து போன இவ்வேளையில், இதுவரையிலும் நுழைய முடியாதவாறு ரொக் இசைப்பாடலாளர்களுக்கு இறுக்கமாக மூடிய கெடுபிடிகளைக் கொண்டிருந்த தன்மையில் இருந்து நெகிழ்ச்சி உண்டாகி, புதிய சமரசங்களுக்கு வந்தது. இந்த புதிய விட்டுக் கொடுப்பு விளையாட்டு அரங்கங்களில் 'ரொக் இசையின் துள்ளல்' பரவ வழி சமைத்தது.

மேற்குடன் கைகோர்த்த கிழக்கின் சோசலிச நிர்வாகம் காட்டிய வெற்றுத்தன்மை, இங்குள்ள இளைஞர்களின் மனோபாவத்தில் திக்குத்திசை தெரியாத மனப்பிராந்தியை ஏற்படுத்தியது. முன்னைய காலங்களில் நடைமுறையி லிருந்த ஸ்ராலினிச சோசலிச நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டிருந்த தத்தமது பெற்றோரை இவர்கள் கேவலமாகக் கருதியவாறு வழி தெரியாத புதிய வீதியில் இறங்கி ஓடத் தலைப்பட்டனர். திடீரென கிழக்கின் அரசியல் நிர்வாகம்'ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாகச் செயல்படுவோம்' என்று விடுத்த அறைகூவல் இவர்களின் சிந்தையில் பலத்த விசனத்தை ஏற்படுத்தியது.

இது மட்டுமல்லாது, மேற்கு ஜேர்மனிக்காரர் கிழக்கு ஜேர்மனிக்காரரை இரண்டாந்தரப் பிரஜைகள் போலவே நடாத்தும் போக்கானது, இங்குள்ள இளைஞர்களுக்கு பெரும் பாதிப்பினைக் கொடுத்தது. வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும் தற்போதைய இப்புதிய சூழல் இந்த இளைஞர்களின் மீது பெரும் சுமையை ஏற்றியுள்ளது. இவ்வகையான தாக்கங்களின் தூண்டுதல்கள், இருநாடுகளின் இணைவின் மீதான கோபங்களாகவும்; அரச நிர்வாக மோசடி மீதான கோபங்களாகவும் வெளிவராதவாறு தடுக்க மிகவும் நாசுக்காக எல்லாவற்றுக்கும் காரணம் வெளிநாட்டவரே என்று திசைதிருப்பிய செய்கைதான் இன்றைய பலசம்பவப் பதிவுகளுக்கான காரணமாக உய்த்துணர முடிகின்றது.

ஜூலை 91 இல் பேர்லினில் வெளிவந்த DER TARGESSPIEG ஈடபத்திரிகையின் புள்ளிவிபரத் தகவல் பின்வரும் செய்தியைத் தருகின்றது. கிழக்கு ஜேர்மனியில் வாழும் 49% மான இளைஞர்கள் வெளிநாட்டவர் மீதன வெறுப்பினைக் கொண்டுள்ளனர். இது மிகுதியான ஆச்சரியத்தைக் கொடுக்ககின்றது. ஏனெனில் கிழக்கு ஜேர்மனியில் வெறும் 1.2% அளவில் மட்டுமே வெளிநாட்டவர் வாழ்கின்றனர்.



## சகிப்புடன் இணைந்துள்ள கிழக்கின் நகரம்

1989ம் ஆண்டுக்குமுன் கிழக்கின் பாடத்திட்டங்களில் பாசிச உணர்வுகளுக்கெதிரான அறிவு மையப்பட்டிருந்தது. ஆனால் 1970 களின் பிற்பகுதிகளிலிருந்து கோழிச் சாயக்காரரது (PUNKS) இசையானது இரவு நடனவிடுதிகளில் ஊடுருவியிருந்தது. இந்த இசைகளின் ஊடே <<OI>> என்ற ஓசை இடைநடுவில் வெளிப்படுத்தப்பட்டும் வந்தது. இந்த << OI >> என்ற ஓசை கிட்லரின் விசேட சலாமிடலை நினைவூட்டுவதாகும்.

"இப்போக்கினை கிழக்கின் பொலிசார் ஒரு பிரச்சனையாக எண்ணவில்லை. மிகச்சிறுபான்மையினரான இப் போக்குடையவர்கள் 'அரச செயல்பாடுகளுக்கு எப்போதும் எதிர்ப்பினைக் காட்டும் மனோபாவமுடையவர்கள்' என்று மதிப்பிட்டு அலட்சியப்படுத்தினார்கள். அது மட்டுமல்லாது, இவர்கள் பச்சாதாபத்துக் குரியவர்களாகவும் கருதப்பட்டார்கள்" என்று சொல்பவர் பேர்ன்ட் வாக்னர் (BERND WAGNER) என்ற குற்றப்புலனாய்வாளராகிய கிழக்கு ஜேர்மனிக்காரர். நீண்டகாலங்களாகவே இத்தகையவர்கள் கைவிடப்பட்டவர்களாக கருதப்பட்டு வந்துள்ளார்கள். இவர்கள் விளையாட்டு மைதானங்களில் சென்று சலாமடித்த போதும் தண்டனைக்குரியதாகக் கருதப்படாமல் புறக்கணிக்கப்பட்டனர்.

ஆனால், 1987 ம் ஆண்டளவில் அதிதீவிரத்தன்மையான சிறுகுழுவான 'ELEMENTSOF CRIME' என்ற ரொக்கிசைக் குழு நிகழ்த்திய நிகழ்ச்சியில் பேஸ் பந்து விளையாட்டு மட்டையும் (BASE BALL BAT) வழங்கிய அதிரடி இசை அரங்கம், இவர்களை அட்டகாசக்காரர்களாகப் புலப்படுத்தியது. இதனால் ஈர்க்கப்பட்ட பொலீசாரின் கவனம் இவர்களின் மேல் பாய்ச்சலாகியது. இவர்கள் மடக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். ஆனால் 1989 களில் ஏற்பட்ட திடீர் அரசியல் மாற்றத்தால் மேற்படி போக்கு கைவிடப்பட்டது.

25 நவம்பர் 1990 ல், 50 பேர் கொண்ட 'மழித்த மண்டையர்' குழுவொன்றால் ANGOLAIS ANTONIO AMADEU என்ற ஆபிரிக்கர் EBERSWALDE என்ற இடத்தில் அடித்துக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் பொலிஸ் நிலையத்திற்கு மிக அருகிலேயே நிகழ்த்தப்பட்டிருந்தும் பெலீசார் தலையிடவேயில்லை.

1991 செப். மாதத்தில் நவீன நாஸிசவாதிகள் HOYERSWERDE என்ற இடத்தில் அமைந்திருந்த 'அகதிகள் தங்கும் விடுதி முகாமை' எரியூட்டியது. அப்படியிருந்தும் அந்த நகரசபை நிர்வாகம் நவீன நாஸிசவாதிகளுக்குக் கட்டுப்

பட்டு அந்த அகதி முகாமை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் மட்டுமே ஈடுபட்டது. இவ்வகையான செயல்களுக்கு கிழக்கில் வாழும் மக்களின் மறைமுக ஆதரவு உண்டென்பதை சம்பவங்கள் வெளிப்படுத்திவிட்டன.

1991 ம் ஆண்டில் PAQUES தினத்தன்று DRESDE என்ற இடத்தில் மொஸாம்பிக் நாட்டுக்காரரான ஜோர்ஜ் ஹோமோண்டே என்பவர் ட்ராம் பாதையில் தள்ளப்பட்டு கொல்லப்பட்டார். இதனை எந்தப்பயணிகளும் தடுக்க முன்வரவில்லை.

குறிப்பாக HOYERSWERDA, ROSTOCK ஆகிய இடங்களில் 1992 இல் நிகழ்ந்த வெளிநாட்டவருக் கெதிரான குற்றவியல் சம்பவங்களுக்கு மக்களின் பரவலான கரவொலி ஆதரவு வழங்கப்பட்டது. இச்சம்ப வெளிப்பாடானது மேலும் கொடூரமான செயல்களைச் செய்யத்தூண்டியுள்ளது. இவர்கள் தமது எதிர்கால வாழ்வின் சூன்யத்தன்மையால்- அரசநிர்வாகத்துடன் மோதமுடியாத இயலாமையும் சேர- கையாலாகாத வெளிநாட்டவர் மீது கொட்டும் கசப்புணர்வை இலகுவாகவே உணரக்கூடியதாகவுள்ளது.

பெர்லினில் நிழ்ந்த திரைப்படவிழாவொன்றில் STAU.J ETZT GAHT'S LOST (மருளுபவனை மடக்கும் எண்ணம்) என்ற படம் 'மழித்த மண்டையர்கள் ' தயாரிப்பாளரொருவரால் திரையிடப்பட்டது. இப்படம் தொடர்பான கலந்துரையாடலில் கேட்கப்பட்ட கேள்வி <<வெளிநாட்டவரைப் பற்றி தெரியாத நிலையில் ஏன் அவர்கள் மீது காழ்ப்புணர்வு காட்டுகின்றீர்கள்?>> என்பதாக அமைந்தது. பங்கெடுத்த இளைஞன் ஒருவனின் பதில் <<அதிருப்தியின் வெறுப்பு>> என்றிருந்தது. இப்பதிலானது அடிமனதில் இருந்து வெளிப்பட்ட உள்ளுணர்வாகத் தெரிகின்றது. அதேவேளை, இந்த இளைஞர்கள் தங்கள் சிந்தனைகளில் மாக்ஸுக்கும், ஹிட்லருக்கும் இடையிலான திரிபுவாத எண்ணங்களை வெளிப்படுத்துகின்றார்கள்.

'பாடசாலைகள் முதலாளித்துவத்தை நிலைநாட்டுவதற்கான தயாரிப்புக்கூடங்களாகவே இயங்குகின்றன' என்ற மார்க்ஸின் கூற்றை நினைவுகூருகின்றனர். அதுமட்டுமல்ல, வறியவர், வசதியானவர் என இருவேறு பிரிவுகளாக மக்கள் துண்டாடப்படுவதாகவும் கருதுகின்றனர். இவ்வகையில், வறிய நாடாகக் கிழக்கு ஜேர்மனியை எண்ணும் மேற்கு ஜேர்மனிக்காரர் காலனித்துவமாக்க முனைவதாகவும் கருதுகின்றனர். இதுவே பிரச்சனைகளின் முதன்மைக் காரணங்களாகின்றன.

1991 இல் மேற்கு ஜேர்மனியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புத்தகவல், "நிறபேதத்தன்மையை மூன்றிலொரு பங்கினர் ஏற்றுள்ளார்கள்" எனக் காட்டுகின்றது. அதிகமான வெளிநாட்டவர் நாட்டினுள் இருப்பதுவே இதன் காரணம்- இந்நிலையை தீவிரவலதுசாரியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். முன்னர் BODO MORSHAÜSER என்ற சாதாரண அரசியல்வாதி <<அரசியல் திருத்தச்சட்டமொன்றை அள்ளுண்டு வரும் அரசியல் புகலிடக் கோரிக்கையாளர் மீது கொண்டுவர வேண்டும்>> என வலியுறுத்தினார். இக்கருத்து தீவிர வலதுசாரிகள் தமது போக்கிற்கான நியாயப்படுத்தலை முண்டு கொடுத்துள்ளது.

மேற்கு ஜேர்மனியில் அமைந்த HOYERWERDA என்ற நகரில் அமைந்துள்ள பள்ளிக்கூடம் வெளிநாட்டவரை விரட்டிக் கொண்டிருந்தது. இந்த இடத்திலமைந்த அகதிகள் தங்குமிட முகாமொன்று எரிக்கப்பட்டிருந்தது.

SCHLESWIG - HOLSTEIN எனும் இடத்தில் மூன்று துருக்கிப் பெண்கள் அவர்களது வீட்டிலேயே 92 ம் ஆண்டு டிசெம்பரில் எரிக்கப்பட்டார்கள். இச்சம்பவம் பற்றிய தகவல்கள் வெளிப்பட்டதும் ஜேர்மன் மக்கள் கண்டித்து மனிதச்சங்கிலி எதிப்பாக பெருமளவில் நடாத்தினார்கள். இது மட்டுமல்லாது சமூகசேவையாளர்கள், அரசியல் கட்சிகள், செய்தித் தொடர்புச் சாதனங்கள், முதலீட்டாளர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து 'ஜேர்மன் தோற்றப்பாட்டு நற்பெயருக்கு' களங்கம் ஏற்படாத வகையில் ஜனநாயகத்திற்குரிய நெகிழ்வுப்போக்கை வலியுறுத்தினார்கள்.

விசேடம் என்னவெனில் 'மழித்த மண்டையரும்' இந்த இனஎதிர்ப்புக்கு எதிரான ஊர்வலத்தை நடாத்தினார்கள்! இவர்கள் 'சிவப்பு மழித்த மண்டையர்' (RED SKINS) எனப்பட்டார்கள் அல்லது 'கூர்மைக்காரர்' (SHARP) எனப்பட்டு இனவெறிக்கெதிரானவர்களென அடையாளப்படுத்தினர்- இந்த இயக்கப்போக்கானது இளைஞர்களை கருத்தியல் ரீதியாக பாஸிச இயக்கங்களிலிருந்து வெளியேறியவர்களைக் கவர்வதாக அமைகின்றது.

துருக்கியப் பெண்களின் இறப்பின் பின்னர் பொலிசார் தம் முழுமையான அமுங்குப்பிடியை இனவெறியாளர் மீது காட்டவெளிப்பட்டனர். இச்சம்பவத்திற்குக் காரணமான வரை மடக்கியும் பிடித்தனர். பின்னர் இவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தியதாகவும் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆனால் இதனை நம்புவதென்பது கொஞ்சம் சங்கடமே.

சென்ற மே 25 இல் EDWALD ALTHANS என்ற நவீன நாஸிசத் தலைவர் யூதர்களின் அழிப்புகளை ஏற்றுக்கொள்ளாதவராக தொலைக் காட்சியில் வெளிப்படையான கருத்தைத் தெரியப்படுத்தியிருந்தும், இவர் மீது எந்தச் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. யூதர்களை அழித்த இடமாகக் கருதப்படும் HOLOCAUSTE தொடர்பாக நீதிமன்றங்களே நம்ப மறுக்கும் போக்கைக் காட்டுகின்றன.

இது ஒருபுறமிருக்க, ரொக் இசைக்கு பிரகாசமான எதிர்காலம் இருப்பதாகக் காணப்படுகின்றது. விற்பனை பரந்தும், விரிவாகவும் இருப்பதை உணரமுடிகின்றது. குறிப்பாக 'KRAFTSCHLAG' என்றுள்ள புதிய ரொக் இசைத்தட்டு, ஒலிநாடாவாகவும், அடக்கமான தட்டு (C.D) வடிவிலும் வெளிவந்துள்ளது. ஜேர்மனி அரசு வெறும் வார்த்தைகளால் இதைத்தடை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

**********

நன்றி: Le monde Diplomatique

BRIGITTE PATZÖLD இன் கட்டுரையை நன்றியுடன் தமிழில் திருப்பித் தொகுத்தவர் : வரன்



# அழுகைக்குரலானின் விம்மல் வெடிப்புகள்

"நீதிக்கும் நியாயத்திற்குமாய் எவனொருவன் குரலெழுப்புகின்றானோ அவன் 'WAILER' ". பொப்மார்லி

- கறுத்தான் -

பொப்மார்லியின் அறிமுகம் கிடைத்து பத்தாண்டுகளாகின்றது. அவ்வேளை அவன் இறந்து இரண்டுவருடமாகி இருந்தது. 1983 இல் உச்சநிலையை அடைந்த இலங்கைத்தீவின் துயரங்கள் வெளிநாடுகளில் இருந்த இளைஞரை தாயகம் நோக்கித் திருப்பியிருந்தது. அப்படியானோரில் ஒருவனாக கபிலன், கூடவே பொப்மார்லியுடன் வந்து சேர்ந்தான்.

'ஒலிநாடாவில் பொப்மார்லியின் குரல்கேட்ட முதல் தருணத்திலேயே அவனது உயிர்த்திருத்தலின் சாத்தியத்தை உணரலானேன். குரலில், இசையில் இழைந்தோடிய அழுகையும், விம்மலும், இசைக்கருவிகளின் சுண்டியிழுப்பும் என்னை கிளர்ச்சி, துன்புறுத்தலின் இன்பத்தால் துடிப்புறச் செய்தது. கேட்டவைகள் விம்மல்வெடிப்புக்கள், உயிர்வதையின் வீச்சுக்கள்...

பொஃப்பல்லோ சோல்ஜர்.... பாடல்தான் கேட்ட மாத்திரத்தே மிகஅதிகமாக என்னைப்பாதித்தது. அப்பாடல் எப்போதும் இலங்கைத் தோட்டத்தொழிலாளரை நினைவுறச்செய்தது. "ஊரான ஊர் இழந்தேன் ஒத்தப்பனை தோப்பிழந்தேன்...", "அட்டைக் கடியும் அரியவழிநடையும்...", நாங்கள் உழைக்கவும் சாகவும் மட்டுமே...", என்னும் அம்மக்களின் சோகச்சொற்தெறிப்புகளின் பாரத்தை பொப்மார்லியிடம் பெறலானேன். அவனது அப்பாடலில் இடைதிரவலாக இசைக்கப்படும் யோ...யோ...யோ..யோய் யயயே.. எனும் பல்குரலோசை, தேயிலை போர்த்திருக்கும் மலைக்குன்றுகளிடையே ஓலமாய் என்னை வதைத்தது. சூழல்நெரிசலில் அந்த ஒலி நாடாவும் கைதவறிப்போனது.

ஐரோப்பாவில் அகதியாய் வந்தடைந்து அலைந்த போதுதான் மீளவும் அந்த இறவாத பொப்மார்லியைக் கண்டேன். இப்போதும் அவன் மிகுந்த இளமையாய், துள்ளலாய், எங்கெங்கும் வியாபித்தவனாய் உயிர்த்துடிப்புடன் இருந்தான். ஆச்சரியமாய் இருந்தது.

ஐரோப்பிய தொலைக்காட்சி ஒளிபரப்பின் இசை அலைவரிசைகளில் பலதடவைகள் தேர்வுபெறும் முதல் பத்துபாடல்களில் பொப்மார்லியும் இருக்கின்றான். மெத்ரோவினுள், மெத்ரோ நடைபாதைகளுள், பரந்த வெளிகளில் துள்ளும் இளைஞர்களின் சேர்க்கையில், காணும் இடம் தோறும் அவனைத் தரிசிக்கின்றேன். அவனது வாழ்க்கை விவரணத் தொகுப்பான "TIME WILL TELL" படத்தை திரையில் பார்க்கையில் பலஜன்னல்கள் என்னுள் திறந்து மூடின. இசைக்காற்றில் அறைந்து அதிர்ந்தன. கண்களை மூடிய மோனநிலையிலேயே பெரும்பாலும் பாடுகின்றான். அளவுக்கதிகமாய் அலட்டிக் கொள்ளாத உடல் அசைவுகள், துள்ளல்கள். இசைச்சேர்க்கையில் பாடல்கள்தான் எப்போதும் முன்மொழிவுகளாகின்றன. றேகே இசையின் சிறப்பம்சமே பாடல்கள்தான். ' றேகே இசையின் அரசன் ' என்றே பொப்மார்லி வர்ணிக்கப்படுகின்றான், குறிக்கப்பட்டுள்ளான். அவன் பாடகன் மட்டுமல்லன். பாடலாசிரியன், இசைக்கருவிகளை கையாள்பவன், இசைஞன், கலைஞன். கரீபியன் கடலில் உள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்றான யமேக்கா தீவுதான் றேகே இசையின் உற்பத்தி இடமும், றேகே இசையரசன் பொப்மார்லியின் பிறந்த இடமுமாகும். வடஅமெரிக்காவுக்கும், தென்அமெரிக்காவுக்கும் இடையே அத்திலாந்திக்மாகடல் உட்குழிந்த பகுதியே கரீபியன் விரிகுடா, கரீபியன்கடல். இக்கடலிடை எழும்புயற்காற்றுதான் ஹரிக்கேன் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றது. இப் புயற்காற்றில் அணையாதிருக்க வடிவமைத்து தயாரிக்கப்பட்டதுதான் ஹரிக்கேன் லாம்ப். அதுவே நம்மிடையே அரிக்கன் லாம்பென புழக்கத்தில் உள்ளது. இக்கடலில் காணப்படும் தீவுக்கூட்டங்களே மேற்கு இந்தியத்தீவுகளாகும். இத்தீவுகளில் ஒன்றில்தான் இந்தியாவுக்கு கடல்வழி தேடப்புறப்பட்ட கிறிஸ்தோபர் கொலம்பஸ் வந்திறங்கினான். அத்தீவுக் கூட்டத்தில் அளவில் மூன்றாவது பெரியதீவு யமேக்கா. இதன் பூர்வீகமக்கள் அரவாக்கள். அமெரிக்க பூர்வீக மக்களினங்களில் ஒருவகையினர். 1494 இல் கொலம்பஸ் இத்தீவில் வந்திறங்கியதன் பின்- ஸ்பெயின் காலனியான யமேக்கா, 1655ம் ஆண்டில் இருந்து பிரித்தானியாவின் கைக்கு மாறியது.

கரும்பினை பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாகவும், உற்பத்தியாகவும், யமேக்காவில் மேற்கொண்ட பிரித்தானியா, ஆபிரிக்க மக்களை- கறுப்பர்களை- அடிமைகளாகவும், கூலிகளாகவும் பிடித்து வந்தனர். இலங்கையிலும் பிரித்தானியர் செய்தது இதைத்தான். இந்த அடிமைகளின் சோகம், ஏக்கம், கோபம்...... இவைதான் றேகே இசை.

' NO WOMAN NO CRY ' "வேண்டாம்...பெண்களே அழவேண்டாம்...." எனும் பொப்மார்லியின் புகழ்பெற்ற பாடலினை கேட்கும் போதெல்லாம் என்காதில் பாரதியின் குரல்தான்.

*விம்மிவிம்மி விம்மி விம்பியழுங்குரல்*
*கேட்டிருப்பாய் காற்றே! துன்பக்*
*கேணியிலே எங்கள் பெண்கள் அழுத சொல்*
*மீட்டும் உரையாயோ? - அவர்*
*விம்மியழவும் திறங்கெட்டுப் போயினர்.*
*(கரும்புத் தோட்டத்திலே..)*

எனும் சோகச்சொற்களால் நெஞ்சம் துன்புறுமே- எழுத்து தரும் துன்பமே தாங்க முடியாத போது, இசையில் குழைந்துவரும் நரம்புசுண்டும் குரலில் NO WOMAN NO CRY அப்பப்பா..... ஆம் அவன்பாடல்கள் துயரப்பட்டவர்களுக்கானது.

யமேக்காவின் தலைநகரான கிங்ரனில் தெருமுனைப் பாடகனாக பாடித்திரிந்த ஏழைப்பொப்மார்லி, தன் இசை ஆற்றலினால், அதன் வீச்சினால் றேகே இசையின் உற்பத்தி இடமாய் யமேக்காவை குறிக்கச் செய்ததுடன், உலகின் கவனத்தையும் யமேக்கா மீது குவியச்செய்தான். பெருமை சேர்த்தான் என்கிறது யமேக்காவின் வரலாற்றுக்குறிப்பு-

06-02-1945 ம் ஆண்டில் பிறந்த பொப்மார்லி, பாடல் எழுதவும், பாடவும் வல்லமை கொண்டிருந்த தன் தாயிடம் இருந்தே இசையை கற்றுக் கொண்டதாயும், கிட்டார் இசைக்கருவியை தானே பயின்றதாயும், புகழ்பெற்ற பின்னர் பத்திரிகையாளரின் கேள்விகளின்போது பதிலளித்துள்ளான். பொப்மார்லி தன் இளவயது வாழ்க்கைபற்றி ' CONCRETE JUNGLE ' என்னும் பாடலில் இப்படிப் பாடுகின்றான்....

*இன்றுள்ளதைப் போல் எனது நாட்களில்*
*சூரியன் எப்போதும் ஒளிர்ந்ததில்லை*
*உயரத்தே மஞ்சள் நிலா*
*விளையாட வெளிவந்ததில்லை*
*நான் சொல்கிறேன்*
*என் வாழ்வின் ஒளியை*
*இருள் மூடி இருந்தது.*
*எனது நாட்கள் இரவினுள்தான்*
*நகர்ந்தது.*
*அன்பை, அமைதியை*
*எங்கே நான்*
*கண்டடையலாம்.*
*எவரும் எனக்கு*
*சொல்லவில்லை*
*சுற்றிலும் எங்கேனும்*
*இருக்க கூடுமென*
*கொங்கிறிற் வனத்தை காட்டினர்....*



வாழ்க்கையை, தன்சுற்றத்தை, தன்கவலையை எப்பொழுதும் தன் பாடலில் பதிவுசெய்தான். தன்நண்பர்களுடன் தொடங்கிய இசைக்குழுவுக்கு 'WAILERS' என்றே பெயரிட்டான். இச்சொல்லை தான் விவிலியத்தில் (BIBLE) இருந்தே பெற்றதாய் கூறுகின்றான். 'WAIL' என்பது அழுகை, புலம்பல் என்பதை குறிக்கும். தன்குழுவுக்கு 'அழுகைக்குரலார்' எனப்பெயரிட்டதன் பொருத்தத்தை அவனது பாடல்களை கேட்பவர்களால் புரிந்து கொள்ளமுடியும். ஒருமுறை அவன் கூறினான் "நீதிக்கும் நியாயத்திற்குமாய் எவனொருவன் குரலெழுப்புகின்றானோ அவன் 'WAILER' ". அவனது பாடல்களில் யமேக்கா அடிமை மக்களின் துயரம் வெளிப்பட்டபோதும் உலகெங்குமான துயரங்களுடன் அவை அடையாளங்காணப்பட்டதும், ஒன்றித்ததும் தற்செயலானதல்ல. ஒரு எழுத்தாளர் அவனை "மூன்றாம் உலகின் பாடல்க் குரலோன்" எனச் சிறப்பிக்கின்றார்.

அவனது பாடல்களில் தொன்மை, தொன்மம் பற்றிய தான உள்ளடக்கங்களுடன், விவிலியத்தின் பழைய ஏற்பாடு கூறும் கருதுகோள்கள் விரவிக்கிடப்பதனைக் காணலாம். 'ஃகார்வேயிசம்' எனும் சிந்தனைத் தாக்கத்தாலும், தத்துவத்தினாலும் பொப்மார்லி கவரப்பட்டிருந்தான். மார்க்குஸ் மொசையஃகார்வே (MARCUS MOSIAH GARVEY) கறுப்பர்களின் அடிமைநிலை மீட்பராக மதிக்கப்படுபவர். யமேக்காவின் தேசியவீரராக அரசால் ஏற்கப்பட்டவர். யமேக்காவின் கல்விப்பாடவிதானத்தில் அவரது போதனைகள் சேர்க்கப்பட்டு பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றது. யமேக்காவில் 1887 ல் பிறந்த ஃகார்வே 'ஆபிரிக்காவுக்கு திரும்புதல்', 'ஆபிரிக்கா ஆபிரிக்கருக்கே' என்னும் கோட்பாட்டையும், இயக்கத்தையும் கொண்டிருந்தார். இருண்ட கண்டமென்று பெயரிட்டு ஆபிரிக்காக்கண்ட முழுவதையுமே ஐரோப்பா தன் காலனியாக அடிமைப்படுத்தி இருந்த முதலாம் உலக யுத்த பிற்காலத்தில் ஃகார்வேயின் சிந்தனைகளும், செயலும், புரட்சிகரமானது, துணிச்சல் மிக்கது என்றே இன்றைய வரலாற்று ஆசிரியர்களால் மதிப்பிடப்படுகின்றது.

"நாம் அணிசேர்வோம். மற்ற மனிதர்களை வெறுப்பதற்காய் அல்ல. நம்மைநாமே உயர்த்திக்கொள்ள, நமக்கு மறுக்கப்பட்ட மனிதத்துவத்தை வற்புறுத்த, நாம் தயாரித்துள்ள வேலைத்திட்டம் நியாயமானது என நம்புவோம். நாம் பிரகடனம் செய்வோம், ஆபிரிக்கா விடுதலைபெற, நீக்குரோ இனம் முழுமையும் இயந்திரப் பெரு-ஆலையாளரின் அடிமைப்படுத்தலில் இருந்தும் விடுதலைபெற, நாம் சமரசம் கொள்ளத்தேவையில்லை, நாம் அணிசேர்வோம்" என்னும் முழக்கத்துடன் ஃகார்வே மேற்கு இந்தியதீவுகள், மத்திய தென்அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கு பயணம் செய்தார். கறுப்பர்களை அணிசேர்க்க உழைத்தார். 1919ம் ஆண்டில் இருபது லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பொன்றை நிறுவி அதன் முதல்கிளையை அமெரிக்காவில் செயல்பட வைத்தார். (U.N.I.A) உலக நீக்ரோ மேம்பாட்டு கூட்டமைப்பு என்பது அவரது இயக்கத்தின் பெயராகும். அடிமைகளாய் பிடித்துவரப்பட்டிருந்த மக்களை மீளவும் தாயகமான ஆபிரிக்காவிற்கு அழைத்துச்செல்வதற்காய் கப்பல்நிறுவனம் ஒன்றையும் நிறுவினார். ஆனால் அமெரிக்கா வரிஏய்ப்பு என்ற காரணத்தைக் காட்டி வழக்குத் தொடுத்து அவரை நாட்டைவிட்டு வெளியேற்றியது.

பின்னாளில் பொப்மார்லி தனது "SO MUCH THINGS TO SAY" என்னும் பாடலில் இப்படிப் பாடினான்.

*"நிறையவே உள்ளது சொல்வதற்கு.*
*மறப்பதற்கு எனக்குவேறு வழியில்லை.*
*அவர்கள் யேசுக்கிறிஸ்துவை சிலுவையில்*
*அறைந்தார்கள்.*
*நான் மறக்க வேறு வழி ஏதுமில்லை.*
*அவர்கள் மார்குஸ் ஃகார்வேயை அரிசிக்காய்*
*விற்றார்கள்.*
*ஆகையால் எந்தவழியுமில்லை நீ மறக்க.*
*நீ யாராய் இருக்கலாம்*
*இந்தப் போராட்டத்தில் நீ எந்தப்பக்கம் ..."*

ஃகார்வே விதைத்த தொன்மங்களே பொப்மார்லியின் பாடல்களின் அடிநாதமாகும்.

1930ம் ஆண்டின் எத்தியோப்பியாவின் மன்னராக கெஸ்லி சலாசி முடிசூடியபோது ஃகார்வே "கறுப்பு அரசன் முடிசூடுகின்றான், கறுப்பரின் இராச்சியம் எழுகின்றது, அவன் கடவுளின் பிரதிநிதி, விவிலியம் கூறும் அரசுரிமையின் தொடர்..." என்றெல்லாம் எதிர்வுகூறி இருந்தார். யமேக்கா மக்களும், பொப்மார்லியும், இக்கருத்துக்கும், கனவுக்கும் ஆட்பட்டிருந்தனர். 1940ம் ஆண்டில் ஃகார்வே இறந்த போதிலும், 1960ம் ஆண்டு யமேக்காவின் சூழ்நிலை ஃகார்வேயின் சிந்தனைக்கும், கோட்பாடுகளுக்கும் புத்துயிரளித்தன. 1962ம் ஆண்டில் யமேக்கா காலனித்துவ விடுதலை பெற்றதாய் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பொருளாதார சீர்குலைவுக்கு நாடு உள்ளானது. வேலையின்மை எப்போதும் இல்லாதஅளவில் உயர்ந்து சென்றது. இவ்வேளையில்தான் அமெரிக்க கறுப்பர்களின் குடியுரிமை இயக்கம் உச்சநிலையை அடைந்து கொண்டிருந்தது. யமேக்கா இளைஞர்கள் றேகே இசையின்பாலும், றேகே இசைக்கலைஞர்களான 'றஸ்தபாரியன்'கள் பாலும் ஈர்க்கப்பட்டனர்.

இந்த 'றஸ்தபாரி இயக்கம்' (RASTAFARI MOUVMENT) 1930ம் ஆண்டு எத்தியோப்பிய மன்னனாக கெஸ்லி சலாசி முடிசூடியபோதே யமேக்காவில் தோற்றம் பெற்றது. ஃகார்வேயின் கருதுகோள்களை அடிப்படையாக கொண்டது. இந்த றஸ்தபாரியன்கள் தான் றேகே இசையின் மூலவர்கள். அடிப்படையில் இவர்கள் கலகக்காரர்களாகவே அடையாளப்படுத்தப்பட்டனர். தொன்மங்கள் பற்றிய கருதுகோள்களை இவர்கள் கொண்டிருந்த போதும்- மதங்களை இவர்கள் நிராகரித்தார்கள். குறிப்பாக கத்தோலிக்க, கிறிஸ்தவ மதத்தை அடியோடு வெறுத்தார்கள். தங்களின் அடிமைநிலை, இம்மதங்களாலும், இம்மதபாதிரிகளாலும் ஏற்பட்டதென்பதை அவர்கள் ஏற்றிருந்தனர். விவிலியம் கூறும் ஆதிவரலாறான, பாபிலோன், வாக்களிக்கப்பட்ட பூமியான எத்தியோப்பியா இவையே அவர்களின் கனவுகளாய் தொன்மங்களாய் இருந்தன.

அடக்கப்பட்ட மக்கள் தங்களிடமிருந்து எந்த சமயத்தையும் கேள்விக்கிடமில்லாமல் பரிசுத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கோரியவர்களுக்கு எதிராக போராட கிளர்ந்தெழும்போது சரித்திர சான்றுகளின்படி வேறு ஒரு கடவுளை அதாவது மதத்தை நாடுபவர்களாகவே இருக்கின்றார்கள். இதேபோல் தான் கிறிஸ்வத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் றஸ்தபாரியம் என்பதனை மாற்றான மதமாக கொண்டார்கள். இது ஆன்மீக விலங்குகளில் இருந்து விடுதலைக்காக போராடும் மதம் என்று கருதினர்" என்கின்றார் ரீற்றா பொறாஸ் என்னும் கட்டுரையாளர்.

றஸ்தபாரியன்கள் தமக்கான வாழ்க்கைமுறையொன்றையும் கடைப்பிடித்தனர். தலைமுடியை வாராமல், வளர்ந்ததை முறுக்கி, தொளதொள ஆடையுடன் அவர்கள் காணப்பட்டனர். அவர்கள் கஞ்சா புகைத்தார்கள். சாப்பாட்டுமுறையில் சிலகட்டுப்பாடுகளை கொண்டிருந்தனர். பன்றிஇறைச்சியை தவிர்த்தார்கள். தங்கள் நிறமென சிவப்பு, மஞ்சள், பச்சை என்னும் மூலவர்ணத்தை கொடியாக கொண்டனர். பொப்மார்லியும் தன்னை றஸ்தபாரியன் என்றே அடையாளப்படுத்தினான். பொப்மார்லி கூறினான். "றஸ்தபாரி வெறும் திடீர்கலாச்சாரமல்ல. அது இயல்பான உண்மை". "நான் எப்பொழுதும் றஸ்தபாரிதான்". "என்னிடத்தே மதம் இல்லை, நான் இயல்பானவன், இயற்கையானவன், நியாயங்களுக்கானவன், நான் றஸ்தபாரியன்".



தனது புகழ்பெற்ற பாடலான 'GET UP STAND UP' பாடலில் இப்படிப் பாடுகின்றான்.

*"மிக அதிகமான மக்கள் நினைக்கின்றார்கள்*
*கடவுள் கட்டாயம் வானத்திலிருந்து வருவாரென்று.*
*எல்லாவற்றையும் பொறுப்பேற்பாரென்று.*
*இதுவே அவர்களின் உயர் எண்ணங்கள்.*
*ஆனால் நீ அறிவாயா வாழ்வின் பெறுமானங்களை.*
*நீ கட்டாயம் உன்பூமியை உற்றுப்பார்.*
*இப்போ நீ ஒளியை உண்மையை காண்பாய்*
*நீ எழு. நிமிர்ந்து நில்,*
*உன் உரிமைகளுக்காக எழுந்து செல்...."*

தொன்மம், தொன்மைகள் பற்றிய கருத்து நலன்களையும், முரண்களையும் அவன் கொண்டிருந்தபோதும், அவன் நிகழ்கால உண்மைகளை, நிலமைகளையே பாடினான்.

1980ம் ஆண்டு ஏப்ரலில் அவன் ஜிம்பாவே சென்றான். காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்திலும், நிறவாத சிறுபான்மை வெள்ளையர் ஆட்சிக் கெதிரான போராட்டத்திலும் வெற்றிபெற்று ஜிம்பாவேயின் வெற்றிநாள் விழாவின்போது பொப்மார்லி சிறப்புவிருந்தினராய் அழைக்கப்பட்டான். சிறப்பிக்கப்பட்டான். தன் இசைவாழ்வின் பெருமிதமிக்க நிகழ்ச்சியாகவே பொப்மார்லி நினைவுகூர்ந்துள்ளான். கறுப்பரின் எழுச்சியை காணமுடிந்ததே என்று மகிழ்ந்தான். ஜிம்பாவே பற்றிய அவனது பாடல் இன்றும் அந்நாட்டின் தேசியகீதம்போல் இசைக்கப்படுகின்றது.

*"கையினில் கையாய் கருவிஏந்தி*
*இச்சிறுபோரில் நாம் பொருத்திடுவோம்.*
*ஏனெனில் அதுவே ஒரேஒரு வழி.*
*இச்சிறு எதிர்ப்பை மீறி நாம் எழுவோம்.*
*சகோதரனே நீயே சரியானவன், நீயே உரித்தானவன்.*
*நாம் சண்டையை தொடர்வோம்.*
*எம் உரித்துக்காய் போரிடுவோம்.*
*பிரித்தாளும் ஆட்சித் தந்திரம்*
*ஒவ்வொரு மனிதனின் நெஞ்சிலும்*
*தனியே கண்ணீரை உகுக்கின்றது.*
*நெஞ்சத்துடிப்பும் அங்கே கேட்கின்றது.*
*ஆதலால் நாம் கண்டடைவோம்*
*யார் உண்மையான புரட்சிக்காரன்.*
*நான் விரும்பவில்லை*
*தந்திரங்களினால் எனது மக்கள்*
*ஆயுதக்கூலிகளாவதை....."*

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மகிழ்வில் இருந்து மீள்வதற்கு முன், சுகவீனமுற்றான். கரீபியன் தீவுகளிலும், தென்அமெரிக்காவிலும் பிரபல்யம் பெற்றதான SOCEAR என்னும் கால்பந்தாட்டத்தில் விருப்பம் கொண்டவனான பொப்மார்லி தன் உடற்பயிற்சிக்காய் விளையாடிக்கொண்டிருந்த 1980 செப்டம்பர் மாத ஒருகாலைப்பொழுதில் உடல் அவனுடன் ஒத்துழைக்க மறுத்தது. எப்போதும் கஞ்சா புகைப்பதில் மூழ்கியவனான பொப்மார்லி "கஞ்சா தேசத்தை குணப்படுத்தும் மருந்து. பழம் உண்பதை போன்றது. சிந்தனைத்தெளிவிற்கும், உடல் நலத்திற்கும் ஏற்றது" என அழுத்தத்துடன் கூறுகின்றான்.

றஸ்தபாரியன்களும் "கஞ்சா பொதுமை உணர்வை தருகின்றது" என்ற நம்பிக்கையை கொண்டிருந்தவர்கள். ஆனால் மருத்துவர்கள் கஞ்சாதான் பொப்மார்லியின் சாவுக்கு காரணமெனக் கூறுகின்றனர். றொபேட் நெஸ்டாமார்லி என்ற முழுப்பெயர் கொண்ட, மக்களின் உணர்வுகளை, கவலைகளை பாடலாய் மாற்றிய இசைக் கலைஞன் பொப்மார்லி 1981 மே மாதம் 11ம் திகதி தன் முப்பத்தாறாவது வயதில் இறந்து போனான். அவனது இறுதி நாள் ஊர்வல நிகழ்ச்சிபற்றி எழுதிய பத்திரிகையாளர்"கற்களாலான சீனப்பெருமதிற் சுவர்போல் மக்கள் தலைகள் திரண்டு கிடந்தன. அவனுக்கு அஞ்சலிசெலுத்தும் வரிசை மூன்றுநாளின் பின்னாலும் முடிவுறாது இருந்தது" எனக் குறிப்பிடுகின்றார்.

ஹரிக்கேன் புயலெனவே பொப்மார்லி றேகே இசையுடன் எழுந்தான். அப்புயலிடை அவன் தூவிய விதைகள் துயரமுறும் மக்களிடமெல்லாம் சென்று தங்கிவிட்டது. சக்திவீச்சுமிக்க அவ்விசையை, அவன் பாடல்களை முறியடிக்க எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவற்றையெல்லாம் மீறியவனாய்...

*ஆம் என் நண்பனே*
*அவர்களுக்கு சொல்*
*நாங்கள் மீளவும் சுதந்திரமானோமென.*
*என்னை அடக்க எச்சட்டத்தாலும் முடியாது*
*எந்தச்சக்தியும் என்னை கட்டுப்படுத்தாது.....*

*(DUPPY CONQUEROR)*

காற்றில் மிதக்கின்றது அவன் பாடல் சுதந்திரமாக......

நான் வேலைபார்க்கும் ஸ்தாபனத்தில் காலனிநாடுகளிலிருந்து வந்தவர்களும். இலங்கைஅகதிகளும் அதிகமாகத் தொழிலாளிகளாகவுள்ளோம்.

*காலனிவாசி* : நீங்கள் அதிகமாகவருவது சம்பாதிப்பதற்குத் தானே!
*இலங்கைவாசி* : அரசியல் பிரச்சனைகளால் வந்தோம். நாம் அரசியல் அகதிகள். (தனது அங்கீகார அட்டையைக் காட்டுகின்றார்.)
*காலனிவாசி* : அப்படியாயின் ஏன் இப்படிவேலை செய்கிறீங்க. (பாஷையும் ஒழுங்காகக் கதைக்கத் தெரியாமல். . என்ற கிண்டலுடன்)
*இலங்கைவாசி* : எங்கள் வாழ்க்கைத் தேவையைச் சமாளிக்கத்தான்.
*ஒருகுரல்* : உங்கள் சாப்பாட்டிற்கு 1முடை அரிசியும். 1 முடை கிழங்கும். 1முடை வெங்காயமும். கத்தரிக்காயும் போதும்தானே!
*(இலங்கைத் தமிழரை நன்கு அறிந்தவர் போலும்)*

வெட்கிப்போனேன். எங்களைப்பற்றி இப்படியும் ஒருபார்வையா?

– காகன் –

குஞ்சரம்

*மஹ்மூத் தார்விஷ் (MOHMOUD DARWISH) பாலஸ்தீனத்திலுள்ள பிர்வா என்ற கிராமத்தில் 1941 ஆம் ஆண்டில் பிறந்தார். 1948 இல் ஏகாதிபத்திய இஸ்ரேலிய அரசு உருவாக்கப்பட்ட பிறகு அவரது கிராமம் தரைமட்டமாக்கப்பட்டது. அவரது குடும்பத்தினர் முதலில் லெபனான் நாட்டிற்குத் தப்பியோடினர். பின்னர் இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்ட பாலஸ்தீனத்தில் உள்ள கலீலீ என்ற நகரத்திற்குத் திரும்பிவந்தனர். தனது பத்தொன்பதாம் வயதில் முதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்ட தார்விஷ், மிக விரைவில் உலகளாவிய அங்கீகாரம் பெற்றார். ஆபிரிக்கா-ஆசியா எழுத்தாளர் சங்கத்தின் புகழ்பெற்ற 'தாமரை' விருதும் அவருக்குக் கிட்டியது. 1971 பிப்ரவரியில் அவர் கெய்ரோவுக்குக் குடிபுகுந்தார். 1972 இல் பெய்ருட்டுக்குச் சென்று பாலஸ்தீன விடுதலை அமைப்பின் (PLO) ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்றார். 1982 இல் லெபனான் மீது இஸ்ரேல் படையெடுத்துப் பல்லாயிரக்கணக்கான லெபனான் மக்களையும், பாலஸ்தீனர்களையும் கொன்று குவித்தபிறகு தார்விஷ் ஒரு நாடோடிப் பாடகராக, பாலஸ்தீனிய விடுதலையைப் பாடும் பாணராக, பாலஸ்தீன விடுதலை அமைப்பின் நல்லெண்ணத் தூதராக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பயணம் செய்து கொண்டிருக்கின்றார்.*

*தார்விஷின் கவிதைகள் சிலவற்றை முதன்முதல் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் எம்.ஏ.நுஃமான் (பாலஸ்தீனியக் கவிதைகள் : வாசக வெளியீடு, வாசகர் சங்கம், நூறி மன்ஸில், கல்முனை, சிறீலங்கா.) சிவகங்கையிலுள்ள அன்னம்(பி) லிமிட்டெட் வெளியிட்டுள்ள கவிதைத் தொகுப்பொன்றில் (மண்ணும் சொல்லும்: மூன்றாம் உலகக் கவிதைகள், மொழியாக்கம்: எஸ்.வி.இராஜதுரை, வ.கீதா) தார்விஷின் இரண்டு கவிதைகள் இடம் பெற்றுள்ளன.*

*இலண்டனிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் (AFRAR ENQUIRY) என்ற ஏட்டிற்கு (ஜனவரி 1986 இதழ்) தார்விஷ் வழங்கிய பேட்டி இங்கு காப்படுகின்றது. (தமிழாக்கமும் குறிப்புகளும்: எஸ்.வி.இராஜதுரை, வ.கீதா).*

*மஹ்மூத் தார்விஷ்*



# போராட்டம் என்பதற்கு

# அதற்கே உரிய

# அழகும் அழகியலும் உண்டு...

*(தமிழாக்கமும் குறிப்புகளும்: எஸ்.வி.இராஜதுரை, வ.கீதா)*

*கேள்வி:- ஏகாந்தி என்றும் நழுவல்வாதி என்றும் சில சமயங்களில் நீங்கள் வர்ணிக்கப்படுகின்றீர்கள் இத்தகைய வர்ணனைகளில் ஏதேனும் நியாயமுண்டோ?*

*பதில்:- என்னிடம் ஏதோ ஒரு அளவு மெத்தனம் இருக்கின்றது. செல்வந்தர்களுக்கு வரும் நோய் இது. ஆனால் நானோ செல்வந்தன் அல்லன். எந்தவொரு குறிப்பிட்ட மண்ணோடும் எனக்கு பந்தம் இல்லாமல் போய்விட்டது. அந்தக் கொப்பூழ்க் கொடி துண்டிக்கப்பட்டு விட்டது. எனவே எந்தவொரு பிரச்சனையுமின்றி ஒரு இடத்தை மணம் புரிந்துகொள்ளவோ அல்லது விலக்கி வைக்கவோ என்னால் முடிகின்றது.*

*கேள்வி:- பெய்ருட்டில் நீங்கள் வாழ்ந்த காலத்தில் நீங்கள் சிரத்தை குன்றியும், மெத்தனமாகவும் இருந்ததாகக் கூறப்படுகின்றதே...*

*பதில்:- இந்த எண்ணத்தை ஏற்படுத்தியதே நான்தான். விரக்தி, அராஜகம் ஆகியவற்றின் குழந்தை நான். பெய்ருட்டில் நான் நடிகனாகவே இருந்தேன்.*

*கேள்வி:- அப்படியானால் உங்கள் கவிதையைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

*பதில்:- என்னை வடிவமைப்பது என் கவிதைதான். அது ஒருபெரிய விஷயமல்ல. வேதனையிலிருந்து பிறந்த விளையாட்டே அது. அதில் நையாண்டித்தனம் மிகுந்திருப்பதைக் காணலாம்.*

*கேள்வி:- அப்படியானால் வாழ்க்கை பற்றிய இந்தப் பார்வையுடன் கவிதை எவ்வாறு பொருந்திப்போகின்றது?*

*பதில்: குறிப்பிட்ட கவிதைப்பாணி அல்லது கவிதை மரபு என்ற அளவில் கவிதையானது கவிதையை உருவாக்குவதில்லை; உருவாக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட கவிதை மரபிற்கோ அல்லது இலக்கியக் கோட்பாட்டிற்கோ கட்டுண்டு கிடக்காமல் வாழ்க்கையை நேரடியாக, சுதந்திரமாக எதிர்கொள்வது அவசியம். இயற்கைக்கும் கலைக்கும் உள்ள உறவைப்பற்றி நாம் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் முடிவாக, கவிதை என்பது நமது பிரக்ஞையைக் கட்டவிழ்த்து விடுவதுதான். கவிதைகள் தாம்பாணிகளையும் மரபுகளையும் கவிதைகளை உருவாக்குவதில்லை.*

*கேள்வி:- இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழுள்ள பாலஸ்*

***தீனத்தில் உங்கள் குடும்பத்தார் இருக்கின்றார்கள். அவர்களுடன் உங்களுக்குத் தொடர்புண்டா?***

*பதில்:- எனது குடும்பம் முழுவதுமே இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழ்தான் வாழ்ந்து வருகிறது. நாடு கடந்து வாழவேண்டியவர்களுக்கு எஞ்சுவது தாய்நாட்டிற்கான ஏக்கம்தான். ஆனால் திரும்பிச் செல்ல எனக்குத் தைரியம் இல்லை. ஒருவேளை அங்கு நான் திரும்பிச் சென்று உயிரோடு இருப்பது சாத்தியமாலும் கூட, அங்கு வாழ்வதில் அர்த்தமில்லை. இருந்தாலும் எனது சகோதரர்களும், சகோதரிகளும் அங்குதான் வாழ்கின்றார்கள். என்னால் அவர்களை மீண்டும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. என்னால் முடிந்தது எல்லாம் ஏதாவதொரு நாட்டில் சௌகரியம் கிட்டும்போது அவர்களுடன் தொலைபேசியில் பேசுவதுதான்.*

*எனது நாட்டைவிட்டு வெளியேறுவது என்பது எனது வாழ்வைச் சுக்குநூறாக உடைத்தது. இது எனக்கு மட்டும் நேர்ந்தவிதியல்ல. நீங்கள் செல்லலாம்: பாலஸ்தீனியர்களின் போராட்டமே சுக்குநூறாக உடைந்து போனவற்றை ஒன்றுதிரட்டி ஒன்று சேர்க்கும் முயற்சிதான் என்று.*

*இந்தப் பொருளில்தான் எனது குழந்தைப் பருவம் என்பது தனிப்பட்ட ஒருவனின் கதை மட்டும் அல்ல. மாறாக அது ஒரு சமுதாயத்தின் கதை. பாலஸ்தீனம் தான் எனது குழந்தைப்பருவம். எல்லாப் பாலஸ்தீனியர்களுக்குமே அது அப்படித்தான். ஆனால் அது எங்களால் மறுபடைப்புச் செய்யப்பட வேண்டிய உலகமே தவிர தொல்கதைத்தன்மை பெற்றுவிட்ட ஆண்டலூசைப் * போன்றதொரு இழக்கப்பட்ட சொர்க்கம் அல்ல அது ஒரு யதார்த்தம். அது கடந்தகாலம் மட்டுமல்ல: அது வருங்காலமும்கூட.*



*எனக்கு ஆறுவயது இருக்கும்போதே 'கூடாரம்', 'செஞ்சிலுவைச் சங்கம்' 'அன்ர்வா' (UNRWA : UNITED NATIONS REFUGEE SERVICE FOR PALESTINIANS) போன்ற சொற்களை நான் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. நான் குழந்தையாக இருந்தபோது என்னை வந்து தாக்கிய பெரும் கற்கள் தாம் இச்சொற்கள். ஆனால் இந்தச் சொற்கள் தான் என்னைக் கவிதைக்கு இட்டுச் சென்றன. எனது தேசியத்தன்மை பற்றிய உணர்வை ஏற்படுத்தின. நான் ஒரு அராபியன் என்பதை உணரவைத்தன. அதே சொற்கள்தாம் என்னை நாடு கடந்து செல்ல வைத்தன. அதற்கானவேளை வந்தபோது.*

---

** ஆண்டலூஸ் (ANDALAUS) : இன்று ஸ்பெயினில் ஆண்டலூசியா என்று அழைக்கப்படும் பகுதி. அது பல நூற்றாண்டுகளுக்குமுன் அல் ஆண்டலூஸ் (AL ANDALAUS) என்ற பெயரில் நிலவிய ஒரு இஸ்லாமிய ஆட்சிப் பகுதியாகும். கல்வி, அறிவியல்களை முதலிய தழைத்தோங்கிய இந்த முஸ்லிம் அரசு, பின்னர் கிறிஸ்தவ ஐரோப்பிய மன்னர்களால் கைப்பற்றப்பட்டது.*

# கடைசி வானத்திற்குப் பின். . . .

மஹ்மூத் தார்விஷ்

இந்த மண் எங்களைச் சுரண்டி எடுக்கிறது,
கடைசிக் குறுகலான பாதையில் எங்களை
நெருக்குகிறது,
பாதையில் முன்னேறிச் செல்ல எங்களை நாங்களே
கூறுபோட வேண்டியுள்ளது,
இந்த மண் எங்களைப் பிழிந்தெடுக்கிறது.
நாங்கள் இந்த மண்ணின்
தானியமாகவேனும் இருந்திருந்தால்
மாண்டு மீண்டும் உயிர்த்திருப்போம்.
இந்த மண் நமது தாயாக இருந்திருந்தால்
நமது தாய் நம்மிடம் கருணை காட்டியிருப்பாள்.
நமது கனவுகள் சுமக்கும் கற்சிலைகளாக
நாம் இருந்திருந்திருந்தால்,
கண்ணாடிகளாக இருந்திருந்தால்-
நம்மில் கடைசி நபரின் ஆன்மாவையும் காத்து
அதனால் மடியப் போகிறவர்களின் முகங்களை
நாம் பார்த்திருக்கிறோம்.
அவர்களது குழந்தைகளின் பிறந்த நாளின் போது
நாம் அழுதிருக்கின்றோம்.
எங்களுக்குள்ள இந்தக்கடைசி வெளியின்
சாளரங்களிலிருந்து
எங்கள் குழந்தைகளைத
தூக்கியெறியக் கூடியவர்களின் முகங்களை
நாம் பார்த்திருக்கின்றோம்.
நமது நட்சத்திரத்தால் ஒன்று சேர்க்கப்படும்
கண்ணாடிகளாக இருந்திருந்தால்,
நாம் எங்கு செல்வது
கடைசி எல்லையைக் கடந்து?
பறவைகள் எங்கு செல்லும்
கடைசி வானத்திற்குப் பின்?
பரந்த கடைசிக் காற்றுவெளிக்கு அப்பால்
செடிகொடிகள் எங்கு வேர் கொள்ளும்?
செந்நிற ஆவியில் நாம்
நமது பெயர்களை எழுதுவோம்
நமது பாடலின் கரத்தை வெட்டி எறிவோம்-
நமது உடல் அப்பாடலை எழுதி முடிப்பதற்கு.
இங்கு நாம் மடிவோம்.
இங்கு குறுகலான பதையில்.
அல்லது நமது ரத்தம் இங்கு நட்டு வைக்கும்
தனது ஒலிவ மரங்களை.

கேள்வி:- தேசியத் தனித்தன்மை பற்றி நீங்கள் கூறினீர்கள். மதம் தரும் அடையாளம் பற்றி?

பதில்:- எனது குடும்பம் ஒரு முஸ்லீம் குடும்பம்தான். ஆனால் நானோ, பல மதங்கள் பன்னூறு ஆண்டுகளாய் சகவாழ்வு நடத்தும் பாலஸ்தீனத்தில் பிறந்தவன். பாலஸ்தீனம் எப்போதுமே முஸ்லீம்- கிறிஸ்துவ- யூத நாடாகவே இருந்து வந்துள்ளது. அங்கே இந்த மதங்கள் எல்லாவற்றுக்கும் இடம் உண்டு. நான் மதம் சார்ந்த தனித்தன்மையையும் அடிப்படைவாதத்தையும் நிராகரிக்கின்றேன்.

கேள்வி:- உங்களுடைய வாழ்வு விடுதலைப் போராட்டத்தாலும் கவிதையாலும் வரையறுக்கப்பட்டுள்ளது. கலைக்கும் போராட்டத்துக்குமிடையே பிணைப்பை எப்படி ஏற்படுத்துகின்றீர்கள்?

பதில்:- இதற்குச் சுருக்கமானபதில்: 'எனக்குத் தெரியாது'. போராட்டம் என்பதற்கு அதற்கே உரிய அழகும் அழகியலும் உண்டு என்று நான் கருதுகின்றேன். பொறுப்பற்ற முறையிலோ அல்லது என்னை நானே வருத்திக் கொள்ளும்வகையிலோ , நான் இப்படிச் சொல்லவில்லை. விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள்கள் மிகவும் அழகானவைதாம்; ஏனெனில் விடுதலையைப்பெறும் சந்தர்ப்பத்தை போராளிக்கு அவை வழங்குகின்றன. அதே சமயம் போராட்டத்தில் ஏற்படும் புண்களுக்குரிய ஒரு அழகியலும் உண்டு. ஒரு வகையில் போராளியின் வாழ்வே ஒரு அழகிய கனவைப் போன்றது என்று கூறலாம். கனவிலிருந்து விழித்தெழுதல் என்பது விடுதலையை அடைவதுதான்.

கவிதையும் போராட்டமும் சரிசமமானவை அல்ல. எதிர்ப்பைக் காட்டிலும் ஒருபடி மேலோங்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பாலஸ்தீனியனின் மூச்சும்- அது பாலஸ்தீனத்தைப் பற்றி இருப்பதால் மட்டும்- கவிதையாகி விடாது. எதிர்ப்புக்கும் கவிதைக்குமிடையில் ஒரு உறவு உண்டு; ஆனால் சமத்துவம் இல்லை. கவிதை படைக்க எங்களைத் தூண்டியது எங்கள் சூழ்நிலைமையே. ஆனால் நாங்கள் கவிதைகளைப் படைப்பது எங்கள் அவலத்தை வெளிப்படுத்துவதற்கு அல்ல. எத்தீனியர்களுக்கும் * எங்களுக்குமிடையே உள்ள வேறுபாடு இதுதான். அவர்களது அவல நாடகங்களில் காணப்படும் அவலம், யதார்த்த உலகின் அவலம்தான்; எமது மக்கள் அனைவருக்கும் ஏற்பட்ட அவலம்தான். அவர்களைப் போலவே அவர்களது துயரங்களும் அங்கீகரிக்கப்படவில்லை. நாங்கள் பலியாக்கப்பட்ட மக்கள். பலியாக்கப்பட்ட மக்களாகவே எங்களை நாங்கள் சித்தரித்துக் கொள்ளுகின்றோம்.

கேள்வி:- இது பாலஸ்தீனியன் பற்றிய சித்திரத்திற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. அவன் பலியாக்கப்பட்டவனா அல்லது பயங்கரவாதியா?

பதில்:- இவ்வாறு எதிரும் புதிருமாக அவர்களைக் காண்பது அர்த்தமற்றது. நான் யாரையும் கொலை செய்ததில்லை. பலியிடப்பட்டவன் என்றே என்னை நான் கருதுகின்றேன். அரேபிய- இஸ்ரேலியப் போராட்டத்



தைப் பற்றிய ஐரோப்பியர்களின் கருத்தை நாம் புரிந்து கொள்வது முக்கியம். அவர்களைப் பொறுத்தவரை பாலஸ்தீனியன் பலியிடப்பட்டவனாகவும், பயங்கரவாதியாகவும், நீதிபதியாகவும், சாட்சியாகவும் விளங்குகின்றான்- சமயத்துக்குத் தக்கபடி.

லெபனானில் நடந்த போரும், இஸ்ரேலியப் படையெடுப்பும் மேற்குநாடுகளின் அனுதாபத்தை எங்களின் மீது திருப்பியது. ஆனால் இந்த அனுதாபம் ஒரு ஏமாற்றுவேலைதான். இஸ்ரேலைப் பற்றிய தமது பார்வையை மேற்குநாடுகள் மாற்றிக் கொள்ள மறுக்கின்றன. நிலைமை இவ்வாறு நீடித்து வரும்வரை பாலஸ்தீனியன் இத்தகைய குழம்பிய சித்தரிப்புகளில் சிறையுண்டு கிடப்பான்.

கேள்வி:- அரபு நாடுகளில் பாலஸ்தீனியன் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றான் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

பதில்:- இந்தப் பிரச்சனையை வாழ்வில் நான்பெற்ற அனுபவத்தை 'அரேபிய அதிர்ச்சி' என்று வர்ணிக்க விரும்புகின்றேன். 1971 வரை நான் இஸ்ரேலில் வாழ்ந்து வந்தேன். அப்போது இஸ்ரேலியர்கள் இகழ்ந்த ஒவ்வொன்றையும் நான் பாராட்டிப் போற்றி வந்தேன். இஸ்ரேலியர்களைப் பொறுத்தவரை பாலஸ்தீனியர்களாகிய நாங்கள் இகழ்ச்சிக்குரியவர்கள் தானே. இந்த இகழ்ச்சியிலிருந்தல்லவா நம்பிக்கை பிறக்கும்! 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு நான் பலநாடுகளுக்குச் சென்றேன். அங்கு நான் கண்ட யதார்த்த நிலைமை அது எப்படி இருக்கவேண்டும் என்று நான் நினைத்திருந்தேனோ அதிலிருந்து மிகவும் மாறுபட்டிருந்தது. பல்வேறு அரபு அரசுகளும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளன. நெருக்கடிகள் ஏதும் ஏற்படாவண்ணம் இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கே அவை முன்னுரிமை தருகின்றன. இதன் காரணமாக பாலஸ்தீனியனும் அவனது பிரச்சனையும் அவர்களால் புறக்கணிக்கப்பட வேண்டிய விஷயங்களாகவே உள்ளன. ஆக்கிரமிப்பு அரசான இஸ்ரேலுடன் எவ்வகையில் தொடர்பு கொள்ளுவது

* எத்தீனியர்கள் (ATHENIANS) : பண்டைக்கிரேக்கத்தின் தலைநகரான ஏதென்ஸ் நகரவாசிகள்.

என்பதே இந்த அரபு அரசுகளின் அக்கறையாக உள்ளது. இதன் தொடர்ச்சியாகவே பாலஸ்தீனியப் பிரச்சனையை அவை பார்க்கின்றன. இந்த அரபுஅரசுகள் நடத்தும் போர் உண்மையில் தமது நாட்டு மக்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் எதிராக நடத்தும் யுத்தம்தான். இதை நான் உணர்ந்து கொண்டபோது அதிர்ச்சியடைந்தேன். வெறிச்சோடிக் கிடந்த பெய்ரூட்டில் தன்னந்தனியாக விடப்பட்ட பாலஸ்தீனியர்கள் மீது தாக்குதல் நடந்தபோது டெல் அவீவின் * தெருக்களில் நடந்த போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் தெரிவிக்கப்பட்ட ஆதரவு, அரபு அரசுகள் காட்டிய ஆதரவைவிட அதிகமாக இருந்தது. தமக்கென்று ஒரு தனிஅரசை நிறுவப் பாலஸ்தீனியர்களுக்கு உரிமை உண்டு என்பதைப்பற்றி அரபு அரசுகளைவிட அதிகமாகப் பேசியவர்கள் இஸ்ரேலியப் பிரமுகர்கள்தாம் என்பதைப் பாலஸ்தீனியர்கள் அறிந்தனர்.

இது விருப்பு- வெறுப்பு பற்றிய பிரச்சனை அல்ல. வேதனையானது சகிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்; குற்றங்களுக்காக வருந்தச் செய்ய வேண்டும். ஆனால் இது ஏதும் நிகழ்வதாகத் தோன்றவில்லை. எந்தவொரு குறிப்பிட்டகுழுவின் மீதோ சமுதாயத்தின் மீதோ எனக்கு வெறுப்பில்லை. எங்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமுள்ள வேறுபாடு இதுதான்: அவர்கள் பல யுகங்களாக ஐரோப்பா மீது காட்டிவந்த வெறுப்பிலேயே இன்னும் ஊறித்திளைத்துக் கொண்டிருக்கின்றார்கள். வெளியிலிருந்து வந்து எங்கள் மண்ணைப் பறித்துக் கொண்ட இஸ்ரேலியர்களைக் கூட நாங்கள் மன்னித்து விடுவோம்- எங்கள் இருப்பை அவர்கள் அங்கீகரிப்பார்களேயானால். இந்த அங்கீகாரம் எங்கள் நிலைமையில் ஏற்படும் ஒரு முன்னேற்றமாக இருக்கும்.

கேள்வி:- பெய்ரூட் முற்றுகையின்போது உங்களுக்கு என்ன நேர்ந்தது?

பதில்:- எனக்கு ஏற்பட்ட 'அரேபிய அதிர்ச்சி'யின் உச்சக்கட்டம்தான் பெய்ரூட் முற்றுகை. இஸ்ரேலியர்கள் எங்கள் நிலங்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி கனிகளைப் பறித்துச்செல்வதற்கான ஒரு அரசியல் சூழலையே, சாதகமான நிலைமைகளையே அரபு அரசுகள் உருவாக்கியிருந்தன. அரபு நாடுகள் மத்தியில் ஒரு தீவைப்போல் நின்று இஸ்ரேலியர்களின் முற்றுகைளைப் பாலஸ்தீனியர்கள் துணிச்சலுடன் எதிர்கொண்டிருக்கையில் அரோபியர்கள் எங்களுக்காகத் தொழுகை நடத்தினார்களேயன்றி வேறெதும் செய்யவில்லை. நான் இதையெல்லாம் பார்க்கவும் இவற்றைக் கண்டு கசப்புணர்வுடன் ஆத்திரமும் அடையவும் வேண்டியிருந்தது. நான் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதினேன். ஆனால் புண்களிலிருந்து இரத்தம் இன்னும் வடிந்து கொண்டுதான் இருந்தது.

பெய்ரூட்டை விட்டுத் தப்பி ஓடுவது எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. தொடர்ந்து புலம்பெயர்ந்து கொண்டிருப்பது அலுப்பூட்டுவதாக இருந்தது. பெய்ரூட் நகரத்திலேயே நான் இருந்தேன். இஸ்ரேலிய இராணுவம் கைது செய்ய முயற்சி செய்தது. எனது கசப்பான பிரமைகளை விழுங்கி விட்டு தப்பி ஓடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டேன். லெபனான் அதிகாரி ஒருவர் நான் தப்பிஓட இரகசியமாக உதவி செய்தார்.

கேள்வி:- இப்போது பாலஸ்தீனத்திற்குத் திரும்பிச் செல்வது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்:- ஒரு விஷயத்தை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பாலஸ்தீனம் ஒரு ஆண்டலஸ் அல்ல எனவே 'திரும்பிச்செல்லுதல்' என்பது சாத்தியமில்லை. கடந்தகாலம் கடந்தகாலம்தான். 'பாலஸ்தீனத்திற்குச் செல்லுதல்' பற்றித் தான் இப்பொழுது நாம் பேச வேண்டும். 'திரும்பிச்செல்லுதல்' என்பது காவியக்கனவுதான். 'பாலஸ்தீனத்திற்குத் திரும்பிச்செல்லுதல்' என்பது மேலும் சிறந்ததொரு எதிர்காலத்தை- புரட்சிகரப்பயணத்தின் விளைவாக மலரும் எதிர்காலத்தை- அங்கீகரிப்பதுதான். எனது கவிதை அந்த அந்திவேளைப்பாடல்தான். பொழுது புலரும்வரை அது ஒலித்துக் கொண்டே இருக்கும்.

---

* டெல் அவீவ் : இஸ்ரேலின் தலைநகரம்.



பாலஸ்தீனம்



மத்தியகிழக்கின் வரலாற்றில் புதியயுகம் தொடங்க வழிகாட்டுகின்றது உடன்பாட்டுப்பிரகடனங்கள்.

* பாலஸ்தீனவிடுதலை இயக்கம் இஸ்ரேலியஅரசினை அங்கீகரிப்பதுடன், அது அமைதியுடனும் பாதுகாப்புடனும் செயல்பட வழிவகைசெய்யும். - யாசீர் அரபாத் (தலைவர் பாலஸ்தீனவிடுதலை இயக்கம் 09/09/93 இல் இஸ்ரேலியப் பிரதமருக்கு எழுதிய கடிதவரிகள்.)

* இஸ்ரேலிய அரசானது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை, பாலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளுகின்றது. - யிற்சாக் றபின் (இஸ்ரேலியப் பிரதமர்)

சாத்தியம்தானா?.....

வரலாற்றில் திருப்பங்கள் எதிர்பாராதவை போல் தோன்றினாலும்.....

பாலஸ்தீனம் உணர்த்துவது மக்கள் தோற்பதில்லை என்பதைத் தான்.

எஸ்.பி.கே. முதலியாரா? ! ஐயாரா? !! அங்க பாரு மாமூ"

* * * * *

சுழலும் சக்கரத்தின் மத்தில் எஞ்சிய மண் அவன் விரல்களோடு குழைந்து வளைந்து எழுந்து சிறு சிறு கலயங்களாகிக் கொண்டிருக்கிறது.

எங்கோ சிறுவர், சிறுமியர் வீடுகள் கட்டி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். குயவனும் சிறுவர், சிறுமியர்களும் அப்படி அந்த நேரத்தை மெச்சிக் கொள்கிறார்கள்.

* * * * *

மஞ்சள் குங்குமம் தீட்டி நூல் அணிந்து வரிசை இருந்த சின்னஞ்சிறு கலயங்களிலிருந்து நீரை வெளியே ஊற்றும் போது சேர்ந்து வந்து சில்லரைக்காசுகளும் முகம் காட்டின.

* * * * *

ரொம்பவும் கனியாத தோல் உரிக்கப்பட்ட வாழைப்பழத்தை ஒரு சிறு கலயத்திலிட்டு விரல் போட்டு நசுக்கி கொஞ்சம் சக்கரையிட்டு பிசைந்து கொழக்... கொழன்று...

"சிந்தா... பஞ்காமிர்த முன்னு சொல்லி போடு..."

பஞ்சாமிர்த கலயம் சாய்ந்தது.

* * * * *

"டிரக் அடிட்... டாக்டரே... டிரக் அடிக் டேடு ஃபெல்லோ..."

மனைவி மக்கள் இவனோடு சேர்ந்து வாழமுடியாமல் பிரிந்து வாழப் பழகி பத்து வருடங்களுக்கு மேல் ஆகிறது.

இவனது கேலிப்பேச்சுக்கும் சிரிப்பிற்கும் விலக்காக எதுவும் எவரும் இல்லை. இவனது செய்கையால் நாம் வெறுப்புற்று கோபமுற்று இவனை திட்டும் போது, நம்மால் திட்ட இயலாதபடி அசட்டுத்தனமான பொருப்பற்ற ஒரு கஞ்சாச் சாமியாரின் முககளையோடு வந்து நம் அருகில் அமர்ந்து கொள்வான்.

"ஆனா.. நீ ஒரு போதும் உருப்பிட போறதில்ல ரமணி"

* * * * *

அந்த மண் கலயத்திற்குள் சாம்பல் பூசிக் கொண்டு கீழ்தாடை எலும்பும்

சிறப்புச் சிறுகதை

சந்துரு என்று பரவலாக அறியப்பட்ட சென்னை ஓவியக் கல்லூரியின் ஆசிரியரான ஜி.சந்திரசேகரனின் தசை நார்கள் தமிழ்நாட்டின் பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்டவை என்று யாரேனும் என்னிடம் கூறினால் நான் நம்பக்கூட செய்வேன். அந்த அளவுக்கு இந்த மண்ணோடும், மக்களோடும், மரபுக்கலைகளோடும் தொடர்பு கொண்டவர் அவர் நம்நாட்டு விலங்குகள், பறவைகள், மரம், செடிகொடிகளோடு நேரிடையான உரையாடல்களை நிகழ்த்தும் சந்துரு என்னும் கலைஞனின் கலை பற்றிய புரிதலும், கலை வெளிப்பாடும் அபூர்வமானவை.

\- இந்திரன் -

# யாருக்கோ சொல்ல நினைத்ததும் செய்ய நினைத்ததும்

('மண்' சிற்றிதழுக்கு வந்த இச் சிறுகதை எமது பிரசுரத்திற்காக அசோக் மூலம் கிடைக்கப் பெற்றது.)

ஓவியர்- சந்துரு

பல எலும்புத்துண்டுகளும் இருக்கிறது.

வேறு சிறு கலயத்திலிருந்து நெய்யை விரல் இட்டு தொட்டு எடுத்து அந்த எலும்புத் துண்டுகளில் இட்டார்கள்

வேறு கலயத்திலிருந்து பச்சைப் பசேல் என்ற கூழ். வேறு கலயத்திலிருந்து வெள்ளை நிறத்தில்.

"விரல்ட்ட அத தொட்டு (எலும்புத் துண்டுகளை) நெய் இடு".

விபத்து, நோய், பகை. இப்படி எதிலோ வலது கையில் ஆள்காட்டி விரல் முழுவதும், நடுவிரலில் பாதியும் துண்டிக்கப்பட்டு, தையல் இட்டு-ரணம் குணமாகி; மடித்த; பிதுங்கிய தசையும் தோலுமாக ஒருவர் நெய் தொட்டு இட்டார்.

கலயத்துள் மனப்பிண்டமாக எலும்புத்துண்டுகள். அருகில் இரு சிறு செங்கற்கள்; ரமணியின் வேறு இரு தேவ அசுர பிண்டமாக.

இவையாகிய மூன்று பிண்டங்களும் ஒவ்வொருவராக விரலிட்டு நெய்யிட்டு சென்றார்கள்.

* * * * *

எலும்புகளில் சேர்க்கப்பட்டது மாமிசக் கொழுப்பு... இல்லை.. பஞ்சாமிர்தம்... இல்லவே இல்லை அது மாமிசக்கொழுப்பு.

குருதியாக உடைந்த தயிரும் குங்குமம். குருதிப் பொன்னீராக இளநீர்.

இப்படியாக அனைவரும் கூடி கலயத்திற்கு உள்ளும் புறமுமாக ரமணியை உருவாக்கினார்கள்.

* * * * *

கை ஏந்திக்கொண்டும். இடுப்புத்துணியை தூக்கிப்பிடித்து ஏந்திக்கொண்டும். அரிசிப்பொரி அவல். வேர்க்கடலை. தேங்காய் துண்டுகளுக்காக சிறுவர், சிறுமியர் அங்குமிங்குமாக அலைகிறார்கள் இந்தக் கல் மண்டபத்தைச்சுற்றி.

கல் மண்டபத்தில் இருபக்கமுள்ள தடுப்புச் சுவற்றில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தது. கட்சி சின்னங்கள், ஆண் பெண் உருவங்கள் எழுதப்பட்டு இருந்தது.

ஆண் பெண் உருவப்படங்கள் சிறிதாகவும் சராசரி மனிதஉருவ அளவிலும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் ஆண் பெண் பாலியல் உறுப்புகள்,அவைகளுக்கான குறியீட்டு வடிவங்கள் மிகச்சிறிய அளவிலிருந்து பூதாகரமான மிகப் பெரிய அளவிலும் எழுதப்பட்டு இருந்தது.

அவரவருக்கு இயன்ற மட்டும் அழித்து எழுதி அழித்து... இரக்கமில்லாமல் வெளுத்த இருளாக கரிக் கோடுகள்.

* * * * *

ஆற்றங் கரையோரம் கெண்டக் கல் அளவு நீர் ஓடும் இடத்தில் ஒரு கல் மீது அமர்ந்து கால்களை அகற்றி சலப்பு..சலப்பு.. தலப்பு என நீரை ஓசை எழும்ப அடிக்க. கீழே படிந்திருந்த கசரு கலங்கி, கலங்கி ஆற்று நீரில் கலந்து கரைந்து ஓடிக் கொண்டிருந்தது.

ஆற்றுக்குள் தோள் அளவு தண்ணீர் ஓடும் இடத்தில்; நடந்து வந்த கரையைப் பார்த்து நின்று; தோளில் கொண்டுவந்த கலயத்தையும் இரு சிறு செங்கற்களையும் தோளிலிருந்து பின்புறமாகவே நீரில் நழுவவிட்டு, தானும் நீரில் மூழ்கி திரும்பிப் பாராமல் சாயம் வெளுத்த தலைமயிர்கள் அங்குமிங்குமாக முகத்தை மறைக்க,முகச்சதைகள் தொங்க குறுக்கே ஓடும் ஆற்று நீரை விலக்கி, விலக்கி சோகம் தள்ளாட தள்ளாட கரையை நோக்கி நடந்துவர.....

இதற்கு முன்பே இங்கு காலடியில் கண்ட எலும்புத்துண்டு ரமணியுடையது... இல்லை..., யாரோ தின்று போட்ட எலும்பு.. இல்லவே இல்லை..., யாருடையதோ.....

* * * * *

அங்கே மேய்ந்து கொண்டிரக்கும் சினை ஆட்டின் போனயீற்றுக் கெடாக்குட்டி தனது தாயின் அறையை நுகர்ந்தது, தனது வர்ணத்தை ஒத்த பெட்டைக்குட்டியின் (1)அறையை நுகர்ந்தது, ஒரு கருத்த பெட்டைக்குட்டியின் அறையை நுகர்ந்தது. முன்னங்கால்களை தூக்கி கவிழ்ந்த தலை ஒருபுறம் சாய எழுந்து ஒன்றோடு ஒன்று முட்டிக் கொண்டன, இலைதழைகளை மேய்ந்தன....

* * * * *

"ஏதோ சம்பிரதாய முன்னு இத சாதாரணமாக நெனைக்கிறோம். ரொம்பவும் சென்ஸ்லிடிவ் ஆன விசயம் இது. சைக்கலாஜிக்கலா சாஸ்த்திர சம்பிரதாயங்களுக்கு நெறைய மீனிங்ஸ் இருக்கு தோழரே..."

புரிந்தும் புரியாததாக தலைகள் அசைந்தன...

யாருக்கோ எதையோ சொல்ல நினைத்ததும், செய்யநினைத்ததும் முகம் அழிந்து போனது.....

(1) அறை - யோனி



# LEO FERRE



லெயோ.ஃபெறே

பாரீசின் கோடையில் திடீர் மழையும், நடுங்கும் குளிரும், சூரியனைக்காணா நாட்களும் தோன்றுவது அதிசயமானதல்ல- வழமைபோன்றே இந்தக் கோடையின் பருவகாலமும் கரைகிறது. 93 ஜுலை மத்தியில் ஒருநாள் கலைநகரில் தன்கலைவாழ்வினால் தடம்பதித்திருந்த பிரபல்ய பிரஞ்சுக்கவியும், பாடகரும், இசையமைப்பாளருமான லெயோ.ஃபெறே தன் மானுடவாழ்விலிருந்து விடைபெற்றுவிட்டார்.

பிரஞ்சுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி, வானொலி.... இன்னோரன்ன... தொடர்புசாதனங்களிலெல்லாம் இவரது தகவல்கள்!

. பிரஞ்சு அதிபர் மித்தரோன் கூறுகையில், 'கவிதையையும், இசையையும், மக்களின் காதல் கலைகளையும் 16 ம் நூற்றாண்டிலிருந்து இந்த நூற்றாண்டுவரையில் இணைத்துப் பார்க்க சந்தர்ப்பமளித்தவர் லெயோ.ஃபெறே' எனக் குறிப்பிடுகின்றார்.

தனது சிறுவயது மண்விளையாட்டின் போதே இசையை ஆளப்போகிறான் என்பதை துல்லியமாக வெளிப்படுத்தி வியக்க வைத்தவர் இவர். 50களின் பின் பிரஞ்சில் செய்த தாக்கங்கள் குறிப்பிடத்தகுந்தவை.

17 ம் நூற்றாண்டு பிரஞ்சுமொழி தழைத்தோங்கி இருந்தகாலம்- எங்கும் பிரஞ்சு இலக்கியம்பற்றி பரவலாக பேசப்பட்டு மகிழ்ந்திருக்கப்பட்டது. BAUDELANE, VERLAINE, RIMBAUD, APOLLINAINE, FRACOIS VILLON, ARAGON போன்ற புகழ்பெற்ற இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகளுக்கு இசைவடிவம் கொடுத்து காற்றில் பவனிவரச் செய்ததால் மதிப்பின் உன்னத ஸ்தானத்தை பெற்றார் ஃபெறே.

மிகவும் ஏழ்மை குடும்பத்தின் மூத்த மகனாக 24/08/1916 ல் பிறந்தவர் ஃபெறே. தகப்பனார் ஒரு காஸினோ (CASINO) கிளப் ஊழியர். தாயார் ஓர் மருத்துவச்சி. இக்குடும்பம் பிரஞ்சு இத்தாலியக் கலப்புக்குடும்பம்.

ஒதுங்கிவாழ்ந்த ஃபெறே 1945 இல் புதிய ஆலோசனையுடன் பாரீஸில் நுழைந்தார். பல்வேறு மாற்றங்களை கலை நகரம் அவருக்கு வழங்கியது. அவர் நகரத்திற்கு தன்திறமையான கலையை வழங்கினார்.

வானொலிக் குரலாளனாக, இசையாளனாக இவர் நிறையத்தடம் பதித்தவர். தன்னைப்பற்றிக் கூறுகையில் 'நான் மகிழ்வோடு இருந்தது சில மணித்துளிகள் மட்டுமே- அது எனக்கு கம்யூனிஸ்ட் அங்கத்துவ அட்டை கிடைத்ததிலிருந்து, எனது எண்ணங்களை கட்சியுடன் கதைக்க வாய்ப்பில்லாத சாதாரண அங்கத்துவம் என அறிந்து அந்த அட்டையை கிடாசி எறிந்த இடைவெளி நேரமே" என்கிறார்.

இலேசில் மசியாதவராக மற்றவர்களால் 'மிடுக்கானவர்' எனக் கூறப்பட்ட ஃபெறே நினைத்ததைச் சாதிக்காமல் விட்டதில்லை. 'ரொக்' இசையிலும் தன் புதுமையைச் செய்தவர்-

தான் அளித்த பொதுநிகழ்ச்சியின் பின் பெருமை, சந்தோஷம், களைப்பு இவற்றுக்கும் மத்தியில் இருகைகளையும் உயர்த்தியவாறு கண்ணீருடன் விடைகொடுக்கும் இந்த தத்துவ இசையாளன் சென்றவருடம் வழங்க இருந்த நிகழ்ச்சி கனவாகவே கலைந்துவிட்டது. OPERA வில் அளிக்கவிருந்த "UNE SAISON EN ENFER" - நரகத்தில் ஒருகாலம் - இவரது நோயினால் தடைப்பட்டுப் போனது.

இறுதியாக, ஃபெறே கூறியிருந்தார், 'என் உடலோ பலவழிகளில் மிகை நிரம்பி சிக்கலாகிவிட்டது. ஆனால் என் ஆத்மாவின் எதிர்பார்ப்போ உடலை முந்தி விரைவாகச் செல்கிறது. இன்று நான் திட்டங்கள் போடுகின்றேன். ஆனால் இவைபற்றி என்னால் நட்சத்திரங்களுக்குத்தான் கணக்குக் காட்ட கூடியதாகவிருக்கும்!"

தொகுப்பு: கந்தா

# எரிகின்ற நெருப்புக் கொள்ளி

உரிந்து கீழே போடு.
பாவாடையை கழற்றி விரி மெத்தையில்.
சட்டையை அகற்று
இடியப்பத்துக்கு
புழுக்கிய மாவை பிசைவது போல
உனது முலைகளை அவன்.
மரம் மாதிரி நீ நிர்வாணமாய்.

ஆண்மையின் வெறியை
வேலிக் கம்பு போல நீட்டிக் கொண்டு
வழமையாக அவன்.
இரவுகளில் தனது
பன்றிக் காமத்தை உன்னில் புதைக்கின்றான்.
கால் நீட்டி மல்லாக்கப் படுக்கிறாய்.

குசினிக்குள் உனது சுதந்திரம்
அடுப்பில் பற்றி எரிகின்றது.
சாம்பல்தான்.
சுரண்டுகிற சட்டியின் கரியாகக் கரைகிறது
வாழ்வு.
ஆக்கிப் போடுகிறாய்; நசிபடுவது கட்டிலில்
இப்படியாய்...

எனது குருதியில் வெப்பம் சீறிப் பாய்கிறது,
உன்னைப் பார்க்க.
இரவில் அவிழ்த்தெறியும்
உனது சேலையைப் போல
சோம்பேறி இருப்பை
பயத்தை
உரிந்து வீசி விட்டு
வா என்னோடு.

புருசனின் நெருக்குதலில்
பச்சைப் புண்ணாக நோவுகிற நரம்புகளில்
இரும்பின் வலிமையை பூசு.
இன்னும் வா....

அடுப்புக்குள்ளிருந்து எரிகின்ற
நெருப்புக் கொள்ளிகளை கைகளில் எடுத்து வா.
முறுக்கிப் பிழிந்து நெய்யைத் தடவு.
வை,
இந்த ஆண்மையின் அடக்குதலில்;
சமூகத்தின் கூரை முகட்டில்.

எம்.எல்.எம். அன்ஸார்
1992/08/17
* முகவரி மாறியிருக்கும் கவிதை

# என்மனம் என்னுடன் இருந்த இன்று

எழுந்து துள்ளினேன்
கவிதை உதிர்ந்தது.
நான் ஓட ஓட வீதி எங்கும்
கவிதை விழுந்தது.
ஒரு மரத்தின் நிழலில் இருந்தேன்
என்னால் வழிந்த கவிதை
நிலத்தில் ஊறி
தமிழ் மணத்து மயக்கும் ஓர் ஆறு பாய்ந்தது
சீறி.

தோணி விட்டபடி வந்தது
கானா.
ஆனாவும் ஆவென்னாவும் அதில் பூப்பறித்து
விளையாடிக் களைத்தன.
மீயென்னா
அந்த ஆற்றின் செழிப்பில் ஓரத்தில் முளைத்து
நின்று புற்களில்
ஏறி ஏறிக் குதித்து மகிழ்ந்தது.

பாட்டுப் பாடியபடி குளித்தது
அந்த ஆற்றிலே
தேன் நிலவு.
மேகக் குமரிகள் வலையை வீசிப்
பிடித்த மீன்கள்
உயிருடன் துடிக்கத் துடிக்க,
கூவென்னா.
கீயென்னா.
பீயென்னா.
டுனா.

ம்மென்னா ஆற்றின் கரையெல்லாம் துள்ளித் திரிந்தது,
மிட்டாய் உண்ணும் குழந்தையைப் போல
விரலை
வாய்க்குள் விட்டபடி.
கோனாவும் தேனாவும்
ஆற்றில் மலர்ந்திருந்த வெண்டாமரையைத் தலையில்
சூடியபடி நின்றன,
ஆயுத எழுத்தைத் தேடி
காதலிக்க.

ஔவென்னா, ஒரு கிழவியைப்போலதான் ஆற்றின் மறைவில்
காலை நீட்டி நெட்டி முறித்தது.
ச்சும் ப்பும்
அதனைப் பார்த்துச் சிரித்தன.


"மை" கிழட்டு ஆமையின் முதுகில் ஏறி அந்த
வட்டாரமெங்கும் வந்தது
வலம்
வெண்கொக்கின் தோளில்
தொனா.

நான் இன்னும் இருந்தபடி
மனிதர்கள் வாழும் சூழலில் இருந்ததைப்போல்
என்மனம் இன்று தொலையாமல் இருக்கிறது.
பஞ்சியாய், மெத்தையாய், பூக்கள் மலரும்
திடலாய்,
குளிராய்.

04.03.93

*- சோலைக்கிளி -*

# 'விதைகளை விதைப்பது ஒரு திருட்டுத்தனம்'



## மூன்றாம் உலகிற்கு ஓர் அபாயம்

### உயிரின அமைப்பின் வடிவுரிமை

*– றொபேர்டோ வேர்சோலா –*

உயிரின-அமைப்புகளை உரிமைப்படுத்துவதற்கு அதிகரித்துவரும் முயற்சிகள் மேற்கத்திய நாடுகளின் அறிவுச் சொத்துரிமை சட்டங்களில் ஓர் அதிர்ச்சி தரத்தக்க மாற்றமாகும். இவ்வாறு உரிமைப்படுத்தப்பட்ட உயிரின-அமைப்புகளில் பாக்டீரியா, எலி மற்றும் விதைகளும் அடங்கும். சிறப்புவகை பாக்டீரியாக்களும், ஈஸ்டுகளும் தொழிற்சாலை செய்முறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. உரிமைப்படுத்தப்பட்ட எலிவகைகள் எய்ட்ஸ் போன்ற நோய்கள் குறித்த மருத்துவ ஆராய்ச்சியிலும், விதைகள் உணவு உற்பத்தியிலும் பயன்படுத்தப்படுகின்றன.

இது போன்ற உரிமைப்பத்திரத்தை உடைய ஒருநாடு, ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு அது சம்பந்தப்பட்ட ஏகபோக உரிமையைப் பெறுகின்றது. இந்த ஏகபோக உரிமைகளின்படி இவ்வுரிமைகள் உள்ளோரைத் தவிர அல்லது அவர்களுக்கு மானியம் தருவோரைத் தவிர வேறுயாரும் அவ்வாறு உரிமைப்படுத்தப்பட்ட பொருளை உற்பத்தி செய்ய இயலாது.

உயிரின-அமைப்புகள் அவ்வாறு உரிமைப்படுத்தப்பட்டால், அந்த ஏகபோக உரிமை கற்பனைக்கும் எட்டாத விளைவுகளை ஏற்படுத்தும், எடுத்துக்காட்டாக ஒரு கோடி உரிமைப்படுத்தப்பட்ட எலிகள் வாங்கப்படுவதாக கொள்வோம். அவை இனப்பெருக்கம் செய்வது என்பது ஒரு உரிமைப்படுத்தப்பட்ட பொருளைத் தயாரிப்பதற்கு ஒப்பாகும். அதாவது ஒவ்வொரு எலிக்கும் தலைமுறை தலைமுறையாக மானியம் கொடுக்க வேண்டும். இவ்வாறு மானியம் கொடுக்க ஒருவர் மறுத்தால் உரிமைப்படுத்தப்பட்ட ஒரு பொருளை அத்துமீறி, அனுமதியின்றி பிரதி எடுத்ததாக அவர் குற்றம் சுமத்தப்படலாம். சுருக்கமாக அவர் 'கொள்ளைக்காரர்' ஆகிவிடுவார்.

இதேபோன்று ஒரு விதையானது உரிமைப்படுத்தப்பட்டால், அதை உங்கள் வீட்டுத் தோட்டத்தில் எளிதில் விதைக்கவோ, வளர்ந்த செடியிலிருந்து புதுவிதைகளை சேகரிக்கவோ முடியாது. புதுவிதைகள், மூலவிதைகளின் பிரதிகளாகும். அவற்றை எந்தவித மானியமும் உரிமை உடையோருக்கு கொடுக்காமல் அதிகாரப் பூர்வமற்ற பிரதிகளை எடுப்பது உரிமைப்படுத்தப்பட்ட ஒரு பொருளை பிரதி எடுப்பதற்கு சமமாகும். மானியம் ஏதும் தராமல் உரிமைப்படுத்தப்பட்ட விதைகளை விதைப்பது ஒரு 'திருட்டுத்தனம்'.

கணிப்பொறி இயக்குதிட்டங்கள் ஒருமைப்படுத்தப்பட்டதும் இதேநிலைதான். கணிப்பொறி இயக்குதிட்டங்கள் பிரதிகள் எடுப்பது எலிகளை இனப்பெருக்கம் செய்வது மற்றும் விதைகளை விதைப்பது போன்றே மிகவும் எளிதான செயலே. ஆனால் அப்பொருளின் உரிமையுள்ளோருக்கு மானியம் தராமல் அதை பிரதியெடுக்க முடியாது. இல்லையெனில் நீங்கள் திருட்டுத்தனம் செய்தவர்களாக குற்றம் சுமத்தப்படலாம்.

உரிமைப்படுத்தும் முறையை உயிரின-அமைப்புகளான பாக்டீரியா, தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கும் செயல்படுத்துவது சாதாரண செயல் அல்ல. இவ்வுரிமைப்படுத்தும் முறையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை கொஞ்சம் கற்பனை செய்து பார்ப்போம். இவ்வாறு உரிமை பெற்ற ஒருவர் தன்னுடைய உரிமைப்படுத்தப்பட்ட எலிவகை அல்லது விதை வகையினை விற்கிறார் என்று வைத்துக் கொண்டால் அப்பொருளை வாங்குபவர் வாங்கிய எலி வகையையோ அல்லது தாவரத்தினையோ மானியம் ஏதுமின்றி, அதிகார பூர்வமற்ற பிரதிகளை எடுக்கின்றார் என்று அப்பொருளை விற்றவர் அறிவது எப்படி? அவ்வாறின்றி ஒரு எலிவகையினை வாங்கியவர் அவற்றை தம்போக்கிற்கு விட்டு தாமாகவே இனப்பெருக்கம் செய்யும்படி விட்டால் என்ன செய்வது, அவ்வாறு விடப்பட்ட எலிவகைகளில் ஏதேனும் ஒன்றை எவரேனும் பிடித்து வைத்துக் கொண்டால் அவரும் திருட்டுக்குற்றம் செய்தவராக கருதப்படுவாரா?

புத்தகப்பதிப்பிற்கும், கணிப்பொறி இயக்குதிட்டங்களிலும் உரிமையுடையவர்கள்கூட இதே போன்று பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். சொல்லப்போனால், எலி விதைவகைகளை விடவும் கணிப்பொறிகளும், நகலெடுக்கும் கருவிகளும் வெகு வேகமாக பிரதிஎடுக்கக்கூடியன எனலாம். இக் கருவிகளில் டிஸ்க்குகள் (பல நூறு பக்கங்களின் செய்திகளை சேமித்து வைக்கக் கூடிய காந்த அட்டை) மற்றும் அச்சடித்த செய்திகளை கொண்டு எலிகள் இனப்பெருக்கம் செய்வதைவிட மிக வேகமாக பிரதிகள் எடுக்க முடியும். கணிப்பொறி செயல் திட்டங்களைக் கொண்டு பிரதி எடுப்பது தொலைபேசியின் மூலம் கூட சாத்தியமாகும். எலிவகையோ மனிதனோ கூட இவ்வாறு தம் பிரதிகளை எடுக்க இயலாது.

ஒரு பொருளுக்கு உரிமையுடையவர்கள் தங்களுடைய ஏகபோக உரிமையை நடைமுறைப்படுத்துவதில் பலசிக்கல்களை சந்தித்துள்ளனர். மற்றுமொரு முக்கியமான விஷயம்கூட தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது. மேற்கத்திய நாடுகளில் உயிர்-தொழிற்நுட்ப மாற்றம் மரபியல்

தொழிற்நுட்ப ஆய்வுக்கூடங்கள் புது உயிரினங்களை ஏதும் உண்மையில் உருவாக்குவதில்லை. ஏற்கனவே உள்ள சாதாரண பாக்டீரியா எலி அல்லது விதைவகைகளையே அவர்கள் பயன்படுத்தி தேவைப்படும் பண்புகளுக்கான குறிப்பிட்ட மரபியல் மாற்றங்களை செய்கின்றார்கள். கிடைத்த முடிவுப்பொருளே உரிமைப் படுத்தப்படுகின்றது.

தொழில்வளநாடுகள், மூன்றாம் உலகநாடுகளின் அறிவுச்சொத்துரிமை பற்றிய தங்கள் சட்டங்களை கடுமையாக்க எண்ணியுள்ளன. இதில் உயிரின-அமைப்புகளை அதிகார உரிமைப்படுத்துவதும் அடங்கும். இந்த நடவடிக்கை தொழில்வளநாடுகளை அறிவுச் சொத்துக்களின் 'கொள்ளைக்காரர்களாக' ஆக்கும்.

மூன்றாம் உலக நாடுகளின் உயிரினங்கள்:

எது எப்படியாயினும் மேற்கத்தியர் தங்களது ஆய்வுகளை ஆரம்பிக்க பயன்படுத்தும் பெரும்பாலான தாவரங்களும் விலங்கினங்களும் உண்மையில் அவர்கள் நாட்டினைப் பிறப்பிடமாக கொண்டவை அல்ல. பல மூன்றாம் உலகநாடுகளையே சேர்ந்த அவற்றை இலவசமாகவே பிரதியெடுத்து நூற்றாண்டுகளாக சேகரித்து வைத்துள்ளனர். உதாரணமாக சேனைக்கிழங்கு மற்றும் கோதுமை போன்ற தானியங்கள் ஆப்பிரிக்காவை பிறப்பிடமாகக் கொண்டவை. வெங்காயமும் பூண்டும் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவை. வெள்ளை வெங்காயமும் தேயிலையும் சீனாவைச் சேர்ந்தவை. மிளகு, குட்ட ரக கோதுமை, அரிசி ஆகியவை இந்தியாவைச் சேர்ந்தவை. காப்பி பயிரோ எத்தியோப்பியாவை சேர்ந்தது. பெரும்பாலான இத்தாவர வகைகளும் விலங்கினங்களும் மூன்றாம் உலக நாடுகளின் விவசாயிகள் காலங்காலமாக பாதுகாத்து, உற்பத்திப்பெருக்கம் செய்து சேகரித்து வைத்ததின் விளைவேயாகும்.

இன்னும்கூட மேற்கத்திய விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் சுற்றுலாப்பயணிகள் ஏன் தன்னார்வக்குழுக்களும்கூட உலகெங்கும் உள்ள உயிரினவகைகளை வெகு சுதந்திரமாக சேகரித்து மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்புகின்றனர். அங்கே இவைகள் பரிசீலிக்கப்பட்டு புதிய உயிரினங்கள் அவற்றிலிருந்து பெறப்பட்டு அவையையும் உரிமைப்படுத்திக் கொள்கின்றார்கள். தற்போதைய நிலையில் இந்த உரிமைப்படுத்தப்பட்ட உயிரினங்களை உற்பத்தி செய்ய விரும்பினால் அவற்றிற்கு மானியம் கொடுக்க வேண்டும்.

பெரும்பாலான மேற்கத்தியநாடுகளும், பன்னாட்டு நிறுவனங்களும் பல்வேறுபட்ட பொருட்களின் மீதும் உயிரினங்களின் மீதும் தங்களுக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் ஏகபோக உரிமையை பாராட்டி அவ்வுரிமைகளை திணிக்க முயல்கின்றன. இதில் குறிப்பிடத்தக்க வேடிக்கை என்னவெனில் இம்மாதிரியான பல உயிரினங்கள் வெகு எளிதில் தாமாகவே இனப்பெருக்கம் செய்து கொள்ளக்கூடியவை.

அறிவுச் சொத்துரிமைகளை அவர்கள் ஒரு மிகப்பெரிய பிரச்சனையாக்கினார்கள், தற்போது நடைமுறையிலுள்ள உரிமைப்பத்திரச் சட்டங்களை கண்டிப்புடன் அமுல்படுத்தவும், அறிவுச் சொத்துரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டங்களை மிகத் தீவிரமாக அமுல்படுத்தவும் மூன்றாம் உலக அரசாங்கங்களை மேலும் மேலும் அவர்கள் கட்டாயப்படுத்துகின்றனர். அவ்வாறு செய்யாவிடில் பழிக்குப்பழி நடவடிக்கை எடுக்கப்போவதாக மிரட்டுகின்றன.


எஸ்டிராடா திட்டம்:

தற்போது நடைபெற்றுவரும் வர்த்தகம் மற்றும் தீர்வைகள் மீதான 'பொது உடன்பாடு (GATT) குறித்த உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் மேற்கத்தியநாடுகள் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. இத்திட்டத்தின்படி, 'வர்த்தகம் சம்பந்தப்பட்ட அறிவுச்சொத்துரிமைகளை (TRIP) அவை புதிதாக அறிமுகப்படுத்துகின்றன. GATT என்பது சர்வதேச வர்த்தகத்தில் தடைகளாக இருக்கும் தீர்வைகளை பலதரப்பு பேச்சுகளின் மூலம் குறைப்பதற்கான ஒரு அமைப்பாகும். சுதந்திரமான வர்த்தகத்திற்கு ஏகபோக உரிமைகள் தடைகளாக முன்பு கருதப்பட்டு வந்தன. ஆனால் தற்போதோ TRIP இன் மூலம் அதே ஏகபோக உரிமை முறையை அமுல்படுத்தும் முயற்சி நடக்கின்றது. 'வர்த்தகம் சம்பந்தப்பட்ட' என்று பெயரிடுவதன் மூலம் பல்வேறு பொருட்கள் மற்றும் உயிரினங்களின் மீது தங்களுக்கிருக்கும் ஏகபோக உரிமையை மேல்பூச்சு பூசிக் கொண்டாடுகின்றன.

இத்திட்டத்தின்படி உரிமைப்பத்திர உரிமைகள் மீறப்பட்டால் அவை 'வர்த்தகப் போக்கினைக்' கெடுப்பதற்கு ஒப்பாகும் என்று அறிவிக்கப்பட்டு இதனால் GATT இன் நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும் என்றும் எச்சரிக்கப்படுகின்றது. ஏனெனில் பழிக்குப்பழி நடவடிக்கை எடுக்கத் தகுந்த அனைத்து நவீன சாதனங்களையும் GATT கொண்டுள்ளது. மேற்கத்திய அனைத்து நவீன TRIP திட்டத்தினை GATT ஏற்றுக் கொண்டுவிட்டால் தொழில்நுட்ப பரிமாற்றம் குறித்த மூன்றாம் உலக முயற்சிகளுக்கு ஒரு பெரும் பின்னடைவாக அது அமையும். தொழில்வள நாடுகளின் இந்தத்திட்டம் அனைத்தும் GATT உறுப்புநாடுகளிலும் உள்ள உயிரினங்களைக் கட்டாயமாக உரிமைப்படுத்தும் கூறினையும் உள்ளடக்கியது.

உயிரினங்களை அதிகார உரிமைப்படுத்தும் முயற்சிகளை மூன்றாம் உலகநாடுகள் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். 1987 இல் அமெரிக்காவில் மட்டும் உயிரினங்களை அதிகார உரிமைப்படுத்தும் செயல்பாட்டிற்கான 6000 த்திற்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையிலிருந்தன. மூன்றாம் உலகநாடுகள் தற்போது இந் நடவடிக்கைகளை கவனியாமல் இருந்துவிட்டால், பின்னொரு நாள் அவர்கள் விழித்தெழும் போது, தாங்கள் உரிமைப்படுத்தப்பட்ட உயிரினங்களின் திருடர்களாக்கப்பட்டதை-திடீரென திருடர்களானதை உணர நேரிடும்.

நன்றி: மூன்றாம் உலக ஒருங்கிணைப்பின் செய்தித் தொகுப்பு



# மௌனம்

## தூவானம்

மௌனம் பார்த்தேன். "மௌன உடைவுகள்", "பழி" சிறுகதை, "எலிசபெத் உதயனன்" பேட்டி, சில நறுக்குகள் குறிப்பாக ஆடைப்பாளன் எழுதிய குட்டிக்கதை மௌனத்திற்கு அர்த்தம் சேர்த்த ஆக்கங்கள். "பழி" சிறுகதை நடுவில் சில இடங்களில் நெருடினாலும் நெடுங்காலத்திற்குப் பின்னர் நான் வாசித்த நல்ல சிறுகதை. மௌன உடைவுகளில் தனது வாழ்வின் அவ்வப்போது சண்டைகளையும், கோபங்களையும் அதிகமாக எழுதி, எளிதும் மௌனமும் ஏமாற்றத்தையும் தருகின்றது. மூன்றாம் உலகம், கறுப்பர் கட்டுரைகள் முறையாகத் தொகுக்கப்படவில்லை. உம் இதழ்களுக்குப் பொருந்தக்கூடிய விடயங்கள் ஒரு இதழில் திணிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் எடிற்றிங்கில் நாட்டம் நேரமும், கவனமும் செலுத்த வேண்டும். உள்ளடக்கம் எனது ஏமாற்றத்திற்கு முக்கியகாரணம் வடிவமைப்புத் தான். மறுபிரசுரம் ஒன்றுக்கு மேல் இடம்பெறாதவைது விடயத்தைப் பற்றி சமகாலங்களது கருத்துக்களை * தொகுக்கலாமே.

வ.ஐ.ச.ஜெயபாலன் ✉ ● ஒஸ்லோ

தாயகத்திலிருந்து பிரிந்து, வேறிடத்திலிருந்தாலும், மக்களிடையே சிறந்த கருத்துக்களைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற தங்களுடைய அவாவிற்கு தலைவணங்குகிறேன். தங்களுடைய குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி ஐரோப்பிய நாடொன்றில் ஒரு சிற்றிலக்கிய இதழை வெளிக்கொணர்வதிலுள்ள கஷ்டங்கள் பற்றி அறிந்துள்ளோம். எத்தகைய சிரமத்தையும் எதிர்கொண்டு இதைக் கொண்டு வந்த தங்கள் ஆர்வம்கண்டு மகிழ்ச்சியுறுகிறோம். மௌனம் இதழ் மென்மேலும் வளர்ச்சியுற எங்கள் வாழ்த்துக்கள். தற்பொழுது சமுதாயம் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகளை, கலை - இலக்கியம் பற்றி மட்டும் வெளியிடுவதன் மூலம் தீர்த்துவிடலாம் என எண்ணுகிறீர்களா? மௌனம் முழுவதும் "சுபமங்களா"வின் மறுபிரசுரமாக உள்ளதே! இது குறித்து தங்கள் இரண்டாம் பக்கத்தில் எழுதியிருந்தாலும் மௌனம் தனது தனித்தன்மையைக் காட்டாதா? மௌனத்தின் வடிவமைப்பு சிறப்பாக உள்ளது. பணி தொடர வாழ்த்துக்கள்.

சி.நெடுஞ்செழியன் ✉ ● சென்னை

மௌனம் சிறப்பாக இருந்தது. பல அறிவூட்டும் விடயங்களை அழகிய மாலையாக தொகுத்து தந்த தொகுப்பாளருக்கு நன்றிகள். இந்த நாட்டில் அகதிகளாக தஞ்சம் கோரியுள்ள நாங்கள் இந்த நாட்டையும், இந்நாட்டு மக்களையும் தெரிந்து கொள்ளாமல் இருப்பது நல்லதல்ல. இதுவரை காலமும் இந்நாட்டில் வெளிவந்த எமது தாய்மொழிப் பத்திரிகைகள் அவற்றை செய்ய மறந்து விட்டன. மௌனம் அக்குறையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை அரும்பு விட்டுள்ளது. மௌனம், மௌனமாக ஒரு குறையை விட்டுள்ளது. மங்கையரை மறந்து விட்டதா? சற்று பங்களிப்பு கொடுத்திருக்கலாமே!

நல்லையா வாசுகி ✉ ● கிளிச்சிப்ரான்ச

மௌனம் இலக்கிய ஆர்வலர்களிடம் ஒருபிடிப்பை ஏற்படுத்தியுள்ளதை பார்க்க முடிகிறது. "மௌனம்" பல நல்ல விடயங்களோடு முழுமையாகக் காணப்படுகின்றது. புத்தகத்தோற்றம் திருப்தியாக உள்ளது. ஒரு அழகும் காணப்படுகிறது. சில கட்டுரைகளில் போலிப் பூச்சுக்களின் உடைப்புகள் நன்றாகச் செய்யப்பட்டுள்ளது. மௌன உடைவுகளில் இவை தெரிகின்றது. எனது கதையில் ஒரு இடத்தில் முட்டுச்சம்பு என இருந்ததற்கு அட்சம்பு என புதுச்சொல் புகுந்திருக்கிறது.

திலக் ✉ ● கலீஸ

இதழின் அட்டை சிறப்பாக அமைந்துள்ளது. உள்பக்கங்களின் வடிவமைப்பில் இன்னும் கவனம் செலுத்தலாம். இதழ் முயற்சிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

வைகறை ✉ ● சென்னை

இதழைக் கண்டதும் பிரமித்துவிட்டேன். முதல் இதழ் இவ்வளவு சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்குவதை நான் இதுவரை கண்டதில்லை. எனது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும். இதழ் அமைப்பில் ஏனைய இலக்கிய இதழ்களிலிருந்து வேறுபட்டிருப்பதை அறிகின்றேன். அட்டைப்படமும், இதழின் தலைப்பும் மிகப்பொருத்தமாக உள்ளது. அநாமிகனின் "தேவை - மறுசிந்தனை" மிக நன்றாக உள்ளது. அவரது சொல்வாட்சி, சொற்கோர்வை உண்மையிலேயே பாராட்டுக்குரியது. புதுமை என்ற வெளிவிழிக்கதை வாசிக்கச் சிரிப்புத் தான் வந்தது. கி.பி.அரவிந்தனின் "மௌன உடைவுகள்" அவரது மன உணர்வினை வெளிப்படுத்தியுள்ளது. அடிமனதில் அவருக்கும் "லண்டன் கனவு" இருந்திருக்கிறது என்பது புரிகிறது. பல குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. எழுத்துப்பிழைகளே அதிகம். ல,ழ வேறுபாட்டுத் தவறுகள். பிரெஞ்சுப்பெண்மணி எலிசபெத் உதயனன் சந்திப்பு கி.பி.அரவிந்தன், வரன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருவரும் சேர்ந்து "கதலைத்தட்டினோம்"... எனப் பன்மையில் தொடங்கி,

இடையில் நான் என ஒருமையில் எழுதி முடிவில் மகிழ்ச்சியுடன் நாமும் விடை பெற்றோம் என முடிவுறுகின்றது.
தமிழர் பண்பாடு சங்கரர், இராமனுஜயர், மாதவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மத்துவர் என்பது மாதவர் எனத்தவறுதலாக இடம் பெற்றுள்ளது. இதழில் உள்ள அநேகமான விடயங்கள் சுபமங்களாவிலிருந்து மறுபிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது. ஏன்? சுபமங்களாவிலிருந்தே எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமா? இது உங்களது இதழின் தனித்துவத்திற்கு முட்டுக்கட்டையாக அமையும்.

குயிலி ● யாழ்ப்பாணம்

பிரான்சில் வாழும் தமிழ்மக்களுக்கு தரமுள்ள பத்திரிகை இல்லாத குறையை தீர்த்துவைத்த உங்களின் முயற்சிக்கு என் உண்மையான பாராட்டுக்கள். இதழின் குறிக்கோள், பலகோணங்களிலும் கருத்துக்களை அலசும் மனப்பான்மை அவற்றை எடுத்தளித்த விதம் எல்லாம் வரவேற்பிற்குரியன. மேற்கத்திய நாடுகளிடமிருந்து மேல்நாட்டு மோகத்தை அப்பட்டமாக விளக்கும் அரவிந்தன் அவர்களின் கட்டுரைக்கும் சிறப்பு பாராட்டுக்கள். (உண்மையில் 20ம் நூற்றாண்டின் இறுதியில் நாம் அனைவரும் கலாச்சாரங்களின் கலப்பாகவே இருக்கின்றோம்.!)
அடுத்த இதழில் பொருளடக்கம் ஒருபக்கமும், சந்தா அனுப்புவதற்கான படிவம் ஒன்றும் வாசகர் விருப்பம் பகுதி ஒன்றும் இணைத்தால், கருத்து பரிமாறல் இன்னும் நல்லமுறையில் நடக்க வாய்ப்பிருக்குமென நினைக்கின்றேன்.

பூ.தொரே ● அனியர்,பிரான்சு

மௌனம் "ஆகவே"யின் அப்துல்ஜப்பாரிடமிருந்து கிடைக்கப்பெற்றது எவ்வளவு நல்லதாகப் போயிற்று. தற்செயல்தான் ஆனால் மௌனத்துடனான ஒரு பெரிய தொடர்பிற்கு வழிகோலியாக அமைந்த சந்தர்ப்பங்களும், உரித்தாளர்களும் நன்றிக்குரியவர்கள். ஆரம்பத்தில் "மௌனம்" என்ற தலைப்பிற்கும் எனக்கும் உடன்பாடில்லாமல் தான் இருந்தது. என்னது மௌனம்? சீற்றமான மனிதம் கொந்தளித்து வாடி, துவண்டு அல்லலுற்று அவதிப்படும் இச்சமயத்தில் எம் தாய்மண்ணே கண்ணீரால் கரைந்து போகும் போது மௌனம் என்ன மௌனம் என உறுத்திக் கொண்டிருந்தது. போகப்போக... மௌனத்தை விளங்கி இதழிலே ஊன்றியபோது ஒருநாள் திறக்கும் தருணத்தில் தான் "மௌனமென்பது"? சரிதானென்றுபட்டது. மௌனிப்பின் உத்வேகம் குமுறிக்குமுறி வெளியே தள்ளுமொரு நாளில் எரிமாலையாகியதான வேளையில் எதுவுமே முன்னின்று தள்ளமுடியாததாகி விடுமல்வா? தரம் என்று பார்க்கும் போது சிலவைகள் மறுபிரசுரம் என்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. ஆனால் அதுவே வாய்ப்பாடாகி விடும் பொழுது சோபையிழந்த மௌனத்தைத் தான் உங்களால் தந்து கொண்டிருக்க முடியும். பிராந்திய கொந்தளிப்புகளாலான காத்திரமான தற்கால நிலமைகளை உன்னிப்போடு மௌனம் சுமந்து வருவதையே மௌனத்தின் வாசகர்கள் நேயர்களின் விருப்பமாக அமையும்

இளைய அப்துல்லாஹ் ● இலங்கை

அச்சும் அமைப்பும் அதனை நிமிடக்கணக்கில் படிக்காமல் பார்த்துக் கொண்டிருக்கத் தூண்டியது. முகம் தெரியாத நெஞ்சங்கள் முகவரி தெரிந்து அனுப்பும் சஞ்சிகைகளும் நூல்களும் என்னைத்தேடி வருவதுகண்டு நான் வியப்படைவதுண்டு. அவைகளை எனது தினகரன் வாரமஞ்சரி அறுசுவை பகுதிமூலம் அறிமுகப்படுத்துவதுண்டு. மௌனம் என்னை மிகவும் ஆர்கஷித்தது. அடுத்த இதழ் எப்பொழுது வருமென ஆர்வத்துடன் காத்திருக்கின்றேன்.

அந்தனி ஜீவா ● கொழும்பு

தொகுப்பாளர் என்பது ஆசிரியராக மாறவேண்டும். தொகுப்பிதழ் என்பது இதழாக மாறவேண்டும். இவவாறு அமைந்தால்தான் இதழுக்கு இங்கு மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். எனக்கு மௌனத்தின் அட்டை மட்டும் பிடித்துள்ளது. தொகுப்பிதழாக வந்தது பிடிக்கவில்லை. "ஈழத்துப் படைப்பாளிகளின் ஆழமான ஆக்கங்களை வெளியிடுங்கள். மற்ற பத்திரிகைகளிலிருந்து எடுத்துப்போடும் பழக்கத்தை கைவிடுவது நல்லது.

அதியமான் ● சென்னை

மௌனம் இதழ் மிகவும் கவனத்துடன் தயாரிக்கப் பெற்றுள்ளது. தமிழகஇதழ் "சுபமங்களா" விலிருந்து பலபகுதிகள் மறுபிரசுரம் செய்யப் பட்டுள்ள போதிலும் சில அசலான பகுதிகள் கனமாக உள்ளன. பலரும் தங்கள் முகத்தை அருமையாகக் காட்டியுள்ளன. தமிழகத்தில் பலசிற்றிதழ்கள் தோன்றி மறைந்த வண்ணம் சரியான அடித்தளமின்மையால் நிலைத்து நிற்பன மிகச்சில. கொள்கை அற்றவை, இனக்குழு சார்ந்தவை, முற்றிலும் அந்நியத்தன்மை கொண்டவை, இப்படிப்பல சில இதழ்களோடு உதிர்ந்து விடுகின்றன. தாமரை, செம்மலர், சுபமங்களா, இனி போன்ற இதழ்கள் சில அரசியல் கட்சிகளின் பலத்தாலும் தனிமனித செல்வாக்காலும் தொடர்ந்து வருகின்றன. அவை யாவும் உலகப்பார்வை கொண்டவை என்று கூறமுடியாது. தங்களுக்கு இடப்பட்ட வட்டங்களை மீறுவதே பாவம் என்ற எண்ணத்தில் இயங்குபவை. சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் அவர்களின் பரந்த சிந்தனையும், விரிந்த நோக்கும் இதழை ஒட்டிக் கொண்டிருக்கின்றன. உலக அளவில் தமிழின இலக்கிய இதழாக "மௌனம்" சிறக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். நிறவெறியில் துயருறும் தென்னாபிரிக்கர், பிற கறுப்பினத்தவர், பாசிச இனவெறியில் இங்கிலாந்திலும், ஜேர்மனியிலும் வேட்டையாடப்படும் ஆசியர், இப்படி உலகமானுட இனங்களின் ஒட்டுமொத்தக் குரலாக மௌனம் இருக்க வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

கனிவண்ணன் ● நாகபட்டினம்

சென்றவாரம் கருணையோகன் மட்டுநகரிலிருந்து மௌனம் பற்றி செய்தி அனுப்பினார். நேற்று ஜீவாவை யாழில் சந்தித்தபோது மௌனம் கண்டேன். 200பேரில் என்னை நினைக்கவில்லையே என்ற மனவருத்தம்

மௌனம் [illegible] இருக்கிறது. தரமான அமைப்பு [illegible] விடயதானங்களை [illegible] போட்டதால் [illegible] மௌனம் தொடர்ந்து [illegible] ஆசை [illegible].

மௌனகுகன் ✉ ● இலங்கை

[illegible] "மௌனம்" [illegible] அமைப்பு [illegible] [illegible] இருக்கிறது [illegible] பிரச்சனைகள் [illegible] அந்த [illegible] தமிழ் [illegible] [illegible] இத்தனைக்கும் [illegible] இதுவரை [illegible] சொல்கின்றது.

[illegible] ✉ ● [illegible]

தரமான ஒரு [illegible] இலக்கிய இதழைத் தமிழில் வெளிக்கொண்ட முயற்சியை முதலில் சாம்தாழ்த்தி மரியாதையுடன் [illegible]. வெறும் [illegible] மௌனம்

சிந்தனையின் அடையாளம். மௌனமாயுள்ளபோதெல்லாம் சிந்திப்பவர் என்றில்லை.
ஒரு மௌனம் உடையும் போது அது பேசவேண்டும். அர்த்தப்பேச்சு [illegible] பத்திரிகையாக முடியும். ஒரு பத்திரிகை மௌனமாயிருத்தல் அசாத்தியம் [illegible] ஒரு மௌனம்தான் பத்திரிகை! [illegible] பெயரை மறுபரிசீலனை செய்யுங்கள்.
தமிழ் [illegible] [illegible] உணர்வோம்.

பொ.கருணாமூர்த்தி ✉ ● [illegible]ஜேர்மனி

மௌனியே!
சூரிய அஸ்த மனத்தில்
தலைகுனியும்
சூரிய காந்திகள்
விழிப்பில்......

நவநீதன் ✉ ● இலண்டன்

## வெளியீட்டாளர் குறிப்பு:



சிறிய தாமதத்துடன் மௌனம்-2 இதழ் உங்களிடம் இருக்கையில், எங்களுக்கு உற்சாகமூட்டிய உங்களுடன் இதமாக சில வார்த்தைகள்.

எதிர்பார்ப்பிற்கு மேலாகவே மௌனம் சகலவிதமான விமர்சனங்களையும் அள்ளிக்கொண்டது. கடிதமாகவோ, தொலைபேசியூடாகவோ, நேரடியாகவோ, தமது பத்திரிகைகள், சஞ்சிகைகளுடாகவோ அன்றி மானசீகமாகவோ நீங்கள் கொண்ட விமர்சனங்களையும் கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்ளும் அதேவேளையில் அனைவருக்கும் எம் நன்றியைத் தெரிவிக்கின்றோம். இம்முறை இதழ் மேலும் நான்கு பக்க அதிகரிப்புடன் 500 பிரதிகளாகி தொடர்பை விரிக்கின்றது. வழமைபோல இவ்விதழும் தனிச்சுற்றுக்கென பரவலாக கலைஞர் உதவியை நாடுகின்றது. வாசகநெஞ்சங்களின் உளப்பூர்வமான தொடர்பை மேலும் எம்மை வளர்க்குமென உறுதியுடன் நம்புகின்றோம்.

வெளிநாடுகளிலிருந்து இலக்கிய இதழ் வெளிக்கொண்டு வருவதிலுள்ள சிரமம் பரவலாக வாசகர்களினால் அறியப்பட்டதே. எம்நிலை உணர்ந்து எமக்கு கைகொடுத்துள்ள பாணி-பிரபா, பயஸ், நல்லையா, சின்னையா- புவனா, செபஸ்ரியன்-சீலன், கிளி, பொன்-வாசுதேவன், அன்பழகன், பாலகிருஷ்ணன், குகன், கண்ணன், சாந்தன், கலைச்செல்வன் ஆகியோரின் அன்பிற்கு கடமைப்படுகின்றோம்.

தவிர, பத்திரிகைவாயிலாகவோ, நண்பர்களின் மூலமாகவோ அறிந்து மௌனம் வாசித்து தொடர்பு கொண்டவர்களுக்கும், கருத்துக்கள், விமர்சனங்கள் எமக்குத் தெரிவித்தவர்களுக்கும், ஆக்கங்கள் தந்தவர்களுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

முதல் இதழின் கருத்துக்களாக வந்த கடிதங்கள் தொகுக்கப்பட்டு 'தூவானம்' பகுதியில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது. இனிவரும் இதழ்களில் இப்பகுதி வாசகர் பேசும்பக்கங்களாக இருக்கும். தொடர்பு கொள்பவர்கள் 'எம் அஞ்சல் முகவரி' கீழுள்ளவாறே அமைதல் வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். அதேபோல், ஆதரவு நல்கவிழைபவர்கள் P. CHARLES VIGNES என்ற பெயருடன் மட்டும் தொடர்பைக் கொள்வது இலகுவானதாக இருக்கும்.

இதழ்-3 இன் பணிகள் ஆரம்பமாகிவிட்டன.....

*MR. P. CHARLES VIGNES No 6, SQUARE DU ROULE, 92200 NEUILLY S/SEINE, FRANCE*

# பாஸ்தில் (*Bastille*)

- ஆதமன்

பிரான்சின் தேசியவிடுமுறை நாட்களில் ஒன்றாக ஜூலை மாதம் 14 ம் நாள் இடம் பெறுகின்றது. பிரபல்யமான நேர்கோடாக அமைந்த சாலை சாம் ஸ்-எலிசே (CHAMPS ELYSEES) வீதியின் இருமருங்கிலும் திரண்ட மக்களின் பார்வை பொதுவாக நகரும் இராணுவ அணிவகுப்பில் குவிந்திருக்கின்றது. விழாவின் நாயகர் பிரஞ்சுத் தலைவர் மித்ரோன் தமக்கேயுரிய பிரத்தியேக பாணியில் இராணுவ மரியாதையை ஏற்றுக் கொள்கின்றார். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் எல்லாம் தனித்துவமாக பிரஞ்சு அதிபர் வழங்கும் பேட்டியில் லயிக்கின்றன.

சுதந்திரம் (LIBERTE) சமத்துவம் (EGALITE) சகோதரத்துவம் (FRATERNITE) பொறித்த பிரான்சின் தேசியநாளாக இந்நாள் கடைப் பிடிக்கப்படுகின்றது. சுமார் 204 ஆண்டுகளின் முன் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி ஒரு அழகான கோட்டையான பஸ்திலை (எனற சிறையை) அழித்தொழித்தது. இன்று ஒரு நீண்ட தூபி இதன் அடையாளமாகக் கட்டியம் கூறுகின்றது. அந்த நினைவுநாள்தான் ஜூலை 14.

ооо ооо ооо

20ம் நூற்றாண்டில்வாழும் நம் பதிவுகளில் இடம்பெறும் உலகநாடுகளின் கிளர்ச்சி, புரட்சி, போராட்ட எழுச்சி என்று வரும் போதெல்லாம் 'பாரிசின் கிளர்ச்சி' முக்கியமானதாக கருதப்படும். ஆங்கிலேயருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் இடையில் நடந்த 100 வருட போர் மற்றும் உலகம் எங்கிலும் காலனி ஆதிக்க வெறியால் மன்னராட்சிகள் உலகவரைபடத்தை தம் இஷ்டப்படி கூறுபோட்டுக் கொண்டிருந்த காலத்திற்கு நாம் பின்னோக்கிச் செல்லவேண்டும்.

பிரஞ்சுப்பூமியில் 16 ம் லூயி மன்னன் வேர்சேயி (VARSAILLES) கோட்டையில் அரசாட்சி புரிகின்றான். நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. மக்கள் பாண் (ரொட்டி) கிடைக்காமல் ராணியிடம் முறையிடும்போது 'பாண் கிடைக்கவில்லையென்றால் கேக்கைச் சாப்பிடுங்கள்' என்று அலட்சியமாகப் பதில் வந்ததாக ஒரு செவிவழிச் செய்தியுண்டு.

பாரிசில் பலே-றோயல் அரண்மனை (PALAIS - ROYAL) மிகவும் ஆடம்பரமாக மின்னுகின்றது. அரச மேல்மட்டத்தவர்கள், பிரபுக்கள் செல்வச் செழிப்பில் மிதக்கின்றார்கள்.

அன்றைய வேளையில் சுவிஸ் ஐரோப்பாவெங்கிலும் 'கூலி இராணுவப் பிரிவை' (GAURDE SUISSES) வாடகைக்கு விட்டு வந்தது. பிரான்சில் இத்தகைய படைப்பிரிவொன்றை CHATELET என்பவர் தலைமையின் கீழ் பணியில் அமர்த்தியிருந்தார்கள்.

பஞ்சத்தால் வெதும்பிய மக்கள் வீதிக்கு வருகின்றார்கள். அப்போதெல்லாம் தேனீர்ச்சாலை, சிற்றுண்டிச்சாலை (THE, CAFE & TABAC) என்பனவெல்லாம் சமூக அறிவாளிகள், புத்திஜீவிகள் கூடிநின்று முக்கிய ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ளும் மையங்களாகத் திகழ்ந்தன. இதன் வழித் தோன்றலாகவே இன்று காணப்படும் பிரான்சின் TABACISM உம், லண்டனிலுள்ள PUBSIM உம் இருப்பதாக மேற்கோள் காட்டப்படுவதுண்டு.

பசியின் கோரத்தாலும், வேலையில்லாத் திண்டாட்டங்களாலும் வீதிகளில் மக்கள் கோஷங்களுடன் ஊர்வலமாக அணிவகுக்கின்றார்கள். இதில் வெளிநாட்டவர் அதிகம் கலந்து கொள்கின்றார்கள். அக்காலத்தில் பாரிசில் வதிபவர் (PARISIEN) தவிர்ந்த ஏனைய பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களையும் வெளிநாட்டவரெனறே கருதப் பட்டனர்.

14 ம் நூற்றாண்டில் ஆங்கிலத்தேசத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பைத் தடுத்து பாரிசைக் காப்பாற்ற கட்டப்பட்ட காவல் அரண்களிலொன்றுதான் பஸ்தில். பின் இரண்டு நூற்றாண்டுகளில் முடியாட்சியாளர்களின் கவனிப்பில் பெரிய அகண்ட அரண்மனையாகி பின் முக்கியஸ்தர்களை தடுத்துவைக்கும் சிறைக்கூடமாக மாறியிருந்தது.

இந்த பஸ்தில் சிறையில் அரசியல்கைதிகள் சிறைஅதிகாரிகளின் அன்பான உபசரிப்பு மூலம் நடாத்தப்பட்டார்களாம். சிறந்த உணவு கொடுக்கப்பட்டதாம். 14/07/1789 அன்று கிளர்ந்த மக்களின் தாக்குதலால் வலுவான சிறையின் கதவுகளும், தடித்த சுவர்களும் தகர்கின்றன. முழுமையாக இச்சிறை தரைமட்டமாக 50 வருடகாலமானதாக வரலாறு கூறுகின்றது.

ооо ооо ооо

15 ம் நூற்றாண்டு காலத்தில் உலகின் மன்னர்களெல்லாம் யுத்தப்பிரியர்களாக விருந்தனர். பலசாலியானவர்களும், அந்நியாதுர்யமானவர்களும் மக்களுக்கு உலகப்பிரதேசங்கள் கைமாறிக் கொண்டிருந்தன. உலகின் பெரும்பகுதி காலனிகளாக ஐரோப்பிய முடியாட்சியாளர்களின் வசம் வாதப்பாடங்கியிருந்தன. மன்னர்கள் யுத்த வெறியர்களாகக் காணப்பட்டனர். பிரான்சும் தன்பங்கிற்கு லூயி (XIV முதல் XVI வரை) மன்னர்களின் கோலோச்சலுக்கு உட்பட்டிருந்தது.

யுத்த அவலங்கள் மக்களில் ஏற்படுத்திய அழிவுத்தாக்கங்களும், தொடர்ந்த யுத்தங்களால் ஏற்பட்ட இயல்பான விலைவாசி ஏற்றங்களும், விநியோகமுறைச் சீரழிவால் பஞ்சங்களும் அப்பாவி மக்களை கிலேசத்துக்குள்ளாக்கின. இவர்களின் மனோநிலையை சற்றேனும் கவனத்திலெடுக்காத மதகுருமாரும், ஆட்சிஅதிகார உச்சியில் வாழ்ந்த பிரபுக்களும், அரசநிர்வாகத்தில் குளிர்காய்ந்த பூர்ஷுவாக்களும், அரசபரம்பரையினரும் செல்வச்செழிப்பில் மிதந்தனர். மக்களின் பரிதவிப்பைப் புறக்கணித்த இவர்கள் ஆடம்பர வாழ்வைத் தொடர்ந்தார்கள். கோட்டை கொத்தளங்களாகவும், நடன, பாடல் அரங்குகளாகவும், உல்லாசபுரிகளாகவும் இவர்களது வாழ்வு வேறுபக்கமாக தனித்து நின்றது.

மறுபுறமோ, பஞ்சத்திலும், நோய் பிணியிலும், அடுத்து என்ன செய்வதென்றறியாத அப்பாவி மக்களால் நிரம்பியிருந்தது. பிரச்சனைகளால் மக்கள் மௌனமாகக் குமுறினர். வாழ்வின் ஒட்டுமொத்தத் துன்பங்கள் யாதும் இந்த அப்பாவி மக்களிடமும்; மொத்தச் செல்வச் செழிப்புக் கோலாகலங்களெல்லாம் அரச மேல்மட்டத்தவரான சிறுபகுதியினருக்குமென துண்டாடி பிரச்சனைகள் கூர்மையாக இருந்தன. சமூக நடுநிலை மட்டம் மேலும் படுமோசமாகி விரிசலாவதைக்கண்ட அறிஞர்களும், புத்திஜீவிகளும், தத்துவஞானிகளும் வெதும்பினார்கள். அக்கால வழக்கில் இவர்களது சந்திப்புமையங்களாக அமைந்த தேனீர், சிற்றுண்டிச் சாலைகளில் (THE, CAFE & TABAC) கூடிய இவர்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோஷத்தை முன்வைத்தனர்.

*14/07/1789 அன்று எப்படியோ பஸ்தில் தகர்ப்பு நடந்தேறிவிட்டது. வேர்சையி (VARSAILLES) கோட்டையில் இருந்த லூயிXVI மன்னனுக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. (பாரீசிலிருந்து இக் கோட்டை அதிகதூரத்திலிருந்தது- அப்போதைய பிரயாணவசதிகளில் இது பெரியதூரம்) மன்னன் மட்டுமல்ல, பலரும் கனவில்கூட எதிர்பார்த்திருந்திருக்க முடியாது!*

*அழகானதும் 8 கோபுர அரண்களைக் கொண்டதுமான FAUBOURG SAINT-ANTOINE இல் அமைந்திருந்த அரண்மனை மக்களின் வெற்றியைக் குறியீடாக்கவும், மன்னராட்சியின் இறுதிக் காலகட்டத்தை அறிவுறுத்தும் சைகையாகவும் அமையுமென யார்தான் எதிர்பார்த்தார்கள்?*

*கடுமையான வதந்திகள் பரவின. பாரீஸ்வாசிகள் வதந்திகளால் திக்குமுக்காடினார்கள். 12/07/1789 அன்று லூயிXVI மன்னனின் முக்கிய மந்திரியான NECKER ஐ பதவி விலக்கியதாக செய்தி பரவியிருந்தது. 13/07/1789. HOTEL DE VILLE இல் (அரசநிர்வாகக் கட்டிடம்) கூடிய அரசநிர்வாகிகள் பொய்வதந்திகளைக் கட்டுப்படுத்தவும், எழுச்சியை அடக்கவும் ஒருகட்டுப்பாடான பொலீஸ் படையை உருவாக்கினர்.*

*14/07/1789 அன்று குழப்பல்வாதிகள் அல்லது கிளர்ச்சியாளர்கள் INVALIDES இல் அமைந்த ஆயுதக்கிடங்கைக் கைப்பற்றி ஆயுதமேந்தியவாறு BASTILLE ஐ வந்தடைகின்றனர்.*

*புராதன அரண்மனையாக இச்சிறை பாரீசின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்தது. கம்பீரமான தோற்றத்தையுடைய இச்சிறையை தலைமைதாங்கி நடத்தியவர் MARGUIS DE LAVNAY. இவரின் கீழ் 30 சுவிஸ் கூலிப்படையினரும், 85 புராதன இராணுவத்தினரும் (ANCIEN ARMY) கடமையில் இருந்தனர்.*

*கிளர்ச்சியாளர்கள் LAVNAYயுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். அப்போது எதேச்சையாக நடந்த துப்பாக்கிப் பிரயோகம் மோதலாக வெடித்தது. கிளர்ச்சியாளர்கள் BASTILLE கோபுரத்தைத் தகர்த்து காவலரைச் சிறைப்பிடித்தனர்- சிறையிலிருந்தவர் விடுதலை பெற்றனர். இங்கு சிறை உடைப்பின்போது உள்ளே இருந்தவர்கள் இரு மனநோயாளிகள், நான்கு கள்ளநோட்டு புழக்கத்திலீடுபட்டவர்கள், ஒரு கிறுக்கன் (DEBAUCHE) என்பவரே என்பது குறிப்பிடத்தகுந்தது.*

*செய்தி அறிந்த அரசன் பதவிநீக்கிய NECKER ஐ மீண்டும் பதவியிலமர்த்தினான். HOTEL DE VILLE லில் செயல்பட அனுப்பினான். நீல, வெள்ளை, சிகப்புக் கொடியை ஏற்றுக் கொண்டான். ஆனால் இச் சம்பவம் கிளர்ச்சியாளர்களுக்கும், மக்களுக்கும் புத்துணர்வையூட்டியது. தொடர்ந்த பல கிளர்ச்சிகளுக்கு வித்திட்டதாகவும் அமைந்தது. மன்னனால் நீண்டகாலம் தாக்குப்பிடிக்க முடியவில்லை என்பது இன்று வரலாற்றுச் சான்றாகி விட்டது.*

சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்



# பயணப்பதிவுகள்

*- கி.பி. அரவிந்தன் -*

**24/07/1993** இலண்டன்

நேசமிக்கவருடன் கூடியிருக்க முடியாது போனாலும், அவர்களை எட்டி உதைத்து, ஓரங்கட்டி, தனித்திருந்து தத்துவம் பேசுதல் தானா சமூக ஒழுங்கமைப்பாளரின் ஒழுக்கம்? லண்டன் பயணத்தில் என் நினைவில் பதிந்தது இது.

லண்டனில் இருந்து வெளிவரும் 'பனிமலர்' இதழ் ஜூலை 24 ம் திகதி நடாத்திய 'கறுப்பு ஜூலையின்' பத்தாண்டுநினைவுக் கூட்டத்திற்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன்.

சிறப்பு விருந்தினராக மகாஜனாக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ.கனகசபாபதி பங்கேற்ற அந்நிகழ்வில், நாடகநெறியாளரும், தற்பொது பி.பி.சி. தமிழோசையில் குரல்தரவல்லவருமான அ.தாசீயஸ், 'பனிமலர்' ஆசிரியர்களில் ஒருவராயிருந்து பின்னர் தன்னை விடுவித்துக் கொண்டவரும், ஐரோப்பாவில் வெளிவரும் பெரும்பாலான சஞ்சிகைகளின் பக்கங்களில் தன்பேனா வலிமையால் இடம்பெறுபவமான திரு.சிவசேகரம், இவர்களுடன் கத்தரித்தோட்டத்து வெருளிப் பொம்மையென நான்- பேச்சாளராய் குறிக்கப்பட்டிருந்தோம்.

ஈழத்தமிழர் வாழ்வில் அழியாத கரும்புள்ளியான ஜூலை நினைவின் பத்தாண்டு நினைவை மறக்காது, அதனை நிகழ்ச்சியாக்கிய பனிமலரின் பணி பாராட்டற்குரியது. தாயக நேசிப்பின்பாற்பட்டது. இதைத்தான், இப்படித்தான் பேசுங்கள் என கட்டுப்பாடு விதிக்காத அவர்களின் பெருந்தன்மை மனதுக்கு இதமாக இருந்தது. துடிப்பும் செயல்வேகமும், சமூக நோக்கும், தத்துவ தீவிரமும் கொண்ட பனிமலர் நிகழ்ச்சி அமைப்பாளர்கள், பல்வேறு அனுபவ ஆற்றல்களை கடந்து பயணம் செய்துகொண்டிருப்பவர்களென்பதும் சிறப்பம்சமாகும்.

இதுவரை பத்து இதழ்களை விரித்துள்ள பனிமலர், அரசியல் நறுமணத்தை பரப்பிய போதும் இலக்கிய இதம் இருந்தது. ஆனால் கடைசி இரு இதழ்களினதும் நறுமணக் கலவையின் அளவு வேறுபாடு மாற்றத்தினால் அரசியல் நெடிநாசியை அரித்தது என அதன் நுகர்வாளர்கள் சுட்டி இருந்தனர். நறுமண மாறுபாடு எனக்கும் ஏற்புடையதாய் இருக்கவில்லையாயினும். பனிமலரும், அதன் நெறியாளரும், என் நேசத்திற்குரியவர்களே.

அரசியல் புணியை முன்னெடுக்க விரும்பும் பனிமலர் நேசமிக்கவரை பெருக்கிக் கொள்ளத்தானே வழிஅமைக்க வேண்டும். மாறாக தாங்கள் தெரிந்து அழைத்த பேச்சாளரின் பேச்சின் போது குறுக்கீடாகவும், இகழ்ந்தும் கைதட்டியும் உணர்ச்சிவசப்பட்டதானது அவர்கள் பணியின் நோக்கை சிதைவுறச் செய்வதாகவே துணுக்குற்றேன்.

சிறுதவறுதான் ஆனால் அநாகரிகமானது. இப்படித்தான் மூன்றாம் வகை அணிகளில் நேசமிக்கவர்கள் சிதறடிக்கப்படுகின்றனர். பாட்டாளிவர்க்கம் ஒன்றிணைவதும், நேசமிக்கவரை அணிகட்டுவதும் தானே தலையாய நடைமுறை. மூன்றாம் உலகநாடுகளில் குறிப்பாக இலங்கை-இந்தியாவில் இந்நடைமுறை தலைகீழாகத்தான் உள்ளது. அத்தொற்று நோயால்தானா பனிமலர் நண்பரும் இப்படி...... பத்தாண்டு அனுபவத்தில் கற்பிக்கப்பட்டவைகள் ஏராளமாயிற்றே!

07-08 /08/1993

## ஒல்லாந்து

ஒல்லாந்தர் தேசம் சென்றிருந்தேன். கடல்மட்டத்திற்கு கீழான தேசம், பூக்களின் இராட்சியம் என அறியப்பட்டது. போர்த்துக்கேயருக்கு பின்னாலும், ஆங்கிலேயருக்கு முன்னாலும் இலங்கையை ஆண்ட 'டச்சுக்காரர்' அல்லது 'ஒல்லாந்தர்' இவர்கள். இவர்களின் ஆட்சியை நினைவுறுத்தும் யாழ்கோட்டை 1990 ல் அழிந்தது ஏனோ நினைவில் வந்துபோகிறது.
'Holand' என பிறராலும், 'Nederland' என அவர்களாலும் அழைக்கப்படும் அத்தேசத்தில் ஓகஸ்ட் 07 ம் , 08 ம் திகதிகளில் நடைபெற்றது 'இலக்கிய சந்திப்பு'.

'16 வது இலக்கியச்சந்திப்பு' என மகுடம் கொண்ட அழைப்பிதழ் 'மௌனம்' இதழுக்கு வரப்பெற்றதால் அதன் சார்பாக நான் சென்றேன். நெதர்லாந்திருந்து வெளிவரும் 'அஆஇ' இதழ் இச்சந்திப்புக்கு பொறுபேற்றிருந்தது. முதல்நாள் நிகழ்வின் இறுதிப்பகுதியான நாடகவேளையில்தான் என்னால் போய் சேரமுடிந்தது.

மெல்லிய இருளில் இந்திரா பார்த்தசாரதியின் 'மழை' பொழிந்து கொண்டிருந்தது. லண்  டன் தமிழ் அவைக்காற்று கழக கலைஞர்கள் மேடையின் மங்கிய மின்னொளியில்... முகமறியுமுன்னரே விளக்கணைந்துவிட்டது.

'நிர்மலா..... நிர்மலா.....' என்னும் ஆண்குரலில் பதட்டம். 'நிர்மலா என்ன செய்கிறாய்.... மெழுகுவர்த்தியை கொழுத்து....' மேடை மெழுகுவர்த்தியில் ஒளிபெற, மின்னொளி பின்பரவ.... நிர்மலா, சாய்மனக்கதிரையில் சாய்ந்து கிடக்கும் மனிதர், டாக்டர். மூன்றுபாத்திரங்கள். மனிதரை பரிசோதித்த டாக்டர் "அப்பா இறந்து விட்டார்....".

தொடர்ந்து கொண்டிருந்த இந்நாடகத்தின் நெறியாளர் பாலேந்திரா. நாடக ஆர்வலர்களால் நன்கு அறியப்பட்டவர். 'மழை' நாடகம் முடிந்தபோது.....

**இருபதுவருடமாய் ஓயாத போராட்டமழை, பழமைவாத தேசத்தந்தை, தேசத்தந்தையை பிரியா மனஇணைப்பு கொண்டமகள், மக்கள் நோயறிந்த தேச டாக்டர், தந்தையர் தேசம் துறந்து சென்று விடுமுறையில் வரும் மகன், ஓயாத பேய் மழைவெள்ளத்தால் இருப்பிடம் இழந்து தஞ்சம் தேடும் மக்கள், பிறழ்வுறும் சமூகஉறவுகள், சிதைவுறும் மனங்கள், தாயகம் துறக்கும் எத்தனங்கள், இப்படி....இப்படி.... மழை பெய்கிறதா? ஓய்ந்து விட்டதா?**
எப்படியாயினும் 'மழை' இன்னொருதடவை பார்க்க வேண்டும்.

ஈழத்து போராட்டம் தமிழுக்கு வழங்கிய புதியதான வடிவம் 'கவிதா நிகழ்வு' இதனை லண்டன் அவைக்காற்று கலைக்கழகம் 'துன்பக்கேணியிலே' என நிகழ்த்தியது. நன்றாய்....
அரங்குக்குள் விளக்கெரிந்த போதுதான் துன்பக்கேணியின் கரைஏறி நண்பர்களிடை கலக்கமுடிந்தது.

இரண்டாம் நாள் அமர்வில் முழுநாளும் இருந்தேன். 'இலக்கிய சந்திப்பு மலர்'; 'அஆஇ' சிறுகதை சிறப்பிதழ், கைகளில் வழங்கி இருந்தனர். திட்டமிடலும், தயாரிப்பும், சிரத்தையும் தெரிந்தது. 16 இலக்கிய சந்திப்புகளின் 'பதிவான' சந்திப்பு இதுதான் போலும்! மாற்றத்திற்கான தோற்றங்கள் தெரிகின்றன.

'கொரில்லாப்போராளியைப் போன்றவன் கவிஞன்' என்னும் பிலிப்பைன்ஸ் தேசமானுடன் யோசே மாரியா சிசன் கட்டுரை வாசித்தார். இவரை 86 இல் சென்னையில் சந்தித்துள்ளேன். அன்றைய நம்பிக்கையின் வீச்சை இன்று அவரில் பார்க்க முடியவில்லை. சறுக்கல்கள் எங்குதான் நிகழவில்லை. வெளிநாடு வந்துவிட்டாலே தாயகச்சூழல் கணிப்புகள் 'பொத்தாம் பொதுவாகவே' அமைந்து விடுகின்றன. பிலிப்பைன்சை அவரிடத்தே அறியமுடியாது போனது கவலைதான்.
வ.ஐ.ச.ஜெயபாலன், தன்னை ஆய்வாளன் என்பதை நிலைநிறுத்தினான். புதியகோணம், புதியபார்வை. சந்திப்பில் அர்த்தம் சேர்த்த பகுதிகளில் ஒன்று. நேரம்தான் போதவில்லை. அடுத்த 'அஆஇ' இதழ்வெளிவரும்வரை காத்திருக்க வேண்டும் இக்கட்டுரைகளைப் படிக்க. நான் அமர்வுறாது போன முதல்நாள் நிகழ்வில் நிர்மலா படித்த கட்டுரையும் சிறப்பானது என்பது சபையோர் கருத்து. நிம்மியைச் சந்தித்ததும் சந்திப்பின் சந்தோஷமான நிகழ்வு.

முடிவில் வந்து மனங்களை தங்கள்பால் ஈர்த்துக் கொண்டார்கள் அவைக்காற்று கலைக்கழகத்தினர். அவர்களிடை கலை 'மடைஉடைத்து பாய்கின்றது'என்றே கருதுகின்றேன். பாடல்கள் அவையோரை ஆர்கஷித்தன. மெய்சிலிர்த்துப் போனேன்.

'கூட்டுழைப்பின் வெற்றி' எனலும் பொருந்தும். கலையின் இலக்கு பற்றிய அவர்களின் புரிதலும் வெளிப்பாட்டின் சிறப்பிற்கு காரணம். மொழிபெயர்த்ததும், வேறும் நாடகங்களை மேடையேற்றும் இவர்களால் செந்தமான நாடகப்பிரதிகளை தயாரிக்க, எழுத முடியுமெனவும் நம்புகின்றேன். வாழ்த்துக்கள்.
குறைகள், குற்றங்கள், ஏதுவுமில்லையா என்றுதானே கேட்கிறீர்கள்? சிற்றிதழ்களின் வெளியீட்டாளரும், ஆசிரியர்களும் சந்தித்துப்பேசும், கருத்துப்பரிமாறும், அரங்கமாகத் தொடங்கிய சந்திப்பு, 24/09/1988 இல் முதலாவதாக அமைந்து 07-08 /08/1993 இல் 16 வது சந்திப்பை நிகழ்த்திவிட்டது. ஆறுவருட இடைவெளி புலம்பெயர்வாழ்வில் இது ஒரு சாதனைதான். 'இலக்கற்ற வழியில் கால்தடம் பதிக்கின்றனர்' என்ற விசனப்படல் இருந்தாலும் இலக்கிய ஆர்வலர்களின் தன்னியல்பான முயற்சியில் எழுந்துவரும் சந்திப்புத்தொடர் புதிய வழித்தடங்களில், தெளிவான இலக்குகளை நோக்கி நகரும் அறிகுறிகள் தெரியத்தொடங்கி விட்டன.
ஏற்கனவே எனக்கும், சந்திப்பாளர்களுக்கும் இடையே இடைவெளி கொஞ்சம் அதிகம். புரிதல் கோளாறுதான். இப்போதுதான் அறிமுகம், கைகுலுக்கல்கள் நிகழ்ந்துள்ளன. இந்நேரத்தில் விமர்சனமா? பார்க்கலாம்.

'ஓ...ஓ... வண்டிக்காரா' சத்தியமூர்த்தியின் குரல் பாரீசை நோக்கிய பஸ்சின் பின்னே என்னை துரத்தியபடி! நான் வண்டியில்....

*'மழை' நாடகத்தை எடுத்துக்கொண்டால் தகப்பன்-மகளின் உறவுமுறை INCEST (ரத்தபந்தத்திற்குள் ஏற்படும் புணர்வு) என்கிற அளவுக்கு கோடிட்டு காட்டப்பட்டிருக்கின்றது. குறுகிய சிக்கலான இந்த உறவுமுறையை சமூகவாழ்வின் எதார்த்தம் என்று எப்படி சொல்லுகிறீர்கள்?*

*- அதை (INCEST) இன்செஸ்ட் என்று சொல்லமுடியாது. ஒருவரை ஒருவர் பிரியமுடியாதநிலை. பொறியில் சிக்கிய எலிகள் என்று சொல்லலாம். அவர்களின் தனிமையைக் கண்டு அவர்களே அஞ்சுகின்றநிலை. உடல்ரீதியான உறவுக்கு அங்கே இடமில்லை. அவர்களின் வாழ்வில் இருக்கின்ற சூழ்நிலை அந்தவிதமாக இருக்கின்றது. நான் நியாயப்படுத்தவில்லை. அதில் உள்ள ஒரே நிதான அறிவுடன் உள்ள குணசித்திரம் அந்த டாக்டர். அவர் சொல்வது போல் தகப்பன் மகளைவிட்டும், மகள் தகப்பனைவிட்டும் பிரியமுடியாத ஒருநச்சுவட்டம்.*

- இந்திரா பார்த்தசாரதி -

எழுதுவதற்கு பயிற்சி வேண்டியிருப்பது போலவே
தரமறிந்து படிப்பதற்கும் இரசிப்பதற்கும்
ஒரு பயிற்சி வேண்டும்.

# *க.நா.சுப்ரமண்யம்*

(31/01/1912 - 16/12/1988)

**- ராஜமார்த்தாண்டன்**



*சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு, இதழ் வெளியீடு என்று பலதுறைகளில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தவர் க.நா.சுப்ரமண்யம்.*

*தமிழ் நாவலிலக்கிய வளர்ச்சியைப் பொருத்தவரையில் இவரது 'ஒருநாள்', 'பொய்த்தேவு' 'அசுரகணம்' போன்ற நாவல்கள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கன. இவரது சிறுகதைகள், சுந்தர ராமசாமி குறிப்பிடுவது போன்று, 'அறிவுபூர்வமாக எஞ்சிவிடும் கலை வெற்றி கூடாதவை.*

*தமிழிலக்கிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பல்வேறு மொழிகளிலிருந்தும் உலகப் புகழ்பெற்ற நாவல்களை, ஆங்கிலம் வழித் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர். தமிழிலிருந்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளார். இவ்வகையில் க.நா.சு.வின் இலக்கியப்பணி குறிப்பிடத்தகுந்தது.*

*'சூறாவளி', 'சந்ரோதயம்' 'இலக்கியவட்டம்' போன்ற பத்திரிகைகளை நடத்தி, தன் இலக்கிய அபிப்ராயங்களைத் தொடர்ந்து வலியுறுத்தியவர். தனது இறுதிக்காலத்திலும் 'ஞானரதம்', 'முன்றில்' இலக்கிய இதழ்களுக்குச் சிறப்பாசிரியராக இருந்தவர்.*

*ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், புதுமைப்பித்தன் ஆகியோரைத் தொடர்ந்து 'மயன்' என்ற பெயரில் புதுக்கவிதை முயற்சியில் ஈடுபட்டு, தொடர்ந்து கவிதையின் உருவ-உத்தி அமைப்பில் சோதனை செய்தவர். 'உணர்ச்சி என்கிற தூக்கக் கலப்பில்லாத ஒரு தாக்கத்துடன் அறிவுத் தாக்கமும் பெற்றிருந்தால் தான் கவிதை புதுக்கவிதையாகிறது" என்றும், "புதுக்கவிதையின் முக்கிய அம்சங்கள் யாப்பின்மை மட்டுமல்ல- வசனத்தின் முக்கிய அம்சங்களான வேகம், வலு, நேர்மை, என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர். இத்தகைய தன் சித்தாந்தங்களுக்கேற்ப கவிதைகளும் எழுதியவர். நல்ல கவிதைகள் சிலவற்றுடன், அறிவுத்தளத்தில் மட்டுமே இயங்கும் வகையிலான, உணர்வுபூர்வமாகவும் அனுபவப் பரப்பில் தாக்கத்தை நிகழ்விக்கும் கவித்துவ வெளிப்பாடுகளாகக் கலை வெற்றி கூடாத பலகவிதைகளையும் எழுதியுள்ளார்.*

*'இலக்கிய விமர்சனத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை' என்று சொல்லிக்கொண்டே, தொடர்ந்து தனது இலக்கிய அபிப்ராயங்களை வலியுறுத்தி வந்தவர் க.நா.சு. இவரது விமர்சனக் கருத்துகளிலும் அவ்வப்போது இவர் தந்த இலக்கியப் பட்டியல்களிலும் முரண்பாடுகளும் சீரிய கருத்து வேறுபாடுகளும் எழுந்த போதிலும், ஒரு இலக்கிய இரசிகராக நின்று தரமான இலக்கியப் படைப்புகளையும் படைப்பாளிகளையும் இனம் காட்டி வலியுறுத்தி வந்தவர், இலக்கியத்துக்கு ஓர் இயக்கமாக- தனிமனிதனாக நின்று- செயல்பட்டவர் என்பதை என்றும் தமிழிலக்கிய உலகம் நினைவில் கொள்ளும்-கொள்ள வேண்டும்.*

*'தமிழர்கள் இலக்கியத்தில் உலகநோக்கைப் பயில வேண்டும். பழைய இலக்கியம், இன்றைய இலக்கியத்தில் சரமற்றதை ஒதுக்கி, தரமானவற்றைப் பிரித்தறிய வேண்டும். அதற்கேற்ப தரமான பல தொகுதிகள் வெளிவரவேண்டும். தரநிர்ணயம் செய்து, நல்லது, இரண்டாந்தரமானது, மூன்றாந்தரமானது என்று பிரித்தறியும் பயிற்சி வேண்டும். நல்ல இலக்கிய ஆசிரியர்கள், நல்ல படைப்புகள் எங்கே எங்கே என்று தேடுகிற இலக்கிய வாசகர் கூட்டம் தமிழில் இரண்டாயிரம், மூவாயிரம் பேர் என்று பெருக வேண்டும். தமிழ் இலக்கிய உலகம் புத்துயிர் பெற சிறுசிறு இலக்கியப் பத்திரிகைகள் பலப்பல தமிழ்நாட்டில் தோன்றவேண்டும். எழுதுவதற்கு ஒரு பயிற்சி வேண்டியிருப்பது போலவே தரமறிந்து படிப்பதற்கும் ரசிப்பதற்கம் ஒரு பயிற்சி வேண்டும்'.*

*-இவை, 1963 - 1965 காலகட்டத்தில் தான் நடத்திய 'இலக்கியவட்டம்' பத்திரிகையில் க.நா.சு. தொடர்ந்து வலியுறுத்திய கருத்துகளின்*

## பரம்பரை

க.நா.சு.

- ('எழுத்து' - ஜூன் 1959)

பிறருக்கு உகக்காததைச்
சொன்னவருக் கென்று
ஒரு தனி நரகம் உண்டானால்
அங்குதான் நான்
போவேன்.

அங்குள்ளவருக்கும்
உகக்காததைச் சொல்ல
எனக்குத் தெரியும். அங்
கிருந்து எங்கு போவேனோ
தெரியாது.

கடைவிரித்துக் கேட்பார்
இல்லாது போனவர் எத்தனையோ
பேர், ஊருக்கு உவக்காததைச்
சொன்ன பரம்பரை - அது
பெரிது காண்.

### க.நா.சு

'க.நா.சு. ஒரு எழுத்தாளனைப் பற்றியோ அல்லது நூலைப்பற்றியோ பேசும்போது மிகவும் பொதுப்படையாகவும், மேலோட்டமாகவும் பேசுவது போலவே இருக்கும். அவருடைய அபிப்பிராயங்கள் அவரது படைப்பிலிருந்து உருவானவை என்பதால் அவற்றுக்கு தனியான வலு இருந்தது. முடிவுகளை மட்டும் அவர் முன்வைத்துப் பேசிக்கொண்டே போவார். காரிய காரணங்களைச் சார்ந்த ஒரு வாதத்தின் வலு பின்னால் நின்று கொண்டிருக்கும். நாம் விடாப்பிடியாகத் தூண்டிக் கேட்பதன் மூலமே அந்த வாதங்களை அறிந்து கொள்ள முடியும். முடிவுக்கு இட்டுச் சென்ற பயணத்தின் விவரங்களைச் சொல்வதில் அவருக்கு சிறிதும் ஆர்வம் இருக்கவில்லை".

- சுந்தர ராமசாமி -
('காலச்சுவடு' : ஜன-மார்ச் 1989)

*சாராம்சம். இந்தக் கருத்துகளைத் திரும்பத்திரும்ப பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எழுத்திலும், பேச்சிலும் வலியுறுத்திவந்தார். தனது இறுதிக் காலத்தில் 'தினமணி' நாளிதழில் க.நா.சு. தொடர்ந்து எழுதிய காலத்திலும் இதே கருத்துக் களையே திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்.*

*'நமது சூழ்நிலையியல், நமது மண்ணில வேர்விடுகிற விமர்சனச் சிந்தனைகள் அவசியம்" என்ற கருத்தையும் அவ்வப்போது வலியுறுத்தி வந்தார்.*

*திரும்பத்திரும்ப சில விஷயங்களை வலியுறுத்துவது குறித்து க.நா.சு.வே கூறுகின்றார்: 'திரும்பத் திரும்ப என்பது அவசியமாவதே நம்மிடையே அடிப்படைகளின் தாக்குதல், பாதிப்பு தேய்கிறது என்பதனால் தான்". சுமார் முப்பதாண்டுகளுக்கு முன் க.நா.சு.சொன்னது இன்றும் அப்படியே தமிழ்ச்சூழலுக்குப் பொருந்துவதாகவே இருக்கிறது. அதுபோலவே அன்று க.நா.சு. வலியுறுத்திய, இரண்டாயிரம், மூவாயிரம் பேர்கொண்ட தரமறிந்த வாசகர் கூட்டமும் இன்றும் ஒரு கனவாகத்தானே இருக்கின்றது!*

*பல்கலைக்கழகங்கள், வானொலி, சாஹித்ய அகாதெமி போன்ற அமைப்புகளை மிகக்கடுமையாக விமர்சித்தவர் க.நா.சு. காலம் தாழ்த்தி, போனால் போகிறது என்ற மனப்பான்மையில் க.நா.சு.வுக்கும் சாஹித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது. அதுவும் இருபதாண்டுகளுக்கு முன், இலக்கியம் தொடர்பான அடிப்படைக் கருத்துகள் குறித்து எழுதிய கட்டுரைகள் அடங்கிய தொகுதிக்கு (படைப்புகளுக்காக அல்ல). ஆனாலும் க.நா.சு. சாஹித்ய அகாதெமி விருதை ஏற்றுக்கொண்டார். அது குறித்து ஒரு பிரபல வாரஇதழுக்கு அவர் அளித்த பேட்டியில், 'எனக்கு இப்போது பணம் தேவைப்படுகின்றது. வயதாகிவிட்டது. பெற்றுக் கொண்டேன்' என்ற விதமாகக் கூறியிருந்தார். இலக்கியம் ஒன்றையே வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்த ஒரு தமிழ் எழுத்தாளனை, தமிழ்ச்சூழல் எப்படியெல்லாம் நலிவடைய, வேதனைப்பட வைத்திருக்கிறது என்பதற்கு இதைவிடவும் வேறென்ன சாட்சியம் வேண்டும். இது, தமிழர்கள் என்று, 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி' என்று கூறிக்கொள்பவர்கள் பெருமைப்படக்கூடிய விஷயமல்ல.*

*என்றாலும், க.நா.சு. போன்று ஊரோடு ஒத்துப்போகாத சில இலக்கியத் 'தறுதலைகள்' காலந்தோறும் விடாப்பிடியாகச் செயல்பட்டு வருவதால்தான் தமிழில் இன்னமும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தரமான படைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் நாம் செய்யவேண்டியதென்ன? க.நா.சு. சொன்னதைத்தான் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டியிருக்கிறது.*

*"தரம் அறிந்து விமர்சனம் செய்பவர்கள் சிலரும், தரம் அறிந்து படிக்கத் தெரிந்தவர்கள் ஒரு இரண்டாயிரம் பேரும் எந்த இலக்கியத்திலும் தரம் உயர அவசியமாகிறார்கள். பிரபலஸ்தர்களின் பாராட்டுக்கள் தேவையில்லை. சாஹித்ய அகாதெமிக்களின் பரிசுகளோ, பதவிச்சிபாரிசுகளோ தேவையில்லை. அகில இந்திய ரேடியோ (ரேடியோ என்பது ஒரு சர்க்கஸ் விளையாட்டு)வின் சாஹித்ய சமாராதனைகளோ, தயாரித்தளிக்கும் அதிமேதாவியர்களோ தேவையில்லை. இலக்கியத்தரம் உயர விமர்சகர்களும் வாசகர்களும் போதும்" (இலக்கிய வட்டம் : 22/11/1963). இப்படி ஒரு நிலைமை உருவாகப் பாடுபடுவதே க.நா.சு. போன்ற படைப்பாளிகளுக்குத் தமிழர்கள் செய்யக்கூடிய உண்மையான மரியாதை.*

# ரோஜா

## மணிரத்னம்

சென்ற ஜனவரியில் டெல்லியில் நடைபெற்ற சர்வதேசத் திரைப் படவிழா அதிகார வர்க்கத்தின் மிதமிஞ்சிய தலையீட்டின் காரணமாக அரசாங்க நிகழ்ச்சி போலாகிவிட்டது. விட்டோரியா டி சிகாவின் படங்கள், இன்க்ரிட் பெர்க்மன் நடித்த படங்கள், பின்லாந்திலிருந்து வியட்நாமிலிருந்தும் வந்திருந்த அற்புதமான படங்கள் என்று நல்ல விஷயங்களும் இருக்கத்தான் செய்தன. மற்றொரு முக்கிய விஷயம், மணிரத்தினத்தின் தமிழ்ப்படமான 'ரோஜா' அங்கு திரையிடப்பட்ட படங்களில் படுமோசமான படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுதான்.

இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறை, இந்திய இராணுவம் ஆகியவற்றுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள இப்படம், கொஞ்சம் தேசபக்தி, கவர்ச்சிக் கன்னிகளின் நடனம், கிழவர், கிழவிகளின் விரசம் தோய்ந்த பாட்டு, கீழ்த்தரமான ஜோக்குகள், எதிரிகளைத் தன்னந்தனியாக நின்று ஒழித்துக்கட்டும் கதாநாயகன், நளினமான கமராக் கலை ஆகியன சேர்ந்த ஒரு ஜனரஞ்சக மசாலா மட்டுமல்ல. இன்று தலைதூக்கியுள்ள இந்துமதவெறி அரசியலுக்குத் தூபம் போடுகின்ற வகையில் காஷ்மீர் போராளிகளும் முஸ்லீம்களும் அதில் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து 'எகனாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் புகழ்பெற்ற கலைவிமர்சகர் சதானந்த் மேனன் குறிப்பிடுவதாவது; *போரையும் தேசபக்தியையும் பற்றிச் சொல்கின்ற திரைப்படங்கள் பல இந்தியாவில் முன்பு வந்திருக்கின்றன. இந்திய-சீன, இந்திய- பாகிஸ்தான் போர்களை பின்னணியாகக் கொண்டு சேத்தன் ஆனந்த் போன்றவர்கள் இந்திய இராணுவத்தின் ஒப்புதலுடன் படங்கள் தயாரித்திருக்கின்றனர். இத்தகைய படங்களின் தயாரிப்பில் கடைப்பிடிக்கப்படுகிற(எழுதப்படாத) மரபு என்னவெனில், எதிரியைச் சித்தரிக்கும் போது, அவனை நமது 'புனிதமான தேச எல்லைக்கு' அப்பாலிருந்து வரும் ஏதோ ஒரு மனிதன் என்று சற்று 'அருவமான' முறையில் காட்ட வேண்டுமேயன்றி, திட்டவட்டமான அடையாளங்களும், குணாதிசியங்களும் கொண்டவனாகக் காட்டி அவன் சார்ந்துள்ள இனத்தின்மீதும், அவனது தேசமக்கள் மீதும் வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் சித்தரிக்கக்கூடாது என்பதாகும்.*

மணிரத்தினம் செய்வதோ இதற்கு நேர்மாறானது. காஷ்மீர் விடுதலைக்காகப் போராடும் 'முஸ்லீம் தேசவிரோதிகள்' இங்கு எதிரிகளாகக் காட்டப்படுகின்றனர். தொழுகை நடத்தும் நேரம் தவிர, பிற எல்லாச் சமயங்களிலும் ஆட்களைக் கடத்துவது அல்லது கொல்வது போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுபவர்கள். இந்திய இராணுவத்தினரோ ஒரு 'உன்னத இலட்சி'யத்திற்காக உயிரைத் தியாகம் செய்பவர்கள் மட்டுமல்லர்; 'அவர் கனிவானவர்கள்; மரியாதையுடன் நடந்து கொள்பவர்கள். அவர்கள் யாரையும் கொன்றதில்லை. பாலியல் வன்முறையில் ஈடுபட்டதில்லை! 'வைட் - ஆங்கிள்' காமரா, மிதமிஞ்சிப் பயன்படுத்தப்பட்ட 'பேக் - லைட்டிங்', வெறியூட்டும் பின்னணி இசை ஆகியன ஆக்கிரமிப்பு உணர்வைத்தான் ஏற்படுத்துகின்றன. சேத்தன் ஆனந்த் போன்றவர்கள் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் யுத்தம் பற்றிய படம் எடுத்தனர். மணிரத்தினம் வேண்டுமென்றே புறக்கணிப்பது காஷ்மீரில் நடக்கும் போர், நாட்டின் எல்லைக்குள்ளேயே நடக்கும் போர் என்ற உண்மையைத்தான்.

கணவனின் உயிரை மீட்பதற்கு முயற்சி செய்யும் நவீன நளாயினியின் காதல், சோகம், அழுகை, கனவு ஆகியவற்றுக்குக் குறுக்கப்பட்டு விடுகின்றன. சிக்கலான காஷ்மீர் பிரச்சனை பாரதிய ஜனதாக் கட்சியின் முஸ்லீம் விரோதப் பிரச்சாரமாக மாற்றப்பட்டு விட்டது.

சதானந்த் மேனன் கூறுகின்றார். *'இந்த 'ரோஜா' வில் ஏராளமான முட்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு ஒரு கம்பி வேலியே கட்டிவிடலாம்!"*

- எஸ்.வி- இராஜதுரை -

கலைச்சினிமா என்ற பார்வையில் இந்தியா பற்றி இங்கெல்லாம் நன்கு அறியப்பட்டவர் சத்தியஜித் ரே- அவர் இல்லாத இவ்வேளையில் அடூர் கோபாலகிருஷ்ணன் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார்.

பிரஞ்சுப்பத்திரிகையாளர் பார்வையில்

# 'இந்தியச்சினிமா'

## ஒரு குறுக்குவெட்டுமுகம்

*ஜன. 10, '93 இல் 24 வது சர்வதேச திரைப்படவிழா டெல்லியில் ஆரம்பமாகியது. இவ்வேளையில் அதிர்ச்சிதரும் கோரச்சம்பவங்கள். உத்தியோகபூர்வ இழப்பு 141 பேர் எனப்பட்டாலும் 500 பேரின் மரணத்தில் முடிந்து கோர மோதல்கள்.*

*முதல்நாள் அமர்வில், இந்தியாவின் ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்து விசனமே காணப்பட்டது. சிலரின் கருத்து விழாவை ரத்துசெய்துவிட வேண்டுமென்றிருந்தது. வழக்கமான விழா ஆரம்பநாள் போலல்லாது சோபையிழந்து காணப்பட்ட இந்நாளில் மீராநாயரின் தலையீட்டாலும், பிரதமர் நரசிம்மராவின் தலையீட்டாலும் நிகழ்ச்சி ஆரம்பமாக வழிவகுத்தது.*

*இதேவேளை, கடும் பாதுகாப்புச்சட்டம் பம்பாயில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. பலரின் விசனப்படலுக்குக் காரணமே பம்பாயில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததாலேயே வெளிப்பட்டிருந்தது. ஆனால் காஷ்மீர், பஞ்சாப் இல் தொடர்ந்து நடைமுறையிலுள்ள இச்சட்டத்தினைப்பற்றி எவருமே வாய்த்திறக்கவில்லை!*

*இந்தியாவின் சர்வதேசப்படவிழாவில் 14 வது தடவையாகக் கலந்துகொள்ளச் சென்ற பிரான்சின் அலேன் ஜலதோ (ALAIN JALLADEAU) வந்தமர்ந்ததும் விழா களை கட்டத்தொடங்கியது. இவருடன் இவரின் சகோதரர் ஃபிலிப்பும் (PHILIPPE) வந்திருந்தார். நாந்த் (NANTES) ற்கு மிகுந்த மரியாதை கிடைத்தது.*

*சென்றவருடம் (1992) பெங்களூரில் நடந்த விழாவில் காட்டப்பட்ட 'தராவி' படம், பின் நாந்த்திற்குத் (NANTES) தெரிவாகி மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது. இதனை இளம் இயக்குனர் சுதிர் மிஸ்ரா வெளிக்கொணர்ந்திருந்தார். இப்படம் இங்கும் காட்டப்பட்டது.*

*தாராவி: 3 மணித்தியாலப்படம்- பம்பாயின் நடுவிலமைந்த ஒருநகர் தாராவி- உலகப்பிரசித்தி பெற்றபகுதி. உத்தரப்பிரதேசத்திலிருந்து வந்த ராஜ்கரண் என்ற டாக்சி-ஓட்டுநரின் தாராவி குடிவாழ்வே கதை. இவர் தன் தாயுடனும், எதிர்கால மனைவியுடனும் தாராவியில் குடியேறி வாழ்கின்றார். அவர் தாங்கிவந்த கனவுகளும்- சந்தித்த நிஜங்களும் காட்சிகளாக்கப்பட்டுள்ளன. அன்றாடவாழ்வின் நிகழ்ச்சிகள் 'சினிமா பிறேமுக்குள்' அடக்கப்பட்டிருந்தன. முக்கிய பாத்திரங்களாக ஓம் பூரியும், ஷப்னா ஆஷ்மியும் நடித்திருந்தனர்.*

*வங்காளப்படவுலகின் முக்கியஸ்தரான கௌதம் கோஷ் அடுத்தவருடம் தனது படத்தை 'நாந்த்' விழாவிற்கு அனுப்பவிருப்பதாகச் சொன்னார். 'பத்மா நதியின் படகோட்டி' (பத்மா நதீர்மாஜி) என்பது இவரின் படம். 1930 இலமைந்த சம்பவங்களை கருவாக எழுதப்பட்ட மானிக் பந்தோபத்தாய அவர்களின் நாவலைத் தழுவி எடுக்கப்பட்டது இப்படம். அருகருகே அந்நியோன்னமாக வாழ்ந்த சமூகங்கள் ஹிந்துக்களும், முஸ்லீம்களும்- சுதந்திரத்திற்கு சற்றுமுன் 46, 47 ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும்அழிவுகளை யாருமே மறந்திருக்க முடியாது. இவ்வேளையில் அமைந்த வாழ்வை இப்படத்தின் கதை கொண்டிருந்தது. இது மேற்கு வங்காளா- பங்காளதேஷ் கூட்டுத்தயாரிப்பு. இப்படத்தின் இணைத்தயாரிப்பாளர் அபிப்கான் (HABIB KAHN) ஐ அழைக்காதது கௌதம் கோஷுக்குப் பிடிக்கவில்லை.*

*இவ்வருட ஆரம்பத்தில் ஜன.10 '93 இல் 24 வது சர்வதேச சப்பட விழா நடந்த செய்தி அனைவரும் அறிந்தவை. இந்தியா டுடே, சுபமங்களா, முதல் வார இதழ்கள், சினிமா இதழ்கள் வரையில் விமர்சனங்கள் பார்த்தும் இருக்கின்றோம்.*

*பம்பாயில் கோரச்சம்பம் அரங்கேறி வெளிநாடுகளில் தொலைத் தொடர்புசாதங்களில் இந்தியச் செய்தி இடம் பெற்றவேளையில் விழா நடந்தேறுகிறது. இவ்விழாவில் (NANTES) நாந்த் சார்பாக 14 வது தடவையாகக் கலந்து கொண்ட பிரான்சின் ALAIN JALLADEAU வும், அவர்கூடவே அவரது சகோதரர் PHILIPPE. இவர்களுடன் சென்ற பத்திரிகையாளர் EDWARD WAINTROP வின் பார்வை புதியகோணத்தில் பிரபல்ய பத்திரிகை 'LIBERATION' இல் வெளிவந்தது. இதை தமிழ்வாசகர்களுக்கு தொகுத்து தருகின்றோம்.*

*ஜலதோவிற்கு, கிரீஷ் கர்னாட் இயக்கிய 'CHULAVI' படமும் பிடித்திருந்தது. இவர் படத்தைச் சொன்னவிதம் குழந்தைகளுக்கும் புரியக் கூடியதாகவிருந்தது.*

*பிரஞ்சு-ஆங்கில-இந்தியக் கூட்டுத்தயாரிப்பான MADAME BOVARY ஐத் தழுவி எடுக்கப்பட்ட 'மாயா மெம் சாப்' படம் ஜீரணிக்க முடியாததாக இருந்தது. இந்த நோஞ்சான் படத்தைத்தந்த கேத்தான் மேத்தாவினால் ரசிகர்களைக் கவர முடியவில்லை. இப்படத்தைத் திரையிட விழா நிர்வாகிகளால் புதிய அரங்கமைப்பைச் செய்ய வேண்டியிருந்து! இப்படத்தில்வரும் காதலர்கள் உணர்ச்சிவசப்படும் போது கதைக்கும் வார்த்தைகள் மிகவும் கீழ்த்தரமாக விருந்தன. 'CINEMAYA' இதழின் பிரபல்ய இயக்குனர் அருணா- வாசுதேவ் கூறுகையில், 'மேல் நோக்கி நகரும் நவீன குட்டி- பூர்ஜுவா மனோபாவம் கொண்டவளாக மாயா இருப்பதால் இந்த நெருக்கடிக்குக் காரணமாகலாம்' என்று வேறு ஒரு காரணத்தை வைத்தார்.*

*கடந்தகாலங்களில் தமது படம் திரையிடப்படுவதாக இருந்தால் இயக்குநர்களும், தயாரிப்பாளர்களும் அதிகாலை 5 மணிக்கே எழுந்து வந்திடத் தயங்குவதில்லை. ஆனால் இப்போது மிகவும் ஆசுவாசமாக தங்கள் வசதிப்படியே வருகை தந்தார்கள். விழா நிர்வாகிகள் முதல், பார்வையாளர்கள் வரையில் இந்தத் தன்மையைக் காணமுடிந்தது.*

*விவரணப்படமாக அமைந்த 'KAMLA BAI' ஒருவயதான நடிகையின் கதையை அவரே சொல்வதாக எடுக்கப்பட்டிருந்தது. துடிப்பான இளம் இயக்குநர் றேனா மோகன் தனித்துவமானவராக அனைவராலும் கவரப்பட்டார்.*

*இதைத்தவிர எதையும் நான் பசுமையாகக் காணவில்லை. இந்தியப்பத்திரிகைகள் இந்தவிழாவுக்கெதிராகக் குரலெழுப்பிக் கொண்டிருந்தன. முடிவுற்ற ஷியாம் பெனகலின் படம் திரையிடப்படாததை பத்திரிகைகள் கண்டித்தன.*

*தோல்விப்படங்கள் பலவற்றைத் தந்தவர்கள் இருந்தாலும், நிச்சயமாக துணிச்சலான திறமைசாலிகள் காணப்படுகின்றனர் என்பதை அடித்துச் சொல்ல முடியும்.*

*(மிகுதி அடுத்த இதழில்...)*

நன்றி:- LIBERATION

தொகுப்பு:- **அருண்பாலா** (அநாமிகன் உதவியுடன்)

> இன்றைய பிரச்சனைகளுக்கு நேற்றைய பதில்களை அளிப்பதுதான் அரசியல்.
>
> - மார்ஷல் மக்லூகன்



Tamils at Heathrow Airport protest against deportation: the European Court recently upheld the UK's decision to send Tamil refugees back to Sri Lanka

# தேவை : கருத்துக்கணிப்பு

(ஒரு கள ஆய்வு)

*நான் பாரிஸ்(ல்) வந்திருந்தவேளை, அப்போது '14 வது இலக்கியச் சந்திப்பு' நடைபெற தடபுடலாக ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. இங்கு வருகை தந்திருந்த நண்பன் ஜெயபாலனைச் சந்திக்கச் சென்றிருந்தேன். நான் சென்றவேளை சில நண்பர்களுடன் ஜெயபாலன் உட்கார்ந்திருந்து அளவளாவிக் கொண்டிருந்தான். நானும் மௌனமாக உட்கார்ந்திருந்தேன் 'நாட்டுப்பிரச்சனை தீர்வாகி, ஒரு சுமுகமான சூழல் வந்தால் இங்கிருந்து எத்தனைபேர் திரும்புவார்கள்?' ஜெயபாலனின் கேள்வி உசுப்பிவிடவே காதுகளைத் தீட்டிக்கொண்டேன்.*

*'இங்கிருந்து 5% பேர் திரும்பினால் அதிசயம்தான்! கதைப்பார்கள் ஆனால் போக மாட்டார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் பெண்குழந்தைகள் பெற்றவர்கள் போவார்கள்....'*

*'போகக்கூடியவர்கள் நாங்கள். ஆனால் எங்களால் போகமுடியாதே. நாங்கள் முழு அகதி.'*

*'ஒப்பந்தம் வந்தபோது எத்தனைபேர் திரும்பியிருக்கின்றார்கள்? இதெல்லாம் வாவாக் கூடிக்கொண்டிருக்குமே ஒழிய ஒருக்காலும் திரும்பாது.*

*'ஒருவேளை அரசாங்கம் திருப்பி அனுப்பினால் போகத்தானே வேண்டும்....*

*பல்வேறாகப் பதில்கள்.... என்சிந்தனை விரியத்தொடங்கியது. இக்கேள்வியும், பதில்களும் ஓயாமல் அரித்துக் கொண்டேயிருக்கின்றன. ஏன்?*

*வேறொரு சந்தர்ப்பத்தில் சகநண்பர்களுடன் உரையாடியபோது இக்கேள்விக்கு அதிரடி நகைச்சுவையாகவே பதில் வந்திருந்தது.*

*'சர்வதேச நாணய மாற்றுவிகிதத்தில் பாரியமாற்றம் நிகழ்ந்து, இலங்கை நாணயம் இவ்விட நாணயத்திற்கு சமமாக வந்தால் ஒருபயல் இருக்கமாட்டான்!'*

*இதைக்கேட்ட நண்பன் தாங்கமுடியாதவனாக 'ஒருக்காலும் இது நடக்காது. வரவர எங்கள் நாட்டுக்காசின் பெறுமதி இறங்கிக் கொண்டுதானே போகும்' என்றான்.*

###### ###### ###### படம், நன்றி: 'EG'

*- அநாமிகன் -*

போராட்டம் எம்முன் கூர்மையாக வெளிப்பட்டபின், எம்முள் விரும்பியோ விரும்பாமலோ பல்வேறு சொற்கள், பழக்கங்கள், புதிய கலாச்சாரங்கள், அனுபவங்கள்..... நுழைந்துவிட்டன அல்லது உருவாகிவிட்டன. 'கருத்துக்கணிப்பு' என்றசொல் புள்ளிவிபரவியலில் அறியப்பட்டிருந்ததாயினும், போராட்டம் இதனை மக்கள் மயமாக்கி பெருமை தேடியுள்ளது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் கூடவே வந்திறங்கிய இந்தியப்படையும் சாம்பலைத் தட்டிவிட்டுப் போய்விட்டது; மக்களின் விமோசனத்திற்கு வந்ததாகக் கூறிய 'மாகாணசபை'யை சர்வதேச மன்னிப்புச் சபையின் காணாமல் போனவர் பகுதியில் தேடவேண்டியுள்ளது; ஆனால் வடக்கையும், கிழக்கையும் இணைப்பதற்கு வந்த 'கருத்துக்கணிப்பு' மட்டுமே அவ்வப்போது ஸ்ரீலங்கா அரசின் ஊதுகுழல்களில் தான் இருப்பதைப் பறைசாற்றத் தவறுவதேயில்லை. 87 ஜூலை 29 இல் பிறந்த இதன் வயது 6 ஆண்டுகளென்றாலும், சும்மா சொல்லக்கூடாது நம்மவரை அசத்தாமல் விட்டதில்லை.

'காலத்தோடு பயிர் செய்', 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்', 'பருவம் அறிந்து பயிர் செய்' என்பன நம் செவிகேட்ட முதுமொழிகள். வாழையடி வாழையெனத் தழைக்க வேண்டுமென்றுதானே பாட்டனின் பெயரையுடையவன் 'பேரன்' ஆகினான். நீண்ட வாழ்வின் உத்தரவாதம், அடுத்த தலைமுறைகளுக்குரிய சேமிப்பை கொடுக்க விழைந்த செய்கைகள் தானே 'சீதனம்', 'முதிசம்...' [இவை பற்றி விசனங்களிருப்பினும் ஆரம்ப நிலவுடமைச் சமுதாய வடிவில் இவற்றின் தோற்றம் பற்றி மட்டுமே இங்கு குறிப்பிடப்படுகிறது.] வாழும் வீடுகளை கட்டும்போது தற்காலிகமாகவென்று செய்வதுண்டா? எல்லாமே எதிர்காலத்தினை நோக்கிய நீண்டவாழ்நிலை கொண்டதாகவே அமைக்கப்பட்டன. இதற்காக பொத்திப்பொத்தி சேகரித்து செயல்பட்டது நம்சமூகம். குழந்தைகளின் சட்டைகள் முதல், கால்செருப்பு வரையில் அடுத்த பருவத்திற்கான அளவிலேயே எடுக்கப்படும். வளரும் பிள்ளைக்கு அப்படியென்றால்தானே சரியாக வரும்! முந்தைய தலைமுறை பயன்படுத்திய எத்தனையோ ஆடை, அணிகலங்கள் மிகக்கவனமாகப் பாதுகாக்கப்பட்டு அடுத்த தலைமுறைக்கு வழங்கி மகிழ்வு கொண்டது நம் சமூகம்.

ஆனால் இந்த எம் சமுதாயத்தின் அரசியல்பாதை...? மிக ஆழமாக ஆய்வுக்குட்படுத்த வேண்டிய தொன்றே. தற்காலிகத் தீர்வுகளுக்கும்; சர்வதேச சமூகங்களுடன் கலந்துபேசும் நிலைக்கும் எம் சுயசிந்தனைகள் இடங்கொடுக்குமா என்பது பலத்த சந்தேகத்திற்கு உரியது. ஆனால் ஒன்று நிச்சயமாகச் சொல்லமுடியும் நம் சமூகம் கலங்கிப் போயுள்ளது. பாரம்பரிய அரசியல் கட்சிகள் முதல் இயக்கங்கள் வரையில்; ஸ்ரீலங்கா, இந்திய அர மற்றும் ஆயுதப்படையினர் வரையில் சகலரது நல்வாழ்வுத் திட்டங்களையும் நம் 'ஸ்ரீமான் பொதுஜனம்'

> தன்னுடைய தோல்விகளுக்குப் பிறரைக் குறைகூறும் மனிதன், தன்னுடைய வெற்றிகளுக்கும் மற்றவர்களே காரணமென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.
>
> - ஹோரவட். டபிள்யூ. நியூட்டன்

அனுபவித்து விட்டார். அந்தோ பரிதாபம் இன்னும் தீர்வுகளோ, விமோசனங்களோ, ஆறுதலோ கிடைத்தபாடில்லை. ஆனால் பெரும் அனுபவங்களை நுகர்ந்தவர்களாக பட்டறிவுடன் புதிதாக மெருகேறி சிரிப்பை மறந்தவர்களாக 'ஸ்ரீமான் பொதுஜனம்' வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இந்த நீண்ட கெடுபிடிகளால் கலங்கிப் போயுள்ளதை இன்றைய சூழல் மிகத்தெளிவாகப் உணர்த்துகிறது. சொந்த மண்ணும், பாதுகாத்த பொக்கிஷங்களும் (உடமைகள்), எதிர்காலக்கனவும் சிதைந்துபோக மிகச்செலவாளிகளாக எமக்கு நேர்முன் தலைமுறையினர் செயல்படுவதைக் காண்கிறோம். 1000 ரூபா நோட்டு தண்ணீராகச் செலவாகிறது. பஸ்ஸிற்கு சதம் கொடுக் யோசித்தவர் ஆட்டோவிலும், காரிலும் பயணிக்கிறார். சாதாரண சுகயீனத்திற்குக் கூட 'DELMEN HOSPITAL' இல் அனுமதிக்கப்படுகிறார். கொழும்பில், இந்தியாவில் பணம் தாராளமாகவே இறைக்கப்படுகின்றன.

இங்கேதான் ஜெயபாலனின் கேள்வியை பொருத்திப் பார்க்கின்றேன். அகதி வெளியேற்றத்திற்கு இருபெரும் சக்திகளின் செயல்கள் பிரதான காரணிகளாக இருக்கின்றன.

1. ஸ்ரீலங்கா அரசின் கொடூர இனஒடுக்கல்.
2. போராட்ட இயக்கத்தின் இறுக்கமான(ADAMANT) கெடுபிடி.

இந்த (2) வது அம்சம் மிகக் கவலை தரும் செயலாகும். முழுமையான மீள்பரிசீலனைக் குரியது. எம் சமூகப்பிரிவுகளில் ஒன்றான முஸ்லீம்கள் மீது வைக்கப்பட்டுள்ள அணுகுமுறை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

இன்றுள்ள அகதிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

(1) சொந்த மண்ணில் அகதிகள்.
(2) ஸ்ரீலங்காவில் அகதிகள்.
    2.1 முஸ்லீம் அகதிகள்.
    2.2 தலைநகரில் புலம்பெயர்ந்தவர்கள்.
(3) இந்தியாவில் அகதிகள்.
    3.1 முகாம்களில் தங்கியிருப்போர்.
    3.2 சுயமாக வீடுகளில் தங்கியிருப்போர்.
(4) மேல்நாடுகளில் புகலிடம் கோரிய அகதிகள்.
(ஜரோப்பா, நோர்வே, சுவீடன், கனடா, அவுஸ்ரேலியா.....)

'வெள்ளம் வருமுன் அணைகட்டு' என்று எம்மிடம் ஒரு பழமொழி- எம்மால் முடிந்ததா? போராட்டம் வந்ததிலிருந்து ஓடிக் கொண்டே இருக்கின்றோம். 'புலம் பெயர்வு' அழகான சொல்- எமது சொந்த மண்ணில் இருந்து புலம்பெயரத்தான் மிகுந்தசங்கடமாக இருந்தது. அதன்பின் சுற்றுலா போவது போலாகிவிட்டது. உலகத்தையே எம்மவர்கள் வலம்வர ஆரம்பித்து விட்டார்கள். 'குட்டிபோட்ட பூனைபோல்' மீண்டும் மீண்டும் பெயர்வுகள். ஏன்? இங்கு ஒரு கள ஆய்வு தேவைப்படுகின்றது.

எம்மவரின் எண்ணப்பாடுகளை யூயதர்களுடன் ஒப்பிட்டு பழைய அரசியல் மேடைகளிலிருந்து இன்றுவரை செவிவழியாகக் கேட்டதுண்டு. ஆனால் போராட்ட தரிசனத்தில் பாலஸ்தீனர் படிப்பினையாக எம்மீது முன் உதாரணமாக உணரப்பட்டது. அகதிகள் வெளியேற்றம்

---

## பத்துஆண்டுகளின்முன். . .

**இலங்கை இனக்கலவரங்கள் பற்றி**

எழுத்தாளர் - கே.டானியல்

*இங்கு அடிப்படையில் இக்கலவரங்களுக்கு இனரீதியான சிந்தனைகளும், செயற்பாடுகளுமே காரணங்களாகும். இச்சிந்தனைகளுக்கு ஏறக்குறைய நாற்பதாண்டு வயதெனக்கூறலாம். சிங்களத் தலைவர்களும், தமிழ்த்தலைவர்களும் வாக்குச் சேகரிக்கும் நோக்கில் கைக்கொண்டுவந்த கொள்கைகள்-பிரசாரங்கள் இந்நிலையைத் தோற்றுவித்துள்ளன. தமிழ்- சிங்கள சாதாரண மக்களிடமிருந்து இது தோற்றுவிக்கப்படவில்லை. மெத்தப்படித்த மேல்தட்டு வர்க்கத்தினரிடமிருந்தே தோற்றுவிக்கப்பட்டன. இந்த உண்மையை பாதிப்புக்குட்பட்ட தமிழர்கள் தம்முள் உணர்ந்து தங்கள் அரசியல் கொள்கைகளுக்குச் சரியான வழியைத் தேடாதவரை இவைகள் போன்ற பலசம்பவங்களைச் சந்திக்க வேண்டியே ஏற்படும். இங்குள்ள தமிழர்களில் பெரும்பான்மையினர் தமிழகமே தமது தாயகம் என்றும், அதுவே தலையிட்டு தமது பிரச்சனையைத் தீர்த்துவைக்கும் என்றும் இன்றுவரை எண்ணுகின்றனர். காந்தி, நேரு, போஸ், அண்ணாத்துரை, கருணாநிதி, எம்.ஜி.ஆர் போன்றோரின் உருவப்படங்களே இவர்கள் வீடுகளையும், வியாபாரத் தலங்களையும் அலங்கரிக்கின்றன. இங்குள்ள தமிழ்-சிங்கள தேசியத் தலைவர்களின் படங்களைப் பார்ப்பது மிக அபூர்வம். குறிப்பிடக்கூடிய ஒவ்வொரு காலகட்டத்திலும் அரசியல் அகதிகள் என்று கூறிக்கொண்டு வெளிநாட்டுச் சம்பாத்தியத்திற்காக இவர்களுள் பலர் ஓடிச் சென்றுவிடுகின்றனர். ஓடிச் செல்லும்போது 'சிபாரிசு' கடிதங்களைத் தமிழ்த் தலைவர்களே கொடுக்கின்றனர். இந்த நிலையில் இவர்கள் தங்கள் மண்ணுக்காக நிலைத்து நின்று போராடி வாழ்வுபெறுவர் என்பது நம்பிக்கையில்லாத ஒன்று. தற்காலத்துக்கு 'பாக்குநீரிணை' ஒன்று குறுக்கே நிற்கின்றது. இல்லாவிட்டால் இங்குள்ள தமிழர்கள் தமிழகம் வந்துசேர்ந்துவிடுவர். சிங்களவர் குடியேற்றத்தினால் யாழ்ப்பாணம் நிறைந்திருக்கும். ஒரு நாட்டின் பெரும்பான்மை இனத்தவர் அநீதியின் பக்கமாக எழுந்து வரும்போது அரசு இயந்திரங்களும் அதற்கு ஒத்தாசையாக இருக்குமிடத்து, அது என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை இத்தனைக்குப் பின்பும்கூட தங்கள் அனுபவங்களைக் கொண்டு உணர்ந்துகொள்ள தமிழர்கள் பிடிவாதமாக மறுக்கின்றனர். அத்துடன் கலவரத்தின் உடைமைச் சேதங்களையும், உயிர்ச்சேதங்களையும் கடந்தகாலத்தில் அப்போதைக்கப்போது கிராமங்கள்தோறும் தங்களால் 'பஞ்சம' மக்களுக்கு வருவிக்கப்பட்ட உயிர்ச்சேதங்களுடனும், உடைமைச் சேதங்களுடனும் ஒப்பிட்டால், இங்கு நடந்த இனக்கலவர இழப்பு சாதாரணமானது என்பதையும் ஒப்புக்கொள்ள மறுக்கின்றார்கள். இது எதிர்காலத்திற்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒன்றல்ல.*

நன்றி: நான்காவது பரிமாணம்

தகவல்: பயஸ்

பாலஸ்தீனர் நிலையைத் தோற்றுவிக்குமென்றே வலியுறுத்தப்பட்ட கருத்தாகவிருந்தது.

ஆனால் எம் போராட்டத்தில் மிகுந்த விதிவிலக்குகள் காணப்படு கின்றன. அகதி வெளியேற்றம் பல்வேறு சாதக, பாதக விளைவுகளை உண்டு பண்ணியுள்ளது. இதில் பாரியதாக்கத்தை உண்டு பண்ணி யது, 'மேல் நாடுகளில் புகலிடம் கோரிய அகதிகளிடமிருந்தே' வெளிப்பட்டதெனலாம். நிகழ்காலத்தில் பல்வேறு வகைகளில் எமது சமூகத்தின் தீர்மானிக்கும் சக்தியை (DECISION MAKING POWER) தற்செயலாகவோ, தவிர்க்க முடியாதவாறாகவோ இவர்கள் பெற்றுள் ளதைக் காணமுடிகிறது. எனவே முக்கிய பரிசீலனைக்குரியதாகிறது.

(1) பொருளாதாரத்தை அள்ளி வழங்குபவர்களாக இருக்கின்றார்கள்.
(2) குடும்ப உறவுமுறையே தலைகீழாகி- புதியநாயகர்களின் மதிப்பு நிலைபெற்றுள்ளார்கள்.
(3) சமூகச் சடங்குகளில் மிகப்பிரதானமாக இருக்கும் கல்யாணம், சாவு நிகழ்வுகளில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்துள் ளார்கள்.
   3.1 'நம்மூரில் கல்யாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்துவிட் டார்' என்று பகிடி விடுவதுண்டு. ஆனால் இன்று மாப் பிள்ளை இல்லாமலேயே கல்யாணம் நடக்கிறது. பினாமி (மாப்பிள்ளையின் தாயார் அல்லது மாப்பிள்ளையின் சகோதரி) தாலிகட்டுகிறார். இதற்கேற்ப புதிய சடங்குக ளும் நடக்கின்றன.
   3.2 மகன்களில்லாமல் சாவு சடங்குகள் பினாமிகளாலேயே (சிலசமயம் சடங்கு நடாத்தும் ஐயர்) நடாத்தப்படுகின்றன.
   3.3 இவையெல்லாம் ஒரு தசாப்தத்தின் முன் நினைத்துக்கூட பார்க்க முடியாதவை. இப்படிச் செய்யலாம் என்று சொல் லியிருந்தாலேயே 'கம்யூனிசக்கார'னென ஒதுக்கியிருப்பார் கள்.
(4) புதிய கௌரவம்.
   * இன்று பெயர்களின் பின் பட்டங்கள் போடப்படுவதில் பெருமையில்லை. மேலத்தேசங்களில் அவர்கள் வாழும் நாடுகள் புதிய கௌரவப் பட்டங்களாகிவிட்டன.
   * இதனால் லண்டன், அவுஸ்ரேலியா சென்றிருந்த 'படித்த டமில்ஸ்களுக்கு' சிறிதாக ஒரு விரிசல். 'அருமை பெரு மையாகக் காட்டிக் கொண்டிருந்த வெளிநாட்டை இப்படி யாக மலினப்படுத்தி விட்டார்களே' என்று ஒரு வெறுப்பும் உண்டு. இன்றும் 80 களின் பின்வந்தவர்களை 'அகதிப் பொடியள்' என்று தரமிறக்கியே இவர்களால் பார்க்கப்படுகி றது.

இறுக்கமாக மூடிய வாழ்வுடன் இருந்த எமது சமூகம் இன்று தவிர்க்க முடியாதவாறு பல்வேறு அனுபவங்களை உள்வாங்கிவிட்டது. உள்ளூ ரிலேயே பக்கத்திலிருக்கும் நகருக்குப் பயணப்படாத சமூகம், இன்று பல்வேறு நாடுகள், நகரங்கள், மொழிகள், நாணயங்கள், கலாச்சாரங் கள்..... வென பலவற்றை நேரடியாக தரித்துள்ளது. இதன் தாக்கம் நிச்சயமாக ஒரு 'புத்தொளிவீசும் ஒரு புதிய சகாப்தத்திற்கு வித்தி டவே செய்யும்'.

போராட்டம் பலபக்கவிளைவுகளைத் தந்திருந்தாலும் குறிப்பிடத்த குந்த சாதக விளைவுகளைத் தரத்தவறவேயில்லை. நீண்டபோராட் டம் மறுசிந்தனைக்கு வித்திட்டுள்ளது. மிகவும் பிற்போக்கான குணாம்சங்களையுடைய சாதிய, பிரதேச வேறுபாடுகள் பற்றி புதிய கருத்துக்கள் நிலைகொள்ள வழிசமைத்துள்ளது.

தசாப்தம் தாண்டிய மூர்க்கமான போராட்டச் சூழலிருக்கும் நாம் இவற்றை ஆய்வுக் கெடுப்பதனூடாக பலவற்றை இனங்காண முடியும். அதாவது போராட்டவாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ள 'புலம் பெயர் வாழ்வை' முழுமையான ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என முன் மொழிகின்றேன். புத்திஜீவிகளும், ஆய்வாளர்களும் திறந்த மனத் தோடு முன்வர வேண்டும். இன்று 'புலம்பெயர் வாழ்வு' பற்றி இலகு வாகவே ஆய்வு செய்யும் வாய்ப்புள்ளது. எம் சமூகத்தின் பெரும் பான்மை புத்திஜீவிகளும், ஆய்வாளர்களும் இந்தச் சூழலில்தான் வாழ்கின்றார்கள் என்பது நல்ல வாய்ப்பு.

அதாவது எமது சமூகம் பல்வேறு மிகக்கடும் நெருக்குதலுக்குள்ளாகி தொடர்ந்த போராட்டத்தால் கசக்கிப்பிழியப்பட்டு, ஒரு புதிய 'உருகு நிலையை' வந்தடைந்துள்ளது. சரியான எதிர்கால வடிவங்களை விஞ்ஞானபூர்வமாக முன்வைத்தால் நிச்சயமாக 'முற்போக்கான சமூகமாக' நாம் விளங்கும் வாய்ப்புள்ளது. போராட்ட நெருக்குதல் நேரடியாக இருவிழைவுகளைத் தந்துள்ளது. (1) அழிவுகள். (2) அகதியாக்கப்படல். இவ்விரு நிகழ்வுகளும் கடந்த ஒரு தசாப்தத்துக் குள் தமிழ்பேசும் மக்களின் சகலகூறுகளிலும் நிகழ்ந்துள்ளன. அழிவுகளைப் பரிசீலனைக் குட்படுத்துவதிலும் பார்க்க, அகதிகள் அவர்களது புதிய வாழ்நிலையைப் பரிசீலனைக்கு எடுத்தல் எமது சமூகம் தொடர்பான ஒரு மாதிரி (SAMPLE) யை ஆய்வு செய்தது போலாகும்.

இங்கே தான் மேலத்தேய புலம்பெயர்வாழ்வு தனித்துவ இடத்தைப் பெறுகிறது.

(1) எம்மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும், இந்தியா மற்றும் இலங்கையில் அகதியாகவுள்ளவரிடமும் நேரடியாக சமூகப் பொருளாதாரப் பின்னலுடன் இருக்கும் சமூகக்கூறுதான் 'மேலத்தேய புலம்பெயர் சமூகம்'.
(2) 80 களின் பின் போரட்டத்தாக்கங்களால் அல்லது போராட்ட நெருக்குதல்களால் பிதுங்கி வெளியேறிய கூறாக இருக்கின்றது.
(3) வெளிநாட்டு வாழ்வுபற்றி முன்னைய 'படித்த டமில்ஸ்' ஒரு வடிவத்தைக் காட்டியிருந்தாலும் அதை மீறி தனக்கான விருப்பு வெறுப்புகளை தன்னியல்பாக வெளிப்படுத்தி தனித்துவம் காட்டியுள்ளது. சுமார் 10 வருடங்களில் பல்வேறு பத்திரிகைக ளில் இடமும் பிடித்துள்ளது.

ஆக, இதை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தினால் வியக்கத்தக்க முடிவுகளுக்கு ஆய்வாளர்களால் வரமுடியும்.

ooooo ooooo ooooo

## புலம் பெயர் வாழ்வு.

<u>எம் சமூகத்தின் மேட்டுக்குடியினர்:-</u> லண்டனுக்கும், அவுஸ்ரேலி யாவுக்கும் சென்று 80 களின் முன்பே வேருன்றிவிட்டவர்கள். இவர்களின் வழித்தொடர்புகளுள்ளவர்களும் 80 களின் பின் இலகு வாக இவ்விடங்களில் ஒதுங்கிவிட்டார்கள்.

இனி, <u>மேல்நடுத்தர வகுப்பினரும், கீழ் நடுத்தர வகுப்பினரும்:-</u> இவர்களில் புத்திஜீவிகள், ஆற்றலுள்ளவர்கள், ஆய்வாளர்களும் அடங்குவர். இன்று புலம்பெயர்வாழ்வில் 80 களின்பின் பல்வேறு நாடுகளில் கால்பதித்துள்ளார்கள். இவர்களின் தாக்கத்தினாலேயே கொழும்பிலும், இந்தியாவிலும் (சுயமாக வீடுகளில் தங்கியுள்ள அகதிகள்) பிறிதொரு புலம்பெயர்வு காணப்படுகின்றது. இந்த நடுத்தர வர்க்கம் புலம் பெயர்ந்த பின்தான் பல்வேறு நாடுகளில் தமிழ்சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகள், சுயவியாபார விஸ்தரிப்புகள், தமிழ் வீடியோ படங்கள் என.... பல்வேறு சமிக்ஞைகளைக் காண்கிறோம்.

இன்று இந்தியப் பத்திரிகைகள் கூட 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' எனச் சுட்டும் வகையில் தமிழ் புதிய நிலையை அடைந்துள்ளது இவர்களால் தான்.

அடுத்ததாக, அடிமட்ட மக்கள்:- சொந்த மண்ணிலும், இந்தியாவில் முகாம்களிலும் அகதிகளாகவுள்ளதைக் காணலாம். இந்த முகாம்களில் தங்கியுள்ள அகதிகளைத்தானே இந்திய அரசு வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்புகிறது.

மேல் நாடுகளில் புலம் பெயர்ந்தவர்களில் கொஞ்சம் கவனம் செலுத்துவோம். பொருளாதாரத் தேடலிலும், தன்முயற்சி செயல்களிலும் தீவிர செயற்பாடுகளைக் கொண்ட 80 களின் பின்வந்த 'அகதிப் பொடியள்' மிகுந்த தாக்கத்தை இன்று உண்டு பண்ணியுள்ளார்கள். இந்தத்தாக்கம் மேட்டுக்குடி டமில்ஸ்களைப் பாதிக்கவே செய்துள்ளது. தமிழின்பால் BARADHA (பரதநாட்டியம்), KARNATIC (கர்நாடசங்கீதம்), MURUGA (முருகன்வழிபாடு) என தமிழின் கூறுகளை ஊறுகாயைத் தொடுவதுபோல் இவர்கள் கடைப்பிடிக்கத் தவறுவதேயில்லை. தமிழ்தெரிந்த அந்நிய தேசத்தவர்கள் வந்தாலும் இந்த டமில்ஸ்களால் TAMIL பற்றி ஆங்கிலத்திலேயே உரையாட முடியும். இவர்களின் வம்சாழிகளுக்கு தமிழே வராது. சில விலக்குகள் இருக்கலாம். இதில் ஒரு வேடிக்கையென்ன வென்றால் போராட்டத்தை முன்னெடுத்த சிலரின் நிலைகூட இதுதான்!

இங்கு ஜெயபாலனின் கேள்விக்கு மீளவும் வருவோம்- இந்த மேட்டுக்குடியினர் திரும்பிப்போகும் மனக்குழப்பத்தில் இல்லை. நடுத்தரவர்க்கத்தில் மேல்மட்டம் ஒரு புதிரான நிலையை வெளிப்படுத்துகிறது. இவர்களின் நடத்தைகள் பெரும்பாலும் லண்டன் மேட்டுக்குடியினரிடம் இருந்தே இறக்குமதியாகின்றன. ஆனால் பூரணமாக இலங்கைத்தொடர்பை வெட்ட இவர்கள் தயாராகவில்லை. விடுமுறைக்காவது ஊர் சென்று பவுசுகாட்ட இவர்கள் துடிப்பது தெரிகிறது. புலம்பெயர் மண்ணில் சொந்த வீடுகள் அமைத்துக் கொள்கின்றார்கள். நன்றாகத் திட்டமிட்டு நிதி சேமிப்பில் அதிகநாட்டமுடையவர்களாக இருக்கின்றனர்.

இன்று, கீழ் மட்ட நடுத்தர வர்க்கத்தினர்தான் பலரையும் கவர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களின் உயிர்த்துடிப்பு பிறந்த மண்ணுடன் பின்னியுள்ளது. பொருளாதார முற்றுகையாகட்டும், நீண்ட போராட்டமாகட்டும் பணத்தை அள்ளிக் கொட்டுபவர்கள் இவர்களே. தாம் விரும்பும் உணவு, பொழுதுபோக்கு, பத்திரிகைகள் எவையாகட்டும் இவர்கள் நுகரத் தயங்குவதே கிடையாது. திரும்பிப்போகும் அளவைத் தீர்மானிப்பவர்கள் இவர்கள் தான்.

1955 க்குப்பின் மலையகத்தில் 60 க்கும் மேற்பட்ட சஞ்சிகைகள் தோன்றியுள்ளன. 30 க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் தோன்றியுள்ளார்கள். இலங்கைத்தமிழ் இலக்கியத்துக்கு காத்திரமான பங்களிப்பை மலையகப் படைப்பாளிகள் செய்துள்ளனர். இதனை சரியாக எடைபோட்டு எவரும் எழுதவில்லையென்ற குறைபாடு உண்டு. அதனால் "மலையக இலக்கிய வரலாறு" முழுமையாக எழுதப்பட வேண்டும்.

- அந்தனி ஜீவா - தகவல் : ஃபேடினன்ஸ்

வர்க்க ரீதியாக மேற்கண்டவாறு நோக்கினாலும், உணர்வு ரீதியாக வேறொரு பகுப்பினையும் பார்க்கலாம். எம் நாக்கு முதலில் காற்றில் தட்டிய அந்த மொழியை- நாம் சிந்திக்கும் மூல மொழியை- தமிழ்மொழியை புறந்தள்ள முடியுமா? அப்படியாயின் இப்போராட்டத்திற்கு வரவேண்டிய காரணமே இல்லையே. இலங்கைத்தீவின் முழுச்சிங்கள மயமாக்கல் திட்டத்தில் உடன்பட்டு இலகுவாகவே கரைந்திருக்கலாமே.

(1) இயல்பாகவோ, தூரதிஷ்டமாகவோ இன்று எம்மின் ஒருபகுதி புதிய கலப்பு சமூகக்கூறுகளில் கரைய ஆரம்பித்துவிட்டது. காலஓட்டம் தடம் மாறிய பாதைகளிலும் ஒருபகுதியினரை தள்ளி விட்டது. இவர்கள் தமிழ்மொழியைப் புறந்தள்ளி விட்டார்கள்.

(2) இதற்கு நேர் எதிராக வாழத் தலைப்பட்டு திணறிக் கொண்டிருக்கிறது அடுத்த பிரிவு. இவர்களின் எண்ணங்கள் பிரச்சனைகள் ஆய்வுக்குரியவை.

சிந்தனை பலவாறாக விரியலாம். ஆனால் விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள், பரிசீலனைகளே தெளிவான முடிவுகளைத் தரமுடியும்.

*'மேல்நாடுகளில் புலம் பெயர்ந்தவர்கள்'* பற்றிய *எண்ணக் கருத்துக்கணிப்பீடு -அதாவது ஒரு களஆய்வு- இன்று தேவை.* அரசியல் சாராத/பக்கச்சார்பற்ற தன்னார்வக்குழுக்கள், பொதுநல அமைப்புகள், தனி நபர்கள் இதனை மேற்கொள்ள பொருத்தம்.

எமது சமூகம் மிகவும் இறுக்கமாக மூடப்பட்ட தன்மை கொண்டதாயினும் தற்போது ஒரு புதிய நெகிழ்ச்சிப் போக்குடன் உருகுநிலையில் காணப்படுகிறது. இதன் சாதக, பாதக அம்சங்களை இனம் கண்டு புதிய முற்போக்கான சமூகம் உருவாக உழைக்க எவரும் தயங்கப்போவதில்லை.

அறிவுஜீவிகளும், ஆய்வாளர்களும் ........ முன்வருவார்களா?

---

## குஞ்சரம்

*ஆத்மன் - யாழ்ப்பாணம் 1984*


பற்றைகள் நிரம்பிய அந்தவளவினுள் தான் நாம் (இயக்க உறுப்பினர்கள்) அடிக்கடி சந்திப்பது வழக்கம். அந்த வளவின் முன்னால் செல்லும் ஒழுங்கையால் அடிக்கடி போத்தல், பித்தளை, சருகைச்சேலைகள் சேகரிக்கும் நபர்கள் போவது வழக்கம்.
அன்றொருநாள் அந்த ஒழுங்கையில் சென்ற அந்த வித்தியாசமான மனிதர் ஒழுங்கையில் மினக்கெடுவதுபோல் இருந்தார். ஏனோ தெரியவில்லை. இயக்கப்பணிகளைப் பொறுப்பு எடுத்ததில் இருந்து யாரைப்பார்த்தாலும் ஒருவித சந்தேகம் எங்களிடம் குடிகொண்டிருந்தது.

விடுவமா பின்னே? நபர் "இயக்கப்பாணியில்" முறையாக விசாரிக்கப்பட்டார். ஆனால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.
காலங்கள் ஓடின. ஒருநாள் யாழ்நகரவீதியில் சாமான் வாங்கச்சென்ற வேளையில் அந்த நபரை நான் சந்திப்பேன் என்று சற்றுமே எதிர்பார்த்திருந்திருக்கவில்லை. என்னுள் தாங்கமுடியாத குற்றவுணர்ச்சி அந்த மனிதரைக்கண்டு ஓடவேண்டும் போலிருந்தது. ஒதுங்கி நின்று பார்க்கின்றேன். அந்த உருவம் தனக்குள் தானே கதைத்துக் கொண்டு என்னைத்தாண்டி சென்றுகொண்டிருந்தது.

அந்த உருவம் சிரித்த அந்தச்சிரிப்பு என்னைப் பார்த்து பரிதாபப்பட்டது போலிருந்தது.

# யாழ்ப்பாணத்தானும் கிழக்குமாகாணமும்

**2**




- கி.பி. அரவிந்தன் -

*இராணுவவெறி கால்பாவாத முன்னொரு பொழுதில் திருகோணமலை நகரில் இருந்து தூர்ந்து கிடக்கும்பாதை ஒன்றில் சென்றிருந்தேன். பாதையொன்றிற்கான அடையாளமாக சிதறிய சிலகற்களே கால்களில் இடறின. அவ்வழியால் முன்னரெல்லாம் யாழ்ப்பாணம் செல்லலாமென அறிந்திருந்தேன். தற்போது அவையும் தடம் காட்டுமா என்பது சந்தேகம் தான். 1978ல் மட்டக்களப்பினை புயல் தாக்கியவேளை யாழ்ப்பாண இளைஞர்கள் உதவிப்பொருட்களுடன் அபயக்கரம் நீட்ட துடித்தபோது எப்படி எவ்வழியால் செல்வது எனத் தயங்கியதையும் கண்டுள்ளேன். ஏனெனில் தமிழ்பேசாத மக்கள் வாழும் பகுதியூடாகவே வழி இருந்தது என்ற அச்சம்தான். யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு தாண்டுவதானால் கொழும்பு செல்லும்பாதை தான் கவனத்தில் இருப்பதுண்டு. காத்தான்குடியில் நெய்யப்படும் மட்டக்களப்புச் சாரமும், யாழ்ப்பாண வெங்காயமும் கொழும்பில்தான் விற்றல்-வாங்கல் பரிமாற்றம் நடைபெறும். ஆனால் யாழ்ப்பாணத்தில் 1970ல் அரிசி விலையேற்றமும், தட்டுப்பாடும் நிலவிய போது மட்டக்களப்புக்கு சென்று குறைந்தவிலையில் அரிசிவாங்கி களவாக ரயிலில் கொண்டு வந்து லாபத்திற்கு விற்றபோதும் 'பாயோடு ஒட்டவைக்கும்' மட்டக்களப்பு யாழ்ப்பாணத்தாருக்கு ஒட்டாத உறவுதான்.*

*தமிழ்ப் பல்கலைக்கழக கோரிக்கையெழுந்து திருகோணமலையில் நிறுவலாம் என்று இயக்கம் பெற்றும், வெற்றிகரமாக பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவிகொண்டது படித்த யாழ்ப்பாணம். 1962ம் ஆண்டு தமிழ்பேசும் மக்கள் பங்கேற்ற சத்தியாக்கிரக எழுச்சியின் பின்னால் 'தமிழ்பேசும் மக்கள்' பதத்தின் வீரியம் மங்கித் தான் சென்றுள்ளது. ஆயினும் "மட்டக்களப்பு, யாழ்நகர், மாந்தை, வன்னி, திருமலை பலவளங்கள் கொழித்திடும்....." எனும் இடைஅடிகள் கொண்ட "வாழ்க ஈழத்தமிழகம்" எனும் பரஹம்சதாசனின் பாடலை வாக்காளர் தேடும் அரசியல் மேடைகளில் கேட்டதுண்டு. பூரித்ததும் உண்டு. மீசை முளைக்காத போதிலும் கால்முளைத்த கருத்துக்களுடன் குடாநாட்டின் வெளியே அலைவுடன் தரித்திருக்கின்றேன்.*

*குடாநாட்டை தாண்டினாலேயே தெரிந்து விடுகின்றது விரிந்த வேலிகள், அவர்களின் மனம் போல். மட்டக்களப்பில் ஒரு செம்புத்தயிரில் தேன்கலந்து நீட்டுகையில், வழுகி விடும் முழங்கையைப் பிடித்து 'சாப்பிடுங்களன்' என நழுவவிடும் படித்த யாழ்ப்பாணம் நினைவுறுத்தும். ஒவ்வொரு வகைக்கறிக்கும் ஒருமுறை சோறாக பலமுறை பரிமாறும் மட்டக்களப்பு வயல்புற மக்களின் வருவிருந்தோம்பும்முறை தெரியாமல் ஒரேமுறையில் சோற்றை உண்டுவிட்டு திண்டாடுகையிலும், ஏன்கிளி, என்னகா, மறுக்கா, கிறுகி, சூர்ந்து, வெட்டை, மடு... என்ற பேச்சுமொழியை கேட்கையிலும் ஒருகூப்பிடு தொலை தூரத்துள் முறைமையும் வழக்கும் மாற்றமாய் தெரிந்தது உண்மைதான். ஆனால் துண்டிப்பாய் இருக்கவில்லை. கிழக்கு மாகாணத்தின் அறுவடைகாலத்தின் போது வடக்கே இருந்து கூலி உழைப்பாளர்கள் வயல்புறங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். என்பதானது பின்னாளில் செவிவழியாக என்னிடம் வந்து சேர்ந்த*

## மலையக மக்களும் கைலாசபதியும்

உன் மயிரோ கறுப்பழகு
உன் மேனியெல்லாம் தங்கநிறம் என்ற மலையகப் பாடல்வரிகளைக் கேட்டு பேராசிரியர் கைலாசபதி தலையாட்டி இரசித்தார்.
"தோட்டங்களில் உத்தியோகம் செய்யும் யாழ்ப்பாணத்தவர் என்ன செய்கின்றார்கள் என்பதை எனக்குச் சொல்லியிருக்கின்றீர்கள். அவற்றை பச்சையாக நாவல்களில் எழுதுங்கள். நான் பத்திரிகையில் போடுவேன். அப்போதுதான் இவர்களுக்கு சுரனை வரும்" என்றார் கைலாசபதி.
கதை வெளிவர ஆரம்பித்தது அதைவாசித்த சிலநண்பர்கள் என்னுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் கைலாசபதி அவர்களுக்கு அதில் தனிச்சந்தோஷம்.

- சி.வி.வேலுப்பிள்ளை -

செய்தி இது. இவர்களை அழைத்து சென்ற வழிகாட்டிகளே, பின் போராட்ட ஆயுத நகர்வுக்கு வழிகாட்டி துணைசெய்தார்கள்.

நீரும் நிலமுமாய் பிணைந்த மூதூரில் வயலும் வாழ்வும் பரந்து கிடக்கும். மரம்செடி அரணிடும் நீரிடை வள்ளத்தில் வளையவர மனமெல்லாம் நீர்மையுறும். இலங்கையின் நெற்களஞ்சியமென சிறப்பிக்கப்படும் கிழக்கு மாகாணம் இன, மத, பேதங்களின் களஞ்சியம் எனல் பொருத்தமானதே. கண்ணாடி மணற்பரப்பும்; கன்னியா வெந்நீரூற்றும்; காலநிலை பாதிக்காத இயற்கைத்துறைமுகமும்; இராவணன் வெட்டும்; இலங்கையின் பெரியநதியான மகாவலியின் கழிமுகமும்; குளக்கோட்டன் மன்னன் காலக்கோயிலும், குளமும்; கண்ணகி சினம்தணித்த வந்தாறுமூலையும், கண்ணகி வழிபாடும்; பாடுமீன் வாவியும்; எழுவான், படுவான் கரைகளும்; வட்டக்களரியும், வசந்தன் கூத்தும், தொன்மையும் தொன்மங்களும் தமிழ்பேசும் மக்களின் தேசியபண்பென அடையாளம் காட்டும். தமிழ்பேசும் மக்களின் மீதான இனஒடுக்குமுறையின் வடுக்களை நாளும் பொழுதும் பெற்றவர்கள், எதிர்கொண்டு வாழ்பவர்கள் இவர்களே என்றால் மிகையல்ல.

அபிவிருத்தி என்ற போர்வையில் குடியேற்றத்திட்டங்களாய் வாழ்நிலப்பறிப்பும் இடஆக்கிரமிப்பும் இடம்பெற்றது எழுபதுகளின் பின்பல்ல. ஆனால் தமிழ்பேசும் மக்களின் அரசியல் தலைமையையும், தீர்மான வலுவையும் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தாரது மனோநிலையானது குடாநாட்டினுள் கடைப்பிடித்த சாதிய புறந்தள்ளலைப் போலவே குடாநாட்டின் வெளியேயான மக்களையும் புறத்தியாராக நடத்தியது. அதேவேளையில் குடா நாட்டின் வெளியே 'யாழ் அகற்றிச்சங்கங்கள்' அமையப் பெற்றதை காணநேர்ந்த புதிருடன் திருக்கோவிலுக்கு அப்பாலும் பயணித்தபோது பெருவாரியான நிலங்கள் யாழ்ப்பாணத்தார் கையகப்படுத்தியிருந்தது அதிர்ச்சியாக இருந்தது. கிழக்கு மாகாணத்திற்கே உரித்தான 'போடியார்' எனும் நிலஉடைமையாளரை விடவும் அதிக நிலங்கள் இவர்கள் கைகளில் இருந்தது. அங்கு தொழில்நிலையங்கள், வணிகங்கள், அரச செயலகங்கள் எல்லாவற்றிலும் யாழ்ப்பாணத்தாரே முதன்மை வகித்தனர். ஆச்சரியமானது என்னவென்றால் யாழ் அகற்றிச் சங்களின் மூலவர்கள் 'முந்திவந்த' யாழ்ப்பாணத்தாராகவும் இருந்தது தான்? ஆண்டபரம்பரையினருக்கேயுரித்தான பிரித்தாளும் தந்திரம் தான்? "இடங்கண்டாவிடுவானா யாழ்ப்பாணத்தான், மடங்கண்டா விடுவானோ பட்டணத்தான்" எனும் நாட்டுப்புற வழக்காற்றில் பொதிந்துள்ள உண்மைகள் இவை தானோ? குடாநாட்டின் உட்புறத்திலேயே இவ்வழக்காற்றை கேட்டுள்ளேன். அப்படியானால் யார் இந்த யாழ்ப்பாணத்தான்?

பின்னாட்களில் தமிழ்நாட்டில் அலைகையில் நகரம், கிராமம் எனும் பிளவினை துல்லியமாய் காணமுடிந்தது. பாரதிராஜாவின் திரையுலக வருகையின் பின்னர் திரையிலும் வெளிச்சமாகியது. கோவணாண்டி கிராமத்தானும், கால்களில் குழாய் அணிந்த படித்த நகரத்தானுமான, உறவின் முரண்கள், செயல்கள் போலவும் யாழ்ப்பாணத்தானை நான் யோசிப்பதுண்டு. குடாநாட்டில் உள்ளோர் படித்த, குழாயணிந்த கதாநாயகர்கள் போலவும்; குடாநாட்டின் வெளியே தண்ணி இல்லாக் காட்டிற்கு இவர்கள் உழைக்க செல்வது போலவும், படிப்பறியா கிராமத்தார்க்கு கற்பிப்பதாகவும், சேவை செய்வதாகவும் மனத்திரையில் எண்ணினேன். ஆனால் பாரதிராஜாவின் கதாநாயகர்களின் நோக்குகளுக்கு அப்பாலும் யாழ்ப்பாணம் வேறு நோக்குடன் செயலாற்றியதை அறிய மேலும் கொஞ்ச நாட்களாயிற்று.

எழுபதுகளில் தீவிரம்பெற்ற பொடியன்களின் எண்ணப்பாங்கானது இவற்றின் எதிர்முனையில் இருந்தே செயலூக்கம் கொண்டிருந்தது. தவறுகள், பழமைகள் களையப்பட வேண்டுமென்றே ஆர்வம் கொண்டிருந்தது. 1930களில் யாழ்ப்பாணச்சமூக அடுக்கில் சீர்திருத்தம் கோரிய மாணவர் காங்கிரசின் மனோநிலையை, சீர்திருத்தப்பண்பை, இவ்விளைஞர்கள் கொண்டிருந்தனர். தங்கள் பணிகளை குடாநாட்டின் வெளியேயும் மேற்

*நிரந்தர இலங்கைத் தமிழ்ப்பிரஜைகளான கிழக்கு மாகாணத் தமிழர்கள் வடபகுதித் தமிழர்களுடன் அந்நியோன்னியப் பிணைப்புக் கொண்டவர்களல்லரென்பது ஊரறிந்த உண்மை. 'யாழ்ப்பாணிகள்' என்ற பதப்பிரயோகத்தின் உணர்ச்சிப் பகைப்புலத்தின் ஆழத்தை நாம் மறந்து விடக்கூடாது. இலங்கைத் தமிழர்கள் என்ற முறையில் தமக்குரிய சில உரிமைகள், சலுகைகளைத் தாம் அனுபவிக்க முடியாத அளவுக்குத் தம்மை யாழ்ப்பாணத்தவர் தள்ளி வைத்துள்ளனர் என்ற விரக்தியுணர்வு மட்டக்களப்புத் தமிழ் மக்கள் பலரிடையே காணப்படுவது உண்மை. 1956க்குப் பின் இலங்கையின் அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் யாழ்ப்பாணத்தவரையும், கிழக்கு மாகாணத்தவரையும் இணைக்க உதவியுள்ளது உண்மையெனினும், மேற்கூறிய கருத்து தொடர்ந்து நிலவுகின்றது என்பது பலர் வெளியே எடுத்துச் சொல்ல விரும்பாத உண்மையாகும். அரசாங்க ஊழியர்கள், வர்த்தகர்கள், முதலியோரே இப்பகுதி மக்களுடன் முக்கிய தொடர்பு கொண்ட யாழ்ப்பாணத்தவராவர். வடபகுதித் தமிழருக்கும், இப்பகுதிகளுக்கும் அரசியல் ஒருமைப்பட்ட கருத்தில்லை என்பதை பொதுத்தேர்தல்கள் பலமுறை நன்கு எடுத்துக் காட்டியுள்ளன. இங்கும் நாம் யாழ்ப்பாணத்தார் பற்றிய கருத்தின் நியாய, அநியாயங்களை ஆராய வேண்டியதில்லை; கருத்து உள்ளது என்னும் உண்மையே முக்கியமானதாகும்.*

*இவ்வாறு பார்க்கும் பொழுது வடபகுதியில் வாழும் தமிழர்கள் மாத்திரமே தனியொரு குழுவினராகக் கருதப்படுகின்றனர் என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால் நிலமை அதுவன்று. வடபகுதியிலுள்ள வன்னிப்பகுதிகளிலும், யாழ்ப்பாணத்தவருக்கெதிரான ஓர் உணர்வு உண்டு. வன்னிப்பகுதியின் வளத்தை யாழ்ப்பாணத்தவர்கள் சூறையாடுகின்றனர் என்றவொரு அபிப்பிராயம் அப்பகுதியில் நிலவுகின்றது என்பதும், அவ்வுணர்வைப் பயன்படுத்தி அங்கு வாழுகின்ற யாழ்ப்பாண மக்களை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதும் இன்று எம்மிற் பலர் குறிப்பிட விரும்பாத உண்மையாகும்.*

*யாரிந்த யாழ்ப்பாணத்தான்?*
*பேராசிரியர் கா.சிவத்தம்பி*

கொள்ளுவதிலும், காவிச்செல்வதிலும், கலந்துவிடுவதிலும் குறியாக இருந்தார்கள். இந்த பொடியன்களின் எழுச்சியில் உருப்பெற்ற இயக்கங்களையும், அதன் நெறியாளர்களையும் போல், குடாநாட்டிற்கு வெளியே இருந்து- அதுவும் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த மக்கள் மத்தியிலிருந்து- பெருவாரியாய் ஆளுமைகள் முகிழ்ந்தெழாமல் போனது கவனத்திற்கும், ஆய்வுக்கும் உரியவை. ஆனால் இந்தப் பொடியன்களிடமும், பொடியன்களில் இருந்து கிளைத்த 'விடலைகளிடத்தும்' யாழ்ப்பாண மனோபாவம் அறுபடாமல் போனதென்பது தான் கவலை தரும், கசப்பான உண்மையாகும். இதுவும் 70க்கு முன் தப்பிச் சென்ற-தாயகம் துறந்த யாழ்ப்பாணத்தாரின் மனோபாவ எண்ணச்சிதறல்கள் போலும்! யாழ்ப்பாணத்தில் இருந்து ஆனையிறவை தாண்டிச் சென்றவர்களையெல்லாம் திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு, ஏன் வன்னி கூட வரவேற்று வீடுகளில் தங்க வைத்தன. கிராமங்களாகவே அவர்களுடன் இணைந்து நின்றன. ஆனால் அங்கிருந்து அவர்கள் 'போராட்டக் கருத்துக்கள் பற்றி' மீளவும் யாழ்குடாவுக்குள் எண்பதுகளின் பின்னால் நுழைந்தபோது அவர்களை எங்கள் சொந்த வீடுகளுக்குக்கூட அழைத்து செல்லமுடியவில்லை. ஒருசில விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால் படித்த அதிகார யாழ்ப்பாணிகளின் மேலாண்மையால் ஓரங்கட்டப்பட்ட கிராமங்களால் அவர்கள் வரவேற்கப்பட்டதும், ஆதரிக்கப்பட்டதும் நினைத்து தென்புறும் உண்மைகளாகும். "ஒரு மனிதன், ஒரு இயக்கம், ஒரே போராட்டம்" என்னும் கருத்து வன்மையுற்று வல்லமையால் அழித்துவிடுதல் என்னும் வெறித்தனம் தலையை விரித்தபோது, போக்கிடமற்று முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்த ஏதுமறியா அந்த யாழ்ப்பாணமல்லாத விடலைக் கனாக்கள்தான் பலிக்கடாவாகின. அழித்தவர்களும், கைவிட்டு தப்பித்தவர்களும் இதனை அறிவார்கள்.

மரணம் சூழ கோயில்களில், பாடசாலைகளில் தஞ்சமடைந்த வேளைகளில், உருக்கம், குசலம், உதவுதல் என்னும் மனிதப்பண்புகளை கைவிட்டு, "திருகோணமலையாரெல்லாம் இதுக்குள்ளேயா......" என எள்ளி இகழ்ந்து, இடங்கொடாது ஓரங்கட்டிய கதைகளை, நேசம்மிக்கோரிடம் அவர்கள் இன்றும் சொல்லி ஆறுதலடைகின்றனர். ஆனால் 'தமிழ்பேசும் மக்கள்'எனச்சூழும் சாவுஅரக்கனை எதிர்கொள்ளும் வீரியத்தை அவர்கள் என்றும் குறைக்கத் தயாரில்லை.

இங்கு ஒரு எதிர்மாறான மனோவியல்பையும் சுட்டவேண்டியுள்ளது. ஆனையிறவை மனஎல்லையாக கொண்ட யாழ்ப்பாணக்குடாநாடு, கூட்டுறவுச் சங்கஇயக்கத்தை இலங்கையிலேயே வெற்றிகரமான நடைமுறைப்படுத்தியது என்பதும், கூட்டுறவு இயக்கம் (CO-OP. MOUVEMENT) பல்வேறு துறைகளிலும் செயலூக்கம் கொண்டிருந்ததென்பதும் யாழ்ப்பாண மனோநிலைக்கு முரணாய் தெரிகின்றது. ஏனெனில் 'தான்', 'தனித்தன்', 'அந்நியமாய் இருத்தல்', 'உறவுகளை களைதல்', 'முடங்குதல்' எனும் போக்கே யாழ்ப்பாண சிறப்பு பண்புகளாகும். ஒரு ஏக்கரின் பதினாறில் ஒரு துண்டான ஒருபரப்புக் காணியில் தோட்டம் செய்தும், அந்த ஒரு பரப்பை நாலு,ஐந்து துண்டங்களாக்கி சீதனம் கொடுத்தும், வீடுகளையே துண்டங்களாக மதில்களால் பிரித்தும், வீட்டைச்சுற்றி தலை தெரியா வேலி அடைத்தும், முடிந்தால் வேலிக்கதிகாலை(1) மற்றவன் வளவுக்குள் நட்டும், வேலிக்குள்ளே ஓரிரு தென்னை, ஒரு கறிமுருங்கை, ஒரு மா, ஒரு கறிவேப்பிலை, கிணத்தடியில் ஒரு கமுகு, சில வாழை, ஒரு எலுமிச்சை.... எனத்தன் அன்றாடத்தேவைகளையெல்லாம் அதற்குள் பயிரிட்டும், அமைத்தும், அயலாரை அண்டாமலும், அண்டவிடாமலும், குறுகி வாழ்ந்து பவுசுகாட்டும் இந்த யாழ்ப்பாணத்தில் இருந்து தான் தமிழ் பேசும் மக்களுக்கான தலைமையும், ஆளுமையும் இன்றுவரை நீடிக்கின்றது என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். முழுமையான ஆய்வுக்குரியவை. அதிகாரம் சார்ந்த தாய் அரசியல் அமைவதனால் அது அவர்தம் இயல்பானதாயும், கெட்டித்தனமாயும் இருக்கலாம். ஆனால் இவை அழிவுக்கு கட்டிய பந்தயங்கள் என்பதை இன்னுந்தான் உணராதது வேதனையுடன் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை. ஒட்டும், உறவும், வலுப்பெற வேண்டிய வேளையில் துண்டிப்பை யதார்த்தமாக்க முனைந்துள்ளோம். கடல் கடந்து, தாயகம் துறந்து வாழும் நிலையிலும் எம் மனோபாவ மாற்றம் எதுவும் நிகழாவிட்டாலும், சாவை உதைத்தும், விதைத்தும் வாழும் அவர்கள் மத்தியில் மூக்கை துளைத்து உபத்திரவம் செய்யாமலாவது இருக்கலாம். மலையக மக்களின் முகங்களை கையுயர்த்தி அழித்த யாழ்ப்பாண மேலாண்மையும், வக்கரிப்பும், வடக்கையும், கிழக்கையும் துண்டித்துப் பார்க்கஆவல் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மனோபாவத்தின் பிதாமகர்களான லண்டன் டமில்ஸ்களின் பிரதிநிதிகள் ஆங்கிலத்தில் ஆராய்ந்து துண்டித்த வடக்குகிழக்கில் சவாரி செய்ய தயாராகி விட்டார்கள். நம் முதுகுகள் பற்றிய எச்சரிக்கை இப்போது எமக்குத் தேவை.

---

யாழ்ப்பாண முஸ்லீம்களுக்கு தனித்துவமான ஒருவரலாறுண்டு. போர்த்துக்கேயருக்கு எதிராகச் சிங்களமன்னர்கள் நடாத்திய போராட்டத்தில் அம் மன்னருக்கு ஆதரவு கொடுத்தமை போன்று, போர்த்துக்கேயருக்கு எதிராக தமிழ் மன்னர்கள் நடாத்திய போராட்டத்திலும் தமிழ் மன்னர்களுக்கு துணையாக நின்றவர்கள் முஸ்லீம் மக்கள். இவர்களின் வரலாற்றினை ஆராய்ச்சிபூர்வமாக மேற்கொள்ளுதல் பயன்தரும் முயற்சியாகும்.

- பேராசிரியர் சு.வித்தியானந்தன்
துணைவேந்தர் யாழ்-பல்கலைக்கழகம்
'யாழ்ப்பாண முஸ்லீம்களின் வரலாறும்-பண்பாடும்'

---


நன்றி

முன்அட்டை : THE POTTERY MAKER, Hopi Photograph by Roland Reed, 1915
பின்அட்டை : La croix du Sud
முன்உள்அட்டை : Mc CULLIN
பின்உள்அட்டை : François GUENET/GAMMA
மற்றும் உள்ளே இடம்பெற்ற பல்வேறு படங்கள்.

- பரதன் -


---

குஞ் சரம்

கேள்வி: நாங்கள் கலை–இலக்கியம் சம்பந்தமாக உங்களுடன். . . . .
நபர் : தம்பி! நீங்கள் இயக்கம் அது இது என்று. . ஒரு மாதிரி கலைச்சுப்போட்டியள். இப்ப ஏன் தம்பி சும்மா கிடக்கிற இலக்கியத்தை. . . கலைக்கப்போறியளோ!

– காகன் –

*'கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக நான் எழுதி வெளியிட்டிருப்பவற்றைப் பார்க்கும் பொழுது அவையெல்லாம் ஏதோ ஒரு வகையில் சமுதாயத் தொடர்பமைவு உள்ளனவாய் இருக்கக் காண்கின்றேன். திறனாய்வுத்துறையில் முக்கிய கவனஞ் செலுத்தத் தொடங்கிய காலமுதல் கலை இலக்கியம் முதலியவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியிலும் சமுதாயச் சூழலிலும் வைத்தே ஆராய்ந்து வந்திருக்கின்றேன். மார்க்சியத்தைத் தழுவிக் கொண்ட நாள்முதலாக அதன் முனைப்பான கூறுகளில் ஒன்றாகிய சமூகவியலை எனது பல்வேறு ஆய்வுகளுக்குப் பற்றுக்கோடாகக் கொண்டுவந் துள்ளேன். சமூகவியலில் உண்டாகிய ஈடுபாடே ஒப்பியல் ஆய்விற்கு என்னை இட்டுச் சென்றது. இவற்றின் பயனாக இலக்கியத்தை அறிவியல் அடிப்படையிலே அணுகக் கற்றுக்கொண்டேன்'.*

*"வர்த்தக நோக்கும், கலைப்பற்றின்மையும் சமூகத்தில் காணப்படுகின்றதாயினும் கலைக்கும், பணத்துக்குமுள்ள முரண்பாடு எல்லை கடந்து போய்விடவில்லை. முரண் பாட்டிற்கான அடிப்படை காரணங்களை அறியாமையா லேயே பலருக்கு நம்பிக்கையின்மையும், விரக்தியும் தோன்றுகின்றன. கலைக்கும் பணத்துக்குமுள்ள முரண் பாட்டின் இயல்பைக் கண்டறிந்து அதனை நீக்கும் வகை யில் உழைப்பதும் மீண்டும் கலைக்கும் சமுதாயத்திற்கும் பூரணமான இயைபை ஏற்படுத்துவதுமே கலைஞனின் இலட்சியமாக இருக்க வேண்டும்".*

**- பேராசிரியர் க.கைலாசபதி -**





